குண்டூசி
805
ன் 52 .... எட்டு அணா
அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை
டைரக்ஷன்
C.H.நாராயணமூர்த்தி.. M.K.R.நம்பியார்
ஸ்டுடியோ

பக்ஷிராஜாவின்
காஞ்சனை
இப்பொழுது சென்னை பிரபாத், வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும் மற்றும் தமிழ் நாடெங்கும் .....
திரள் திரளாகக் கண்டு களிக்கின்றனர்...

"என் சருமத்தை லக்ஸ்
டாய்லட் சோப்பினுல்தான்
பாதுகாத்துக்கொள்கிறேன்"
என்கிருர்
மங்களம்

இனிய மணத்துடன் கூடிய இந்த
வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள்
சருமத்தை வசீகரமாகச் செய்யும்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS, 328-50 TM.

பிரிய சகோதரிகளே!

134135

நான் ஒரு நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது, நானோ உங்களைப்போல் ஒரு குடித்தனப்பெண், எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக் வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது, வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது, வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது; இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஒரு சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி,

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR :: (G. M.) JULLUNDUR CITY.

குண்டூசி காலண்டர்கள்

இனாம்!

நீங்கள் இன்றே ஒரு சந்தாதாரராய்ச் சேருங்கள். உங்களுக்கு 12 அழகிய வர்ணப் படங்களுள்ள 1952—53 வருஷத்திய "குண்டூசி காலண்டர்" இனாமாகக் கிடைக்கும். ரிஜிஸ்டர் தபால் செலவிற்காக மட்டும் ஆறு அணா சேர்த்து, முன் பணம் அனுப்பவும். வி. பி. பி. கிடையாது.

உள்நாடு சந்தா ரூ. 6. வெளிநாடு சந்தா ரூ. 9.

இந்த இனாம் திட்டம் உள்நாட்டு நேயர்களுக்கு ஜூன் 15-ந் தேதி வரையிலும், வெளிநாட்டு நேயர்களுக்கு ஜூலை 1-ந் தேதி வரையிலும்தான் அமுலில் இருக்கும். இத் திட்டம் புதிய சந்தாதாரர்களுக்கு மட்டுமே உரியதாகும். ஏமாறாமலிருக்க இன்றே பணம் அனுப்பி விடுங்கள்.

உள்ளூர் ஏஜண்டுகளிடம் காலண்டர் கிடைக்கப் பெறாதவர்கள் எமக்கே நேராக ரூ. 1-6-0 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

"குண்டூசி" காரியாலயம், 26, கிடங்கு தெரு, சென்னை—1.



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1—15—0;

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும்; நியூ கோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (G. M.) Jullundur City.

இனாம்

ஸில்க் ஸூட்டிங்ஸ்

7 கஜம் × 27"

உங்கள் அனைவருக்கும் மாதம் ரூ. 200 முதல் ரூ. 300 வரை போனஸுடன்கூட, இனாமாக அளிக்கிறோம். எல்லாம் நீங்கள், எங்களுக்காக, சுற்று வட்டாரங்களில் செய்து கொடுக்கும் சிறு வேலைகளுக்காகத் தான். விபரங்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

LION FABRICS MILLS
LUDHIANA.

இப்பொழுது விற்பனையாகிறது!

உள்ளத்தை திருகி உணர்ச்சிக்கு முலாம் பூசும் ஒப்புயர்வற்ற கதைக் கரும்பு.

தமிழ் நாட்டின் மாப்பஸான்
"ஜெகசிற்பியன்"
எழுதிய

"காதலோ காதல்"

அழகிய மூவர்ண அட்டை
திரையப் பக்கங்கள்.

விலை 8 அணா

ஏஜண்டுகளுக்கு வி. பி. பி.யில் அனுப்பி வைக்கப்படும்.

விபரங்களுக்கு:

முல்லை நிலையம்
தி. நகர். :: சென்னை—17.

குண்டூசி

ஜூன், 1952.

இந்த ஊசியில்

ரஸிகரின் உரிமை *(தலையங்கம்)* 5
நாகய்யாவுக்கு இரட்டை மரியாதை! 6
சென்னை மேடையில் சென்ற மாதம் 8
இசைக் கலையும், திரைப் படமும் *(கட்டுரை)*... 10
"காஞ்சனா" *(பட விமர்சனம்)* ... 12
ஜி. சகுந்தலா *(மூவர்ணப் படம்)*... 13
எம். என். நம்பியார் *(ஆர்ட் படம்)* 14
ராஜகுரு நம்பியார் *(வாழ்க்கை வர்ணனை)* ... 15
நுனிப்புல்—*"வெட்டுக்கிளி"* ... 20
சென்னையில் சந்துலால் ஷா ... 24
என் தங்கை *(படக் காட்சிகள்)* ... 27
குண்டூசியைக் கேளுங்கள் ... 31
சென்னை மாகாணத்தில் சினிமாத் தணிக்கை ... 37
இது செய்தி 42
செய்திப் படங்கள் 47
பொதுஜனம் பேசுகிறார் 51
புஸ்தகப் பொழுது 56
பெற்ற மனம் *(சிறுகதை)* ... 59
"மாப்பிள்ளை" *(ஆர்ட் படம்)* ... 63
"என் தங்கை" *(ஆர்ட் படம்)* ... 64
பிரம்மலோகம் 73
குண்டூசி டைரி 76

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

பட்டை 5
ஊசி - 9
பிரதி - 57

ஜூன்
1952

ஆசிரியர்: பி.ஆர்.எஸ்.கோபால்

[illegible]

ரஸிகரின் உரிமை

சினிமா ரஸிகர்களை இரு வகையினராகப் பிரிக்கலாம். முதல் வகையினர் தமக்கு நேரமும், பணமும் உள்ள போது ஏதோ ஒரு படத்தைப் பார்த்து விட்டு வருபவர்கள். படம் மோசமாய் இருந்தாலும் சரி; தியேட்டரில் பல அசௌகரியங்கள் இருந்தாலும் சரி; இவர்கள் தமக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டு சும்மா இருந்து விடுவர்.

ஆனால் இரண்டாம் வகையினரோ அப்படியல்ல. எந்தெந்தப் படம் வரப் போகிறது; எந்தெந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்கு முன் கூட்டியே திட்டம் வகுத்துக் கொண்டு, அதற்கான நேரத்தையும், பணத்தையும் ஒதுக்கி வைத்துக் கொள்பவர்கள இவர்கள். படம் நன்ருக இல்லை யென்ருலும், தியேட்டர் வசதியில் குறையிருந்தாலும் இவர்கள் சும்மா இருந்துவிட மாட்டார்கள். பத்திரிகைகளுக்கு எழுதுவார்கள்; மேடையில் பேசிக் கண்டிப்பார்கள்.

நம் சினிமாத் தொழில் வளர்ச்சியில் அளவிலா அக்கரை உடையவர்கள் இந்த இரண்டாம் ரக ரஸிகர்கள். இவர்களுடைய நிரந்தரமான ஆதரவின் பேரிலேயே சினிமாத் தொழில் நடந்து வருகிறது என்று கூறுவது மிகையாகாது. லக்ஷக் கணக்கான இவர்களது குறைகள் பல வருஷ காலமாக லக்ஷியம் செய்யப் படாமலே இருந்து வருகிறது.

தனிப்பட்ட முறையில்—சிறிய அளவில்—செய்து வந்த இக்கிளர்ச்சி சமீப காலமாய் கூட்டு முயற்சியாக மாறி (சினிமா ரஸிகர்கள்) சங்கங்களாக உருப் பெற்று வருகின்றன. தாங்கள் அலக்ஷியம் செய்து வரும் சினிமா ரஸிகர்களது உள்ளக் கொதிப்பின் பிரதிபலிப்பே இச் சங்கங்கள் என்பதை நம் படாதிபதிகள் உணரவேண்டும்.

இவ்விதமாய் ஆரம்பிக்கப்பட்ட சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கம் புயல், மழை, பூகம்பம் எல்லாவற்றிற்கும் தப்பி, தன் நான்காவது ஆண்டு விழாவை சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடியது. இச் சங்கம் அசைக்க முடியாதபடி வேரூன்றி விட்டதற்காக சினிமா ரஸிகர்கள் சார்பாக நாம் மகிழ்ச்சி அடைந்து, ஆசி கூறுகிறோம்.

கலைஞர் ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்தினத்தைத் தலைவராகக் கொண்ட இந்த சங்கம் சென்ற நான்கு ஆண்டுகளில் அரிய சேவைகளைச் செய்திருக்கிறது. சமீப காலமாய், சினிமா ரஸிகர்கள் சம்பந்தமான விஷயங்களில் சென்னை சர்க்கார் இவர்களிடம் யோசனை கேட்டு வருவது பாராட்டத் தக்கது.

தமிழ் நாட்டின் ஒவ்வொரு நகரத்திலும் சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்திற்கு கிளைச் சங்கங்கள் ஏற்பட வேண்டியது அவசியம். சினிமா ரஸிகர்கள் இனியும் ஊமைகளாக இருக்க முடியாது. இவ்வித சங்கங்களில் ஒவ்வொருவரும் அங்கத்தினராய் சேர்ந்து, சினிமாத் தொழிலை சரியான வழியில் அமைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவர்களது உரிமையும் கடமையும் ஆகும்.

நாகய்யாவுக்கு இரட்டை மரியாதை

"சிறந்த தமிழ் தெலுங்கு நடிகர் அவரே"

சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் கோலாகல ஆண்டு விழா

சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர் சென்ற மாதம் 18ம் தேதி, தங்களது மூன்றுவது—நான்காவது ஆண்டு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். மெமோரியல் ஹாலில், சென்னை தணிக்கை போர்டு தலைவர் கே. ஸ்ரீநிவாஸன் தலைமையில், குமாரி ராஜத்தின் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பமாயிற்று இந்த விழா. காரியதரிசி இ. பி. சாமுவேல் கடந்த வருஷத்திய அறிக்கையை வாசித்தார்.

தலைவர் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன் பேசுகையில், "சினிமாக் கலையின் அபிவிருத்தியில் சிரத்தை கொண்ட அனைவரும் இந்த சங்கத்திற்கு ஆதரவு காட்ட வேண்டியது அவசியம். சினிமாப் படங்களின் தரம் உயர, பொது ஜன அபிப்பிராயம் படத் தயாரிப்பாளர்களின் காதுகளில் விழ வேண்டியது அவசியம்" என்று பொருள்படப் பேசினார். இந்தச் சங்கத்தினர் நடத்திய படத் தேர்தலில் வெற்றி பெற்ற படங்களின் தயாரிப்பாளர்களுக்கும், நக்ஷத்திரங்களுக்கும் பரிசளிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். பரிசுகளை உதவி மேயர் அகல்யா சந்தானம் வழங்கினார். சிறந்த தமிழ்—தெலுங்கு நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வி. நாகய்யா இரண்டு வெள்ளிப் பதுமைகளைப் பெற்றார். சிறந்த தெலுங்கு நடிகையெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பானுமதிக்கான பரிசை அவரது மகன் பரணி பெற்றுக் கொண்டான். சிறந்த தமிழ் நடிகை மாதுரி தேவிக்கான பரிசைப் பெற அவர் வரவில்லை. (இந்தப் பரிசு நமது பத்திரிகையின் செலவில் அளிக்கப் பட்டது). மற்றபடி "ஏழை படும் பாடு", "சம்சாரம்" (தெலுங்கு) படத் தயாரிப்பாளர்களின் பிரதிநிதிகள் வந்து பரிசைப் பெற்றுக் கொண்டனர்.



சென்னைப் பிரதேச தணிக்கை அதிகாரி கே. ஸ்ரீநிவாஸன் தலைமை வகித்துப் பேசுகிறார். அவருக்கு இடதுபுறம் உட்கார்ந்திருப்பவர் பரிசுகளை விநியோகித்த அகல்யா சந்தானம்.

தமக்குக் கிடைத்த இரு பரிசுப் பதுமைகளுடன் வி. நாகய்யா காட்சி அளிக்கிறார்.

1950ம் வருஷத்திய

சிறந்த தமிழ்ப் படம் :
"ஏழை படும் பாடு"

●

சிறந்த தெலுங்குப் படம் :
"சம்சாரம்"

●

சிறந்த தமிழ் நடிகர் :
வி. நாகய்யா

சிறந்த தெலுங்கு நடிகர் :
வி. நாகய்யா

சிறந்த தமிழ் நடிகை :
மாதுரி தேவி

சிறந்த தெலுங்கு நடிகை :
பி. பானுமதி

நாகய்யா பரிசுகளைப்பெற்றுக்கொண்டு வந்தனம் தெரிவிக்கையில், சினிமாத் தொழிலில் சர்க்கார் சிரத்தை கொள்ள வேண்டும் என்று கூறினார். அவர் மேலும் பேசுகையில், காம உணர்ச்சிகளை எழுப்பும் கட்டங்கள் இருந்தால் தான் படம் வெற்றி பெறும் என்று கூறுவது தவறு என்றும், இவையில்லாத நல்ல படங்களும் வெற்றி பெறும் என்று தெரிவித்தார்.

கடைசியில், குமாரி ராஜம் பதம் பாட தஞ்சை சகோதரிகளின் நடனக் கச்சேரி நடைபெற்றது.

பிறகு வந்தனோபசாரத்துடன் விழா இனிது முடிந்தது.

விழாவில் நடனம் ஆடிய விசா, ரேகா.

சென்னை மேடையில் சென்ற மாதம்

சென்ற மாதம் சென்னையில் நான்கு சமூக நாடகங்கள் நடைபெற்றன. ௨-ம் தேதி வி. பி. ஹாலில், "அழகு ராணி" என்ற நாடகமும் 10, 11-ம் தேதி இரு தினங்களில் "என் கதை" என்ற நாடகம் ரஸிக ரஞ்சனி சபாவிலும், 11-ம் தேதி வி. பி. ஹாலில் "வைராக்கியம்" என்ற நாடகமும், 18-ம் தேதி "நல்லவள்" என்ற நாடகமும் நடைபெற்றன. மேற்படி நாடகாசிரியர்களில் "என் கதை"யின் ஆசிரியர் எஸ். டி. சுந்தரம் நாடக ரஸிகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமானவர். "வைராக்கிய"த்தின் ஆசிரியர் "வஸந்தன்" நாடக உலகுக்குப் புதியவரென்றாலும், சிறு கதை உலகில் பிரபலமானவர். "நல்லவள்" ஆசிரியர் பி. ஆர். மணவாளன் இத்துறைக்கு முற்றிலும் புதியவர்.

"வைராக்கியம்" நாடகத்தில் முத்துக குமாருவாக எஸ். ராஜனும், மனோரமாவாக செல்லம் ஸ்ரீநிவாஸனும் நடித்தார்கள்.

"என் கதை"யின் கதை புதுமையான கருத்துக்கள் கொண்டதுதான். ஆனால், சற்றுக் குழப்பமானது. சில கதாபாத்திரங்களும், சம்பவங்களும் குறிப்பிட்ட சிலரை மனதில் கொண்டு அவர்களுக்காக சிருஷ்டிக்கப் பட்டவை போல் தெரிகின்றன. உதாரணமாக, கதாசிரியரான எஸ். டி. சுந்தரம் நடித்த பிரஸிடெண்ட் பாகம் அப்படித்தான் பட்டது எனக்கு.

சினிமா நடிகராகிவிட்ட மனோஹர், அன்று திறம்பட நடித்தார். அவரைவிட கலைவாணனும் நடித்த எம். என். கண்ணப்பா, நம்பிராஜன் இருவரும் நன்றாக நடித்தார்கள். எம். என். கண்ணப்பாவின் நடிப்பை அன்று பார்த்த எனக்கு, இவ்வளவு நன்றாக நடித்தவர் திரையில் சோபிக்காதது, சம்பந்தப்பட்டவர்கள் அவரை சரியானபடி பயன்படுத்தக் கொள்ளாததால்தான் என்று எனக்குத் தோன்றியது. தவிர எஸ். டி. சுந்தரம் நாடகம் எழுதுவதுடன் நிறுத்திக் கொள்வது நலம் என்றே நான் அபிப்பிராயப் படுகிறேன்.

நடிகைகளில் சேகரின் தாயாக நடித்த டி. கே. பட்டம்மாளின் நடிப்பு பிரமாதமாய் இருந்தது. இவ்வளவு சிறப்பாக நடிக்கக் கூடிய நடிகைக்கு கனிமொழி பாகத்தையோ, அல்லது சாந்தி பாத்திரத்தையோ கொடுத்திருந்தால் நாடகம் மேலும் சோபித்திருக்கக்கூடும். மற்றபடி கனிமொழியாக நடித்த ஜி. சகுந்தலாவின் நடிப்பு சுமார்தான். சாந்தியாக நடித்த ரத்னமாலாவின் நடிப்பைவிட பாட்டுகள் வெகுவாக ரஸிக்கக் கூடியனவாய் இருந்தன.

“வஸந்தன்” தமது “வைராக்கியம்” நாவலை நாடகமாக ஆக்கியிருக்கிறார். இது அவரது முதல் முயற்சி என்ற அளவில் வேண்டுமானால் வெற்றி என்று கூறலாம். ஆனால், பூரண வெற்றி என்று கூற முடியாது. நாடகத்தை அருணா டிரமாடிஸ்ட்ஸார் திறமையாக நடித்தார்கள். கதாசிரியருக்கு ஒரு வெள்ளிக் கோப்பையைப் பரிசு அளித்தார்கள். அவர் அதை ஏலம் போட்டு கிடைத்த தொகையை சங்கத்திற்கே நன்கொடையாக அளித்து விட்டார்.

சுகுமார் கலா மந்திர் அங்கத்தினர்கள் “நல்லவள்” நாடகத்தை நன்றாகவே நடித்தார்கள். கட்சிப் பிரசாரமோ, அரசியலைத் தாக்கும் முறையிலோ நாடகத்தைக் கொண்டு போகாமல் சீர்திருத்தம் ஒன்றையே மனதில் கொண்டு நாடகத்தை எழுதியிருந்த ஆசிரியர் பி. ஆர். மணவாளன் பாராட்டுதலுக்கு உரியவர்.

இவைகள் தவிர, 17-ம் தேதியன்று சென்னை ரஸிக ரஞ்சனி ஸபாவில் நல்ல ஒரு நாடகம் நற்காரியம் ஒன்றுக்கு உதவ நடைபெற்றது. நடிகர் நாகய்யா தீவிரமாக முனைந்து நின்று, “ஜீவபூமி” என்ற நாடகத்தை ஏற்பாடு செய்து ராயலசீமை பஞ்ச நிவாரண நிதிக்கு இரண்டாயிரத்துக்கும் அதிகமாக பணம் சேர்த்து அளித்தார். “ஜீவ பூமி” என்ற இந்த சரித்திர நாடகம் திரை வசன கர்த்தா “சாண்டில்யன்” எழுதியது. நாடகத்தின் சுவையும் விறுவிறுப்பும் குன்றாது திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் நடித்தார்கள்.

“என் கதை”யில் நடித்த கண்ணப்பன்.

அன்று தலைமை வகித்து, நிதியை ஏற்றுக்கொண்ட சென்னை கவர்னர், நாடகாசிரியரையும், நடிகர்களையும், நிதி திரட்ட முன் நின்று பாடுபட்ட நடிகர் நாகய்யாவையும் பாராட்டிப் பேசினார். நாகய்யா, ஆந்திரர்களுக்கு உதவ தமிழர்கள் முன் வந்ததற்குத் தமது மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டார். ஜெமினி விளம்பர ஆதிகாரி, வி. கே. என். சாரி, அனைவருக்கும் வந்தனம் தெரிவித்து நிதியை கவர்னரிடம் அளித்தார்.

“உயிரோவியம்” நாடகத்தில் மங்களமாக நடித்த ஆர். கே. பட்டம்மாள்.

அமெச்சூர் நாடகக் குழப்பம்

திருவல்லிக்கேணி சக்தி விலாஸ நாடக சபாவினர் ‘ஜீவர’வின் “உயிரோவியம்” நாடகத்தை சென்ற மாதம் 26ம் தேதியன்று வி. பி. ஹாலில் நடித்தனர். மைக்ராபோன் ஆரம்பத்திலிருந்தே தகராறு செய்யவே இந்த நாடகம் குழப்பமாய் முடிந்தது. கதாநாயகனாகத் தோன்றிய தேவநாதனுக்கு நல்ல முகத் தோற்றமிருந்தது. கூடிய வரை நன்றாய் நடித்துப் பாடினார் மற்றும் டி. வி. பத்மாவதி, ஆர். கே. பட்டம்மாள் ஆகியோரும் நன்கு நடித்தனர். ஆனால் இதெல்லாம் குழப்பத்தில் அடிபட்டுப் போயின. பின்னணி வாத்தியக்காரர்கள் மட்டும் குழப்பத்தை லக்ஷியம் செய்யாமல் பிரபல ஹிந்திப் பட மெட்டுகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தனர்.

இசைக்கலையும் திரைப்படமும்

கே. பார்த்தசாரதி

இசைக் கலை நம் நாட்டில் இன்றியமையாத ஒரு அரும் பெரும் கலையாகி விட்டது. இன்பத்திலே இசை; இன்னலிலே இசை; தாலாட்டிலே இசை; மணப் பந்தலிலே இசை. இப்படி இசை எங்கு பார்த்தாலும் கேட்கப்பட்டு வருகிறதை தினம் தினம் காண்கிறோம். ஏனென்றால் அது கேட்போர் மனதை நெகிழ வைக்கும் தன்மை யுடையது. ஆதலால்தான். முற்காலத்திய தமிழ்ப் பாணர்கள் பிரிந்த தலைவனையும் தலைவியையும் ஒன்று சேர்க்கும் பணியில் இசையைக் கையாண்டார்கள். கொடிய நாகம் கூட இசையைக் கேட்டு மெய் மறந்து ஆடுகிறதல்லவா!

இப்படிக் கலை உலகிலே முதன்மை ஸ்தானம் வகிக்கக் கூடிய இசைக் கலை திரைப் படங்களில் எவ்வாறு பயன்படுத்தப் படுகிறது என்று ஆராய்ந்தால் வருத்தமும் ஏமாற்றமும் நமக்குப் பெருத்த அளவில் உண்டாகின்றன. இவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ள கலை திரைப் படங்களில் இப்படிப் பாழ் படுத்தப்பட்டு வருவதை நினைக்கும் போது, உண்மையாகவே துக்கம்தான் மேலிடுகிறது. இப்போது வெளி வரும் தென்னாட்டுப் படங்களில அநேகமாக கர்நாடக சங்கீதம் பாடப் படுவது மிகவும் அபூர்வமாகிவிட்டது. ஏதாவதொரு ஹிந்திப் படத்தில் மனதை வெகு சுலபமாக கவரக்கூடிய ஒரு மெட்டில் ஒரு பாட்டு வெளிவந்து விட்டால் போதும்; அவ்வளவுதான்! இங்கு அடுத்து வெளிவருகிற தெலுங்கு, தமிழ், மலையாளப் படங்களில் முறையே ஒவ்வொருவரும் அதே மெட்டுக்களில் தம் தம் மொழிகளில் பாடச் செய்து நம் காதுகளைத் துளைத்து விடுகின்றனர். இம் முறை மிக வெறுக்கத் தக்கது; வெட்கப் படவும் தக்கது.

சங்கீதத்தை ரஸிக்கக் கூடியவர்களின் தொகை அதிகரித்து விட்டதே தவிர, உயர்ந்த சங்கீதத்தை விரும்பக் கூடியவர்கள் இதில் மிகக் குறைவுதான். கொஞ்சம் கூட சிரமமில்லாமல் பாடக் கூடிய பாட்டுக்களையும், உணர்ச்சியற்ற, ஜீவனற்ற, விறுவிறுப்பில்லாத, அர்த்தமற்ற சாஹித்தியங்களையும் தான் நம் திரைப்படங்களில் அடிக்கடி கேட்டு வருகிறோம். 'ஹோ!...ஹோ!', 'ஓய்...!', 'ஐய்...!', போன்ற கீழ்த்தரமான அர்த்தமற்ற அருவருப்புத் தரக்கூடிய சப்தங்கள் பாட்டு என்ற பெயரில் பதிவாகி வெளியில் பாடவும் வந்து விடுகின்றன. இவை நம் கர்நாடக சங்கீதத்திற்கு எவ்விதத்திலும் இணையானவை அல்ல. மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள நமது இசைக் கலையை நம்மிடம் வைத்துக் கொண்டு வேற்று சங்கீதத்தைக் கையாளுவது மிகவும் வருந்தத் தக்க விஷயம். இம் முறை வர வர அதிகமாகிக் கொண்டே போகிறது. கர்நாடக சங்கீதம் திரைப் பட உலகிலிருந்து மறைந்தே விடும் போலிருக்கிறது.

கர்நாடக சங்கீதத்தில் விற்பன்னர்கள் இருந்தும் அவர்கள் பட முதலாளிகளாலும், சங்கீத டைரெக்டர்களாலும் தங்கள் திறமையைக் காட்ட அனுமதிக்கப் படுவதில்லை. ஹிந்தி மெட்டுக்களையோ அல்லது ஹிந்தி மெட்டுக்களைப் போன்ற மெட்டுக்களையோ பாடும்படி வற்புறுத்துகின்றனர். காரணம், இப்பாட்டுக்கள் வெகு சீக்கிரத்தில் சங்கீதத்தில் குறைந்த ஞானம் படைத்தவர்களின் மனதை சுலபமாகக் கவர்ந்து விடுகின்றன. இந்தப் பாட்டுக்களில் குரலின் ஒலியைக் காட்டிலும் தாளத்தின் ஓசைதான் அதிகமாக இருக்கிறது. ஆகவே தான் இப் பாட்டுக்களின் மூலம் படம் பிரபல்யமாகி முதலாளிகளுக்கு நல்ல வசூலும் கிடைத்து விடுகிறது. ஆதலால் பட முதலாளிகளுக்கும் சங்கீத டைரெக்டர்களுக்கும் சங்கீதத்தைப் பற்றிய கவலையே இல்லை. எப்படியாவது பண வசூல் அதிகமாக ஏற்பட வேண்

டும் என்ற ஒரே எண்ணம் தான் அவர்களுக்கு இருந்து வருகிறது. இந்நிலை முற்றிலும் மாறவேண்டும்.

திரைப் படங்களில் இசைக் கலை உயர வேண்டுமானால் சங்கீத டைரெக்டர்கள் சற்று முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். கீழ்த்தரமான சிற்றின்ப உணர்ச்சிகளைத் தூண்டி விடக் கூடிய மெட்டுக்களில் பாடகர்களைப் பாடச் செய்யக் கூடாது. பாட்டுக்களை நல்ல சங்கீத ஞானம்உள்ள சாஹித்தியகர்த்தாக்களைக் கொண்டு இயற்ற வேண்டும். படங்களில் எந்தெந்த இடங்களில் பாட்டைப் புகுத்தலாமோ அந்தந்த இடங்களில் தான் புகுத்த வேண்டும். அனாவசியமான கட்டங்களில் திணிக்கக் கூடாது. உயர்ந்த சங்கீதத்தை வளர்க்கக் கூடிய சங்கீத டைரக்டர்களும் இல்லாமலில்லை. அவர்கள் இசைக் கலையை மேன்மேலும் உயர்த்த நாம் அவர்களை வாழ்த்தத்தான் வேண்டும். அவர்களும், ஜனங்களுக்கு கர்நாடக சங்கீதத்தில் அபிமானம் ஏற்படும்படி, நல்ல உயர்ந்த முறையில் அதைக் கையாள வேண்டும்.

தமிழ் இசைக் கலையின் தன்மையையும் மேன்மையையும் உயர்ந்தவை என்று எந்நாட்டவரும் ஒப்புக் கொள்கிறார்கள். இது அலாதியானது. உள்ளத்தைக் கட்டுப் படுத்திப் பரவசத்தில் ஆழ்த்தக் கூடியது. வெற்று நாட்டு சங்கீதம் இதற்கு முற்றிலும் வேறுபாடானது. உதாரணமாக, ஐரோப்பிய சங்கீதம் சிற்றின்பத்தை ஊட்டுவதும் காதுக்கு இனிமையாக இருப்பதையும் தவிர வேறெந்த நோக்கமும் கொண்டதல்ல. உள்ளத்தை உணர்வு படுத்தும் தன்மை அதற்கு இல்லை.

நமக்கு நாதத்திலே பேதமில்லை. இருந்தாலும் நமக்கு நம நாட்டு சங்கீதம் தான் உகந்தது. வெற்று நாட்டார், நம சங்கீதத்தின் மேல் பொறாமை கொள்ளும் அளவிற்கு நாம் சங்கீதக் கலையில் உயர்ந்திருக்கும் போது ஏன் மற்ற சங்கீதங்களை உபயோகிக்க வேண்டும்? ஆகவே, இனியாவது வேற்று சங்கிதங்களில் மோகம் கொண்டிருக்கும் பட முதலாளிகளும் சங்கீத டைரெக்டர்களும் பணத்தைக் கருதாமல் சங்கீதக் கலை வளர்ச்சிக்காகப் பாடுபடுவார்களானால் அச் செயல் பெரிதும் வரவேற்கத் தக்கது.

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்; சுராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு, மதராஸ்—5. கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜண்டு: B. பாலை பட்டாணி (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) கோயமுத்தூர்.

இப்பொழுது தமிழ்நாடெங்கும் வெற்றிகரமாக ஓடுகிறது

ஸ்ரீ வள்ளி

புரொடக்ஷன்ஸாரின்

வேலைக்காரன்

(தமிழ்)

நடிகர்கள்:

டி. ஆர். மஹாலிங்கம்
எஸ். வரலக்ஷ்மி
டி. எஸ். பாலையா
மாதுரி தேவி
வி. கே. ராமஸ்வாமி
சுப்பய்யா
மற்றும் அநேகர் நடித்தது.

டைரெக்ஷன்:
P. V. கிருஷ்ணன்.

ஸ்டுடியோ:
A. V. M.
ஸ்டுடியோ.

எம். எஸ். பிக்சர்ஸ் வெளியிடான "சின்ன துரை" தமிழ்ப் படத்தில்



எம். என் நம்பியார்

ராஜகுரு நம்பியார்

ஒருவரை "உன்னத நடிகரா இல்லையா!" என்று கண்டு பிடிப்பதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? அவர் நடித்த படத்தையோ, நடிக்கும் நாடகத்தையோ பார்த்து விட்டுத் தீர்மானிப்பீர்கள். ஆனல், நீங்கள் செய்யும் தீர்மானம் ஓரளவு தான் சரியானதாய் இருக்க முடியும். அது நூற்றுக்கு நூறு சரியானதாய் இருக்க வேண்டுமானல், நீங்கள் சம்பந்தப் பட்டவரின் வாழ்க்கைச் சம்பவங்களையும், குணுதிசயங்களையும் கூட நன்கு அலசிப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

உதாரணமாக, ஒரு அசல் போலீஸ் இன்ஸ்பெக்டரே ஒரு நாடகத்தில் இன்ஸ்பெக்டராக நடிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நடிப்பு தத்ரூபமாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனல், இதில் ஆச்சரியப் படுவதற்கோ பாராட்டுவதற்கோ என்ன இருக்கிறது? போலீஸ் ஸ்டேஷனுக்குப் பதில் அவர் நாடக மேடையில் தம் 'டியூட்டி'யைச் செய்திருக்கி

ரர்! அவ்வளவுதானே ? இதற்கு மாருக, ஒரு சாதாரண நபர் இன்ஸ்பெக்டரின் வேஷத்தை ஏற்றுக்கொண்டு, சாக்ஷாத் இன்ஸ்பெக்டர் போலவே நடிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த நபரை நாம் எவ்வளவு போற்றினுலும் தகும். அவருடையதையே நாம் சிறந்த நடிப்பு என்று கூறவேண்டும். இல்லாததைக் கற்பனை செய்து, பாவித்து, தத்ரூபமாய் நடித்துக் காட்டப் படுவதே உன்னத நடிப்பாகும். நடிகரின் சொந்த குணத்திற்கும், பாத்திரத்தின் தன்மைக்கும் எவ்வளவுக்கு அதிகமான வித்தியாசம் இருக்கின்றதோ அவ்வளவுக்கு அவரது நடிப்பை உயர்ந்ததாகக் கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்ட ஆதர்சத்துடன் நாம் பார்ப்போமானுல், 'ராஜகுரு' (எம். என்.) நம்பியாரை ஒரு மஹோன்னத நடிகர் என்றே கருத வேண்டியிருக்கிறது. நாடகத்திலும், சினிமாவிலும் அவர் அமோகமான பெயர் பெற்றிருப்பது 'ராஜகுரு' வேஷத்தில்தான். அடேயப்பா! என்ன கொடூரமான பார்வை! என்ன கடூரமான பேச்சு! எவ்வளவு வெறுக்கத்தக்க அட்டூழியங்கள்! இதையெல்லாம் பார்த்தவர்கள் நம்பியாரிடம், அவரது நடிப்பில் நாலில் ஒரு பங்காவது அசல் குணமாக இருக்கும் என்றுதான் நினைப்பார்கள். அப்படி நினைப்பது எவ்வளவு பெரும் தவருக முடியும் தெரியுமா! சாந்தி நிலவும் ஒரு இல்லத்தில், சாந்தமே உருப் பெற்றது போன்ற மனைவியுடனும் குழந்தைகளுடனும், சந்தோஷமும் அமைதியும் நிரம்பிய வாழ்க்கை நடத்தும் சாது நம்பியார் எங்கே? அந்த சினிமா, நாடக ராஜ

திகம்பர சாமியார்


கஞ்சன்

குரு எங்கே? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்! 'நம்பியார் ஒரு உன்னத நடிகரா; மஹோன்னத நடிகரா' என்பது போன்ற சர்ச்சையில் இன்று நாம் ஈடுபடுகிறோம். ஆனால் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னரோ நம்பியார், 'உண்மையிலேயே நாம் ஒரு நடிகன் தானா? நமக்கு நடிக்க வராவிட்டாலும், சேர்ந்தாற்போல் நான்கு வார்த்தைகளைப் பேசவாவது வருமா?'' என்ற சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார்! கடைசியில், தமக்கு இத்தொழில் லாயக்கானதல்ல என்று தீர்மானித்துக் கொண்டு நடிப்புத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிடவும் அவர் முயற்சித்திருக்கிறார்!



நம்பியார் நாடகங்களில் அளவுக்கு மீறிய ஆசை கொண்டதின் விளைவாகவே அத்தொழிலில் ஈடுபட்டார் என்று கூறுவதற்கில்லை. 'குடும்பத்தில் அச்சமயம் நிலவியிருந்த ஏழ்மை நிலைமை அவரை நாடகத் தொழிலுக்குள் பிடித்துத் தள்ளி விட்டது என்று' கூறுவதே பொருத்தமாயிருக்கும்.

மலையாளம் ஜில்லா, சிரக்கல் தாலூக்காவிலுள்ள பெருவமூர் என்ற கிராமமே நம் நம்பியாரின் சொந்த

ஊர் அவரது தகப்பனார் கேளு நம்பியார் சிரக்கல் தம்பிரானிடம் ஸ்டோர் கீப்பராகவும், சர்வே இலாகாவில் ஒரு சாதாரண ஊழியராகவும், மற்றும் பல வேலைகளையும் கொஞ்ச கொஞ்ச காலமாய் பார்த்து வந்தார். சம்பளம் சொற்பமே யாதலால் குடும்பம் தத்தளிப்புடனேயே நடந்து வந்தது இந்த நிலையில், நம்பியாருக்கு எட்டு வயதான போது அவரது தகப்பனார் காலமானார். அந்த சமயத்தில் நம்பியாரின் தமக்கை புருஷன் உதகமண்டலத்தில் ஒரு டீ கிளப்பை நடத்திவந்தார். நம்பியாரும்

அவரது தமையனும் இவரது பராமரிப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நம்பியார் அங்குள்ள முனிசிபல் ஹைஸ்கூலில் ஐந்தாவது வகுப்பில் சேர்ந்து படிக்கலானார்.

அவரது தமையனுக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை யென்றாலும் நம்பியார் துடியாய் படித்து வந்தார். அப்படியும் இப்படியுமாக, நான்கு வருஷங்கள் கழிந்தன; நம்பியாரும் மூன்றாவது பாரத்தை அடைந்து விட்டார்.

நம்பியாரின் தமக்கை புருஷர் நடத்திவந்த டீ கிளப்பில் வர வர வியாபாரம் குறைந்து போய் விட்டது. அதிலிருந்து கிடைத்து வந்த வருமானம் குடும்பச் செலவுக்குப் போதவே யில்லை. தம்

மர்மயோகி

விஜய குமாரி

கஷ்டங்களை அவர் ஒரு நாள் தம் நண்பரான ஒரு முஸ்லீமிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அந்த முஸ்லீம், ஒரு நாடகக் கொட்டகை முதலாளி. அவருடைய கொட்டகையில் தான் அந்த சமயம் பிரபல நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியார் நாடகங்களை நடத்தி வந்தனர். ம் நண்பரின் குறைகளைப் பூராவாகக் கேட்டுத் தெரிந்து கொண்ட பின், அவர் கூறினார்: "உங்கள் மைத்துனனைப் பேசாமல் நாடகத்தில் சேர்த்துவிடுங்கள். பையன் அழகாயிருப்பதால் அவர்கள் நிச்சயம் சேர்த்துக் கொள்ளுவார்கள்" என்று.

தேவகி

அவர் சொன்ன மொழிகள் பலித்து விட்டன. நம்பியார் சுலபமாகவே, அந்த முஸ்லீமின் சிபார்சுடன், நவாப் கம்பெனியில் (1934ல்) சேர்ந்து விட்டார். அவர் கம்பெனியில் சேர்ந்த

([illegible] பக்கத்தில்)

பொது இன்பங்கள்

நம் நாட்டில் நடுத்தரக் குடும்பத்தாருக்கு ஓய்வு நேரத்தில் முக்கியமான மகிழ்ச்சிகரமான பொழுதுப் போக்கு ஸினிமாதான். ஸினிமா குடும்பத்தில் எல்லோராலும் சக்திக்குத்தகுந்த செலவில் ரஸிக்கக் கூடினது.

இன்னும், எல்லோராலும் ஓய்வு நேரங்களில் குறைந்த செலவில், ரஸித்து, மகிழ்ந்து அனுபவிக்கக் கூடினது ஒன்று உண்டு. அதுதான் ஒரு கப் சூடான 'டீ'. அது உற்சாகத்தையும் புத்துயிரையும் கொடுக்கிறது.

டீ

உங்களுக்கு அதிக இன்பத்தை கொடுக்கிறது

ஸென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

'தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை; தாங்கள் இந்தக் கலையையே கரைத்துக் குடித்துக் கரை கண்டவர்கள்'—இப்படி யெல்லாம் தங்களைப் பற்றி மிகையாக எண்ணிக்கொள்கிறவர்கள் எல்லாக் கலைத் துறையிலுமே ரொம்பப் பேர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை படத் துறையில்தான் அதிகம். இவர்கள் அத்துடன் நின்று விட்டால் பரவாயில்லையே; தங்களைத் தவிர மற்றவர்களை யெல்லாம் 'ஒன்றும் தெரியாதவர்கள்' என்று இந்த பிரகஸ்பதிகள் முடிவுகட்டும்போதும், அபிப்பிராயம் வெளியிடும் போதும்தான் நமக்கு என்னவோ போலிருக்கிறது. உண்மையில், பார்க்கப் போனால், இந்த ஆசாமிகள் விஷய சூன்யங்கள். இந்த மாதிரி 'போலி'களை யாராவது ஒருவர் மட்டம் தட்டித் தலை குனிய வைத்தார் என்றால் அது மகிழ்ச்சிக்குரிய விஷயம் தானே? அத்துடன் அவர்களை மட்டம் தட்டிய வீரரைப் பாராட்டவும் நமக்குத் தோன்றுகிறதல்லவா?

• •

இந்த மாதிரியான மட்டம் தட்டும் 'புனிதமான கைங்கரியம்' ஒன்று ஏப்ரல் மாத இறுதியில் சென்னையின் பிரபல ஸ்டுடியோ ஒன்றில் நடந்தது. தகுந்த இடத்தில்தான் நடைபெற்றிருக்கிறது! அந்த ஸ்டுடியோவில் உள்ள அநேகர் மேலே நான் சொன்ன குணாதிசயங்களைப் படைத்த பிரகஸ்பதிகள்தாம். 'தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்ற கதையாக, அவர்களை மடக்க ஆளில்லாமற் போகவே, படத் துறையிலுள்ள பலதரப்பட்டவர்களைப் பற்றியும் குறை கூறியே காலம் தள்ளி வந்தார்கள்—வருகிறார்கள். ஆனால், அவர்கள் கொட்டத்தை, அவர்களது எஜமானர் முன்னிலையிலே அடக்கி மட்டம் தட்டிய நல்ல பணியைச் செய்த கோவை வாசியான ஸ்டுடியோ முதலாளி-பட டைரெக்டரைப் பாராட்டத்தான் வேண்டும்.

சௌந்தர்யா பிக்சர்ஸ் தயாரித்துவரும் "பாச வலை" தமிழ்ப் படத்தில் இப் புது முகம் குமாரி டி. ஆர். சாரதா நடிக்கிறார்

• •

இந்தக் "கோவை வீரர்" பட உலகிலே யாருக்கும் எதற்கும் அஞ்சாத ஒரு புள்ளி. இவர் சமீபத்தில், தம் டைரெக்ஷனில், தாமே தயாரித்த ஒரு சமூகப் படத்தை விநியோகிக்கும் பொறுப்பை சென்னை பிரபல ஸ்டுடியோ முதலாளியிடம் ஒப்படைத்தார். இந்தப் படம் பத்திரிகைகளால் புகழப்பட்டது; பொது மக்களின் பாராட்டுதல்களுக்கும் பாத்திரமாகி வருகிறது. கோவை டைரெக்டர், தமது படத்

அசோகா பிக்சர்ஸ் வெளியிட்டான "என் தங்கை" தமிழ்ப் படத்தில் நரசிம்ம பாரதியும், மாதுரி தேவியும் பிரதம பாகங்களில் தோன்றி கன குஷியாக நடிக்கின்றனர்.

தைத் திரையிடும் முன்னர், ஏப்ரல் மாத இறுதியில் ஸ்டுடியோ அதிபருக்கு ஸ்டுடியோவிலுள்ள சிறு தியேட்டரில் போட்டுக் காட்டினர். ஸ்டுடியோ அதிபரையே சதா சர்வ காலமும் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் ஒரு கோஷ்டி—இதில் கதாசிரியர்கள், டைரெக்டர்கள், பொறுப்பான பதவியற்ற புள்ளிகள் அடக்கம்—சும்மாயிருக்குமா? விடாமல் அந்தக் கோஷ்டியினரும் படத்தைப் பார்த்தார்கள்; அடிக்கடி சப்புக் கொட்டினர்கள்.

• • •

படம் திரையிடப்பட்டு முடிந்ததும், கோவை டைரெக்டர், தமது படத்தைப் பற்றி ஸ்டுடியோ முதலாளியிடம் அபிப்பிராயம் கேட்டுக் கொண்டிருந்தார். அவரோ பட்டும் படாமலும் நாஸூக்காக ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். "ஏதோ இரண்டு பெரிய தலைகள் பேசிக் கொள்கின்றன. அதில் போய் நாம் தலையிடுவானேன்" என்று இக் கோஷ்டி பேசாமல் இருந்திருக்கலாம். அதை விட்டு, மூந்திரிக் கொட்டையைப் போல், அவர்கள் பேச்சில் குறுக்கிட்டு. தங்களுக்குத் தோன்றியபடியெல்லாம் படத்தைப் பற்றிக் குற்றச் சாட்டுகளை ஆரம்பித்து விட்டது. இது கோவை டைரெக்டருக்கு எப்படியிருந்திருக்கும் என்பதையோ, அதனால் ஏற்படக்கூடிய விபரீதத்தையோ அவர்கள் யோசித்திருந்தால் தங்கள் வாயைத் திறந்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். "ஏண்டாப்பா பேசினோம்" என்று எண்ணி அவர்கள் வருந்தும்படிச் செய்து விட்டார் அந்தக் கோவை டைரெக்டர்!

• • •

இந்தக் கோஷ்டியினர் வலியக் கூறிய அபிப்பிராயங்களைக் கேட்ட டைரெக்டருக்கு அளவுக்கு மீறிய கோபம் வந்ததென்றாலும், அந்த 'பிரகஸ்பதி'களின் மூக்கை சரியானபடி உடைக்க வேண்டும் என்பதற்காக, தம் கோபத்தை அடக்கிக் கொண்டார். அவர்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியே அழைத்து, தம் படத்தை விமர்சனம் செய்யச் சொல்லி, தக்கபடி மண்டகப்படி செய்து அனுப்பினர். முதலில், அந்த ஸ்டுடியோவில் 'ஒட்டக்கூத்தனாக' இருந்து வரும் ஒரு 'மணி'யை அழைத்து அபிப்பிராயம் கேட்டார். அந்த மணியும், உண்மையாக படத்தில் உள்ள குற்றங்களை விடுத்து, இல்லாத குற்றங்களையெல்லாம் கற்பனை பண்ணிக் கூறினர். அவருக்கு நமது டைரெக்டர் கொடுத்த பதில் இதுதான்: "மணியோ! உமக்கு இந்தத் தொழில் லாயக்கில்லை. பேசாமல் தண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, மீண்டும் செட்டிக் கடைக் கணக்கப் பிள்ளை வேலைக்கே போய் விடும்."

• • •

அடுத்த ஆசாமி அந்த ஸ்டுடியோவில் 'பென்ஷன்' வாங்கும் நபர்களில் ஒருவர். அவர் ஸ்டுடியோவில் என்ன வேலை செய்கிறார் என்பது ஸ்டுடியோவிலுள்ள பலருக்கே தெரியாது! ஸ்டுடியோவுக்காக, தெலுங்கு — தமிழ்ப் படம் ஒன்றை ஆரம்பித்து பாதியில் நிறுத்தியிருக்கிறார் என்பது மட்டும் தெரியும்! இவரும் தமது 'மேலான' அபிப்பிரா



சீக்கிரமே வெளிவர விருக்கும் ஜெமினியின் புதுப் படமான "மூன்று பிள்ளைகள்" தமிழ்ப் படத்தில் நாகேந்திர ராவும், எம். கே. ராதாவும் தோன்றும் ஒரு காட்சி இது.

யத்தை உதிர்த்து விட்டார்! டைரெக்டர். இவருக்கு, "ஸார்! வக்கீல் வேலைக்குத் தகுதியில்லைஎன்றுதானேநீர் சினிமா வேலைக்கு வந்தீர்? உம்மால் ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிட முடியவில்லை, ஆகவே, பேசாமல் வேறு வேலை பார்த்துக் கொண்டு போய்விடும்" என்று சாந்தமாக புத்திமதி கூறி அனுப்பினர்.

• • •

மூன்ருவதாக, அபிப்பிராயம் கேட்க அழைக்கப்பட்டவர் ஸ்டுடியோவின் வசன கர்த்தாக்களில் ஒருவர். இந்த நபர் வசன கர்த்தாவாக பிரபலமாக இல்லாவிட்டாலும், சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்ற மதிப்பு உண்டு. "ஐயா, எழுத்தாளரே, நீர் பேசாமல் புஸ்தகங்கள் எழுதிக் குவிப்பதோடு நிறுத்திக் கொள்ளும்; வேண்டுமானுல் ஒரு புஸ்தகக் கடையை ஆரம்பித்து நடத்தும்" என்பதுதான் இவருக்குக் கிடைத்த பதில்.

சொந்தத்தில் ஐஸ் கடையை வைத்து நடத்தும் ஒரு பெரியவர் இந்த ஸ்டுடியோவில் இருக்கிருர். இவரைத் தமாஷாக அங்குள்ளவர்கள் "டாக்ஸ் ஆபீஸ் பராமீட்டர்" என்று கூறுவார்கள். அதாவது, இவருடைய பொறுப்பு, 'பொதுஜன ரஸனை எப்படிப்பட்டது. படத்தில் இன்னின்ன அம்சங்களை ஜனங்கள் விரும்புகிருர்கள்' – என்பதையெல்லாம் அறிந்து கூறுவது. இந்த 'பராமீட்டரு'க்கும் கோவை டைரெக்டர் தகுந்த பதில் அளிக்கத் தவறவில்லை. "ஐஸ் வியாபாரம் பண்ணுவதில் உம்மூளை குளிர்ந்து போய் விட்டதுபோல் இருக்கிறது. சூடு ஏற்றி அது வேலை செய்ய வழி செய்யும்" என்று போட்டார் ஒரு போடு.

• • •

ஐந்தாவதாக, "கிரி" (பலே) போன்ற ஒரு ஆசாமி ஆடி அசைந்து வந்தார் அபிப்பிராயம் கூற. பிரதி தினமும் ஸ்டுடியோவில் 'புஷ்கோட்' அலங்கா

ரத்துடன் ஆஜராகி, ஸ்டுடியோ 'கான்டீன்' திண்டிகளைக் காலி பண்ணுகிறார் என்பதைத் தவிர, இவருக்கு அங்கு என்ன வேலை என்பது அவருக்கே தெரியுமா என்பதே சந்தேகம்தான்! இவர், தமக்குத் தோன்றியபடியெல்லாம் தம் அபிப்பிராயங்களை அபிநயங்களுடன் அள்ளி வீசினார்! பட டைரெக்டர் தமக்கு வந்த சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார். "சுவாமி நடன கலா கோஷ்டி ஒன்றை ஆரம்பித்து நடத்தி, நாட்டிய மணிகளின் பின்னால் சுற்றத்தான் நீர் தகுதியானவர். பேசாமல் அந்தக் கலா சேவைக்கே நீர் போய் விடும்" என்று பட்டவர்த்தனமாய் கூறிவிட்டார்!

•   •   •

கடைசியாக வந்தவர் அந்த ஸ்டுடியோவில் பிலிம் எடிட்டராக இருந்து, டைரெக்டராக உயர்ந்தவர். அவர் படத்தின் 'எடிட்டிங்' பற்றி குற்றம் கூறத் தொடங்கினார். அப்பொழுதுதான், அதுவரை அடங்கியிருந்த டைரெக்டரின் கோபம் தலைதூக்கிவிட்டது. "சுமார் முப்பத்தாறாயிரம் அடிகள் படம் பிடித்து வைத்திருக்கிறேன். அதை அப்படியே உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். நீங்கள் அவைகளை 'எடிட்' பண்ணி, படத்தை இப்பொழுது உள்ளதைவிட சிறப்பாகப் பண்ணிவிடும் பார்க்கலாம். நீங்கள் அப்படிச் செய்து விட்டால், கோவையிலுள்ள என் ஸ்டுடியோவை இழுத்துப் பூட்டிவிட்டு, நாளைக்கே நான் பட உலகிலிருந்து 'ரிடையராகி' விடுகிறேன்" என்று ஆக்ரோஷத்துடன் கூறினார். ஆனால் இந்த 'சவாலை' அங்கீகரிக்க அந்த எடிட்டருக்கு துணிபு இல்லை!

•   •   •

மேற்படி ஆறு சிப்பந்திகளும் இப்படி மட்டம் தட்டப்பட்டதில் ரொம்பப் பேர்களுக்கு மகிழ்ச்சி. அந்த ஸ்டுடியோ சிப்பந்திகளே ஒருவருக்கொருவர் இதைச் சொல்லி சந்தோஷப்பட்டுக் கொள்கிறார்கள்! இந்த "மேதாவிகள்" தம் தலைவர் முன் இப்படி அவமானப் படுத்தப்பட்ட பிறகாவது திருந்தி விடுவார்களா என்றால், அதுதான் கிடையாது. மற்றவர்களைக் குறை கூறுவது தான் அவர்கள் உடம்போடு பிறந்த-ஊறிப்போன குணம் ஆயிற்றே!



"வட இந்தியரை தென்னிந்தியர் மிஞ்சிவிட்டனர்!"

சென்னையில் சந்துலால் ஷா பிரசங்கம்

சென்ற மாதம் 7ம் தேதி, தென்னிந்திய பிலிம் சேம்பர் கட்டடத்தில், இந்தியப் சினிமாப் பட உற்பத்தியாளர் சம்மேளன'த்தின் நிர்வாக அங்கத்தினர்கள் கூட்டம், சபமேளனத்தின் தலைவர் சந்துலால் ஷாவின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் உப தலைவர் ஏ. ராமய்யா, கே. எம். மோடி, ஜெய்மணி திவான், எம். பி. பில்லிமோரியா, பி. டி. பருச்சா (பம்பாய்), கே. எல். சாட்டர்ஜி (வங்காளம்), எல். எல். படேல், கே. சுப்பிரமணியம், வி. ஸ்ரீநிவாஸன் (சென்னை) ஆகிய நிர்வாக அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் தவிர, டில்லி சலனப்பட சங்கம், கிழக்கு பஞ்சாப் சலனப்பட சங்கம், தென்னிந்திய ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் சங்கம், மத்திய மாகாண தியேட்டர்காரர் சங்கம், மைசூர் பிலிம் சேம்பர், இயந்திர சாதன இறக்குமதியாளர் சங்கம், இப்படிப் பல சங்கங்களின் பிரதிநிதிகளும் விசேஷ அழைப்பின்பேரில் வந்து இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

தலைவர் சந்துலால் ஷா தமது தலைமைப் பிரசங்கத்தில் படத் தொழிலின் நிலையையும், அதன் எதிர்காலத்தையும்பற்றி விரிவாகப் பேசினார். "நமது படத் தொழில் நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது உடனடியாக தயாரிப்புச் செலவுகளைகுறைப்பதுடன், மார்க்கெட்டைவிரிவடையச்செய்யாவிட்டால் மேலும் மோசமாகிவிடக்கூடும். சமீபத்தில் நடைபெற்ற பிலிம் விழா, படத் தொழில் எவ்வளவு முக்கியமானது என்பதை அரசாங்கம், உணர்ந்து விழிப்படையச் செய்கிறது. ஆனால், அதே சமயம் பொறுப்புணர்ந்த சிலர், சினிமாவைக் குறைகூறுவது வருந்தத் தக்க விஷயம். அவர்களே மத்திய தணிக்கை போர்டு ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் தணிக்கை செய்யப்பட்டு படங்கள் வெளி வரும்போது, இத்தொழிலினரைக் குறைகூறுவது கூடாது. அரசாங்கம் வாய்ளவில் அனுதாபம் தெரிவிப்பதுடன் நின்றுவிடாமல், படத் தொழிலுக்குப் பல வகைகளில் உதவ முன்வர வேண்டும். குறைந்தது, பிலிம் விசாரணைக் கமிட்டியினரின் சிபார்சுப்படியாவது வரிப் பளுவைக் குறைக்க வேண்டும்." அவருடைய நீண்ட பேச்சின் முக்கிய சாராம்சம் இதுதான்.

அன்று மாலை, சம்மேளனக் கூட்டத்தின் தலைவரையும், அங்கத்தினர்களையும் கௌரவிக்கும் முறையில், தென்னிந்திய பிலிம் சேம்பர் ஒரு வரவேற்பை அளித்தது. அனைவரையும் ஏ. ராமய்யா வரவேற்றுப் பேசினார். படத் தொழில் தற்போதுள்ள கஷ்ட நிலையை விளக்கி, பிலிம் விசாரணைக் கமிட்டியின் சிபார்சுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

பிறகு, வரவேற்புக்கு தலைவர் சந்துலால் ஷா நன்றி தெரிவித்து பதில் கூறினார். அவர் பேசுகையில், "முன்பெல்லாம் தென்னிந்தியாவில் மிகவும் நீளமான, புராணப் படங்களையே உற்பத்தி செய்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது நிலைமையில் நல்ல மாறுதல் ஏற்பட்டு விட்டது. படத் தயாரிப்பில் வடநாட்டினரைத் தென்னிந்தியர் மிஞ்சிவிட்டனர். இனி வட இந்தியர்-தமிழ், தெலுங்குப் படங்களை எடுத்து தென்னாட்டவருடன் போட்டி போடப் போகின்றனர்" என்பதை முக்கியமாகக் குறிப்பிட்டார்.

இந்திய சினிமாப் படத் தொழிலைப் பற்றிய பிரச்னைகள் குறித்து விவாதிக்க, இந்தியா முழுவதிலுமுள்ள பட உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும் தியேட்டர்காரர்களும அடுத்த மாதம் பம்பாயில் கூட வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

மறு நாள் காலை, தென்னிந்திய பிலிம் சேம்பர் காரியாலயத்தில் பத்திரிகைக்காரர்களை சந்தித்துப் பேச சந்துலால் ஷா ஏற்பாடு செய்திருந்தார். அவர், சர்க்கார் படத் தொழில் மூலம் நிறைய வரிகளாகப் பண வருவாயைப் பெற்றும், பதிலுக்கு இத் தொழிலுக்கு எவ்வித மான உதவியும் அளிப்பதில்லை என்பதை விளக்கினார். முதல் நாள் நடைபெற்ற சம்மேளனக் கூட்டத்தின் தீர்மானங்களைப் பற்றியும் கூறினார்.

"Theatre chairs with Dunlopillo cushions and arm rests provide the maximum of seating comfort, and at the same time the highest acoustic absorption yet reached

Latex foam cinema seating

in theatre seats"—Ideal Kinema. Dunlopillo cinema seating is most economical. It has no springs or separate pieces and therefore needs no repairs. Being self-ventilating with millions of cells, it is COOL. It repels bugs. What could be more suitable for a climate such as ours?



TRADE MARK

DUNLOPILLO

NOW MADE IN INDIA
BY

DUNLOP

FOUNDERS OF THE LATEX FOAM INDUSTRY

53 Persons are awarded prizes in our Puzzle No. 9.

1st prize 20, 2nd prize 1, 3rd prize 26 and 5th prize 6 persons.

Full particulars are published in the " Rainbow " dated 25—5—52.

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 11.

M/s. Premier Bank of India Ltd-ல் *சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். எங்கள் போட்டி நிபந்தனைக் கிணங்க, பரிசுத் தொகைகள் வசூலுக்குத் தக்கபடி பகிர்ந்து அளிக்கப்படும்.*

AMBAL'S PUZZLES

KEY S. NO. 9 *23 TO 38 122

38	24	25	35
27	33	32	30
31	29	28	34
26	36	37	23

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No.* 9 on 15/4/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramamurthy 19/5/52

Agent, Madras.

முடிவு தேதி **12—6—52.** விடை **27—6—52.**

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1—0—6. 6 கூபன் கொண்ட ஷீட் 1-க்கு ரூ. 5—0—0

154

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—31 முதல் 46 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 154 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். **விதிகள்;**-தனி வெள்ளைக்காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதும்; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுத்துவதாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்; அல்லது ½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

AMBAL PUZZLE No. 11

28, (21) Thandavaraya Gramani Street, Madras—21.

ரிஜிஸ்டர் நெ. 277. ரூபாய் **25,000** பரிசு போட்டி நெ. 12.

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 27-6-52. விடை: 12-7-52.

158

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட ஷீட் 1-க்கு ரூ. 5/-

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 32 முதல் 47 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 158 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

AMBAL PUZZLE No. 12

28, (21) Thandavaraya Gramani St., Madras—21.

Parthan
அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை
டைரெக்ஷன்
ஸ்டுடியோ
நியூடோன்
தமிழ்
சி.எச்.நாராயணமூர்த்தி
எம்.கே.ஆர்.நம்பியார்

சென்னையில் பிராட்வே,
மூன்று தியேட்டர்களி
சென்ற மாதம் 31ந் தேதி
தங்கை'' ஒரு சுவா
மாக இருக்கிறதாம். இப்
ஜன ஆதரவும் வசூலும்

சித்ரா, சரஸ்வதி ஆகிய
லும், தமிழ் நாட்டிலும்
வெளிவந்திருக்கும் "சன்
ரஸ்யமான தமிழ்ப் பட
படத்திற்கு நல்ல பொது
ஏற்பட்டு வருகிறதாம்

Parthan

மாதுரிதேவி, வி. எஸ். சுசீலா, ஈ. வி. சரோஜா, எம். ஜீ. ராமச்சந்திரன், நரஸிம்ம பாரதி பி. எஸ். கோவிந்தன், எம். ஜி. சக்ரபாணி, ஸி. எஸ். பாண்டியன், ராஜம் முதலியோர் நடிக்கும் படம் இது.

குண்டூசியைக் கேளுங்கள்

கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகமிருந்தாலும் "குண்டூசி" யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாக பதிலளித்து, தமிழ் சினிமா, நாடக, சங்கீத உலகை சீர்திருத்துவதே இப் பகுதியின் நோக்கமாகும். —ஆசிரியர்

ரா. ரங்கநாதன் (பாரிட், மலாயா)

"மாயக் குதிரை" என்ற படத்தில் பூதத்தின் உயிர் நாடி ஏழு சமுத்திரத்திற்கு அப்பால் ஒரு குகைக்குள் ஒரு வண்டினிடம் இருக்கிறதே! அது போல், நமக்கு உயிர் நாடி எங்கே இருக்கிறது?

ஐந்து சமுத்திரத்திற்கு அப்பாலிருந்து அமெரிக்கா அனுப்பிவரும் தானியங்களில்தான்!

ரே. லக்ஷ்மணன் (கூறியானூர்)

"ஜெகதல பிரதாபனி"ல் சின்னப்பாவுடன் குஸ்தி யிட்டாரே ஒருவர்? இனி அவர் யாருடன் குஸ்தி யிடுவார்?

அந்நாளில் அந்தப் பரமசிவன் எமனுடன் குஸ்தியிட்டு மார்க்கண்டேயனை மீட்டது போல், இந்நாளில் இந்த நாடார் பரமசிவன் எமனுடன் வேண்டுமானால் குஸ்தியிட்டு சின்னப்பாவை மீட்டு வருவதற்கு முயற்சிக்கலாம்!

எஸ். எக்ஸ். கே. சாமி பிள்ளை (அவிசாவெல்லை, இலங்கை)

தற்போது வெளிவரும் தமிழ்ப் படங்களிலெல்லாம் காதல் கட்டங்களே நிரம்பிக் கிடக்கின்றன. இவை விவாஹமாகாத ஆண், பெண்களுக்கு நன்மை பயக்குமா? அல்லது தீமைதான் பயக்குமா?

காதல் தவறிப் போனதற்காக உயிரை விட்ட காதலர்களின் கதைகளை நிறையப் படித்திருக்கிறோம்; பார்த்திருக்கிறோம். சினிமாவிலிருந்தோ "காதல் போயின் (தொழில்) சாதல்; சாதல்"—நிச்சயம்! இளஞ் சிறுவர் சிறுமியர் பார்க்கத் தகாத படங்களென சில படங்களுக்கு இங்கு தணிக்கை போர்டார் முத்திரையிட்டு விடுகின்றனர். ஆனால், இவ்வுத்தரவு சரிவர அமுல் நடத்தப்படாததுதான் பெருங் குறை.

க. சிவபாலன் (கட்டுக்கயனை)

"பாதாள பைரவி" புகழ் மாலதிக்கு என்ன வயதாகிறது? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

மாலதி இப்பொழுது கவலைப் பட்டுக் கொண்டிருப்பதெல்லாம் கல்யாணம்

பரிமளா பிக்சர்ஸ்-ஜூபிடர் பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பான "அழகி"யின் ஷூட்டிங்கை ராஜலக்ஷ்மி மில்ஸ் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ. ஆர். எதிராஜுலு ஆரம்பித்து வைத்தார்.



பற்றியல்ல—புத்திரப் பேறைப் பற்றித்தான்! அவருக்கு தற்போது வயது 29 ஆகிறது.

பி. அப்துல் ஹாதி (ஆமதாபாத்)

வைஜயந்தி மாலா என் கனவில் தோன்றி, என்னை மணந்து கொள்ளுவதாக சத்தியம் செய்து கொடுத்துவிட்டு, ரூ. 10,000 பெற்றுக்கொண்டு போயிருக்கிறார்! இந்த விவாஹம் நடந்தால் நீர் என்ன பரிசளிப்பீர்?

உமக்கு மிக அவசியமான—சார் நிறைய உள்ள—நூறு எலிமிச்சம் பழங்களை அனுப்பி வைப்பேன்!

எஸ். அருளானந்தம் (திரிகோணமலை)

மாதுரி தேவிக்கு எத்தனை குழந்தைகள்?

ஒன்றுகூட இல்லை... ஆனால்... "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்; காசுள்ள போதே நடித்து ஒழிக்கவேண்டும்." ஆசை அவருக்கும் உண்டு—பேசாமலிரும்; பிள்ளை விஷயத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம்!

ஆர். ராஜேஸ்வரி (திருவாரூர்)

டி. ஏ. ஜெயலக்ஷ்மியின் கணவர் யார்? அவரது பெயரென்ன?

ஜெயலக்ஷ்மியின் கிருபா கடாக்ஷத்தைப் பெற்ற வாஸுதேவன் நாயரின் தயாரிப்புதான் சமீபத்தில் வெளிவந்துள்ள "வேலைக்காரன்."

கே. பி. சுப்புராஜன்
(கே. குமாரெட்டியபுரம்)

என். எஸ். கிருஷ்ணன் 'எனெஸ்கே நாடக சபா' என்ற கம்பெனியை நடத்தி வருவதாகவும், சுமாராகப் பாடத் தெரிந்தவர்களை யெல்லாம் எடுத்துக் கொள்ளுவதாகவும் கேள்விப்படுகிறேன். எனக்குப் பாடத் தெரியும். என்னை அவர் எடுத்துக் கொள்ளுவாரா?

சினிமா உலகில் என். எஸ். கே.யுக்கு வேலை வேகமாக குறைந்து வருகிறது. அவர் ரஷ்யாவுக்குப் போய், அங்கேயே குடியேறிவிடாமல் இருந்தால், இந்த நாடகக் கம்பெனியை ஆரம்பித்து, நம் நாடக உலகிற்கு 'சேவை

சென்ற மாதக் கடைசியில் வெளிவந்துள்ள அசோகா பிக்சர்ஸாரின் உன்னத தயாரிப்பான "என் தங்கை" தமிழ்ப் படத்தில் பி. எஸ் கோவிந்தன். நரசிம்ம பாரதி, மாதுரி தேவி, ஆகியோர் தோன்றும் இக் காட்சியைக் காணலாம்.

செய்யும்' நிர்ப்பந்தம் ஏற்படவே கூடும்! உம்முடைய விண்ணப்பத்தை அப்பொழுது அனுப்பலாம்

அ. அப்துல் ஜலீல் (நேவலாலி)

தமிழ்ப் படங்களில் கதை வசனம், பாட்டு, காட்சிகள் இவற்றில் எது முக்கியமானது?

திருட்டுக் கதை, இரவல் பாட்டு, 'டூப்ளிகேட்' வசனம், அர்த்தமில்லாத காட்சிகள், இவற்றிற்குத் தம் தமிழ்ப் படங்கள் பேர் போனவையாயிற்றே! ஒவ்வோர் சமயம், ஒவ்வொரு அம்சத்தில் மட்டுமே நம் படாதிபதிகள் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனால், ஒரு படம் சிறந்த வெற்றி பெற வேண்டுமானால் எல்லா அம்சங்களும் ஓரளவாவது சிறப்பாயிருக்க வேண்டும்.

எம். மஹாலிங்கம் (பம்பாய்)

சினிமாவில் நடிப்பதற்கு வேண்டிய திறமைகள் எனக்கு உள்ளன. நான் தமிழ்ப் படங்களில் நடிக்க விரும்புகிறேன். எனக்கு அந்த அதிர்ஷ்டம் ஏற்படுமா?

இந்த அதிர்ஷ்டம் உமக்கு ஏற்பட வேண்டுமானால் நீர் எப்படியாவது முதலில் தெலுங்குப் படங்களில் நடிப்பதற்கு முயற்சியும். நம் படாதிபதிகள் நடிக நடிகைகளைப் பொறுக்குவதெல்லம் தெலுங்குப் படங்களிலிருந்து தானே!

"மங்கை" (மயிலாப்பூர்)

மற்றவர்களின் ஆட்டத்தைப் பற்றி ஜோராகக் குத்திக் காட்டி விமர்சனம் செய்து வரும் உங்கள் "நந்தி"க்கு ஆடத் தெரியுமா? அவர் யாரிடமாவது சிக்ஷை பெற்றிருக்கிறாரா?

"நந்தி"—வாய்ச் சொல் வீரர் மட்டுமல்ல; செயலிலும் செய்து காட்டக் கூடியவர்தான். நட்டுவனார்களிடம் கற்றுக் கொண்டது விட அவர் புஸ்

தகங்களை ஆராய்ந்து ஏராளமாய் கற்றுக் கொண்டிருக்கிறார்.

பொ. செல்வத்துரை (யாழ்ப்பாணம்)

இந்தியாவில் எந்த லக்ஷியத்துடன் படங்கள் தயாரிக்கப் படுகின்றன? பணத்திற்கா? புகழிற்கா? அல்லது மக்களைச் சீர்திருத்துவதற்கா?

இந்தியாவில் மட்டுமல்ல; உலகம் பூராவிலுமே படம் தயாரிக்கப்படுவது பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற லக்ஷியத்திற்காகத்தான். பேனாட்டுப் படாதிபதிகள் இந்த லக்ஷியம் வெளிக்குத் தெரிந்து விடாமலிருப்பதற்காக தீவிரமாய் முயலுகிறார்கள். ஆனால், நம் படாதிபதிகளோ ஒளிவு மறைவின்றி அப்பட்டமாக நடந்து கொள்ளுகிறார்கள். இதுதான் வித்தியாசம்.

ரஜனி (யாழ்ப்பாணம்)

"ராஜாம்பாள்" புகழ் மனோஹரின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

26, பாகீரதி அம்மாள் தெரு, தி. நகர், சென்னை—17.

சா. சி. அ. பா. (வல்லம்)

பி. கே. சரஸ்வதி, வைஜயந்திமாலா, யூ. ஆர். ஜீவரத்தினம்—இவர்களுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

ஜீவரத்தினம் விவாஹம் ஆனவர்; முதலிருவரும் ஆகவேண்டியவர்கள்.

ஓ. எம். ராதாகிருஷ்ணன் (சித்தூர்)

படத்தில் வசனம் எப்படி இருக்க வேண்டும்?

பிரத்தியேகமாக எழுதப் பட்டதாகவோ, மனனம் செய்து ஒப்பிப்பதாகவோ தோன்றாதபடி இருக்கவேண்டும். மற்றும், பாத்திரத்தின் தன்மைக்கு ஏற்றதாயும், அளவுக்கு அதிகமில்லாமலும் இருத்தல் அவசியம்.

"கலா ரஸிகன்" (மதுரை)

"ஆபாசப் படங்களுக்குத்தான் ரஸிகர்கள் ஆதரவு அளிக்கிறார்கள்; ஜனங்களுக்கு ரஸிப்புத்தன்மை கிடையாது" என்று சிலர் கூறுகிறார்களே. உண்மையா?

ரஸிப்புத்தன்மை இல்லை யென்று சொல்ல முடியாது; சில நல்ல படங்களுக்குக்கூட அவர்கள் பேராதரவு அளித்திருக்கிறார்கள் அல்லவா! ஆனால், ஆபாசப் படங்களுக்கு உயிர் அளித்து வருவதும் அவர்களேதான் என்பதும் மறுக்க முடியாத விஷயம்.

நா. ரே. மாரிமுத்து (திருவாரூர்)

நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வர்ணனையை எழுதி வருகிறீர்களே; உங்களுடைய வாழ்க்கை வர்ணனையை எப்பொழுது எழுதுவீர்?

நானே ஒரு நக்ஷத்திரம் ஆன பின்னர்! ஆனால் இந்த வருந்தத்தக்க (!) சம்பவம் நிஜமாகவே ஏற்பட்டு விடுமோ என்று நீர் கவலைப்பட வேண்டாம்!

"குலசை கம்சா" (கொழும்பு)

என்னிடம் நிறைய புஸ்தகங்கள் இருக்கின்றன. ஆனால், புஸ்தகத்தைக் கையில் எடுத்தால் வாசிப்பதற்கு மனம் வருவதேயில்லை. இதற்கு நான் என்ன செய்யலாம்?

நறுமணத்தில் நிகரற்றது!

நீலகிரிகாபி

தலைமை ஆபீஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு,
பீ. டி. சென்னை.
கிளை: 82 நாயுடுபிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
89 பாண்டி பஜார், தி. நகர், சென்னை—17.



அவர் இந்தியா பில்ம்ஸின் "என் வீடு" தமிழ்ப் படத்தில் பிரபல வி. நாகய்யாவுடன், சுதாகர், கிருஷ்ணா ஆகிய இவ்விரு பையன்களும் மிக நன்றாய் நடித்து வருகிறார்களாம்.

உமக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லை என்று யூகிக்கிறேன்! முதலில், அதை முடித்துக் கொள்ளும்; படிப்பை பிறகு பார்த்துக் கொள்ளலாம்!

பி. ஆர். வேலாயுதம் (புதுக்கோட்டை)

தமிழ் நடிகர்களில் மிக உயரமானவர் யார்? அவரது உயரம் என்ன?

நாகய்யாதான் மிக உயரமானவர். அவர் சுமார் 6 அடி உயரமுள்ளவர்.

எம். சாலிஹ் (அதிராம்பட்டணம்)

டி. ஆர் மஹாலிங்கம் தயாரித்து வரும் "சின்னதுரை" எப்பொழுது வெளிவரும்?

இப்படம் அநேகமாக முடிவடைந்து விட்டது. சீக்கிரமே வெளிவரும்.

ஜே. துரைராஜ் (ராபர்ட்ஸன் பேட்டை)

"ஸ்திரீ சாகஸம்" படத்தில் நாகேஸ்வர ராவ் ஒரு தமிழ்ப் பாட்டைப் பாடுகிறாரே. அது அவருடைய குரலேதானா?

நாகேஸ்வர ராவுக்கு "ஓர் இரவு" படத்தில் பேச்சே இரவல் வாங்கப் பட்டிருக்கிறது என்றால், பாட்டைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

பி. பாக்கியம் (குப்பணம்பட்டி)

"நேதாஜி போஸ் இன்னமும் மர்மமாக உயிருடன் இருக்கிறார்" என்று என் நண்பரொருவர் கூறுகிறார்,

உம் நண்பர் ஒரு தீவிர சோஷலிஸ்ட்டாக இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெரிகிறது! இல்லையென்றால் இன்னமும்கூட நேதாஜி உயிருடனிருப்பதாகவே சரடு விட்டுக் கொண்டிருப்பாரா?

என். ஜோகன் (குந்தா, நீலகிரி)

பல பத்திரிகைகள் சினிமா நக்ஷத்திரங்களைப் பற்றி மிக ஆபாசமாக

எழுதி வரும்போது, நீங்கள் மட்டும் அவ்விதம் எழுதாமல், அவர்களைப் புகழ்ந்து எழுதுவதின் காரணம் என்ன?

சாக்கடை ஆராய்ச்சியில் இறங்குபவனுக்கு துர்நாற்றந்தான் கண்ட பலனுயிருக்கும். பூக்கடை ஆராய்ச்சியாளனுக்கோ நல்ல மணமே கிடைக்கும்.

கே. மணியன் (ஈப்போ, மலாயா)

கே. மாலதியின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கவும்.

"தாண்டவராயன் தெரு, ராயப்பேட்டை, சென்னை" என்று எழுதும்.

சரோஜா கிருஷ்ணன் (கல்கத்தா)

ஏவி. எம். மின் "பஹாரி"ல் வைஜயந்திமாலாவின் தோற்ற மொன்றை ஜனவரி "குண்டூசி"யில் 60ம் பக்கத்தில் வெளியிட் டிருக்கிறீர்கள். இக்காட்சியைப் படத்தில் காணோமே?

முதலில் பத்திரிகைகளில் வெளியிடும் சில காட்சிகளை, தவிர்க்க முடியாத காரணங்களினால், படத்திலிருந்து சிலசமயம் நீக்கி விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுவதுண்டு.

"புனிதை" (மைசூர்)

கோவார்டினேட்டட் ஸினி புரொடக்ஷன்ஸாரின் "நண்பன்" படம் என்ன ஆயிற்று?

'எருக்க இலை வாடுவதும், எருமைக் கன்று சாவதும் பால் இன்மையால், படங்கள் சாவதோ, (வராமற் போவதோ பெரும்பாலும் பணமின்மையினால் தான்) ஆனால் நம் "நண்பன்" எங்கோ தலையைக் காட்டிவிட்டு மறைந்து விட்டான்! ஒரு விஷயம் சொல்ல வேண்டும். படங்களின் ஷூட்டிங் ஆரம்ப விழாவுக்கும் படக் காட்சி ஆரம்ப விழாவுக்கும் தான் எங்களுக்கு அழைப்பு அனுப்பி தடபுடல் செய்கிறார்கள் நம் படாதிபதிகள் ஆனால், இதுவரை படங்களின் மூடு விழாவுக்கு எந்தப் படாதிபதியுமே என்னை அழைத்ததில்லை! நக்ஷத்திரங்கள்கூட தங்களுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் தெரிவித்துவிட்டு பட உலகிலிருந்து விலகக்காணோம்!

தாவுத் மரைக்காயர் (பண்ருட்டி)

தாரா சௌத்ரி தற்போது படங்களில் ஏன் காணப்படவில்லை?

நம் படாதிபதிகள்கூட சில சமயங்களில் ரஸிகர்கள்பால் கருணையுடன் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதற்கு தாரா சௌத்ரிக்கு ஓய்வளித்திருப்பதை உதாரணமாய் கூறலாம்!

கோரநாத்" (மதுரை)

எம். கே. தியாகராஜ பாகவதர் தம்முடைய பதினாறு வருஷ பட உலக அநுபவத்திற்குப் பிறகும் நடிப்பில் முன்னேற்றம் அடையாமலிருக்கிறாரே? காரணம், முயற்சியின்மையா? திறமையின்மையா?

முயற்சியின்மைதான் காரணம். தம் இனிய பாட்டுக்காக, தம் நடிப்பின்மையை ரஸிகர்கள் மன்னித்துவிட வேண்டும் என்ற பிடிவாதமான கொள்கையுடன் இருக்கிறார் அவர். ஆனால், இந்தக் 'காலம்' இருக்கிறதே, பாவம், அவரைக்கேட்காமலே தானே மாறிக் கொண்டு வருகிறது!

உத்திரவாதமும், நம்பிக்கையும் உள்ள தங்கம், வெள்ளி நகைகளுக்கும் கலியாண காலங்களுக் கேற்ற அழகும், உறுதியும், சிறந்த வேலைப்பாடும் கூடிய பாத்திரங்களுக்கும் சிறந்த இடம்.

சுங்கு
வெங்கடேச பெருமாள்
செட்டி & Co.,

221, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு,
சென்னை-1. போன்: 4156

சென்னை மாகாணத்தில் சினிமா தணிக்கை

பிரதேச அதிகாரியின் பரிசீலனை

மத்திய சினிமாத் தணிக்கை போர்டின் சென்னை பிரதேச அதிகாரி ஸ்ரீ. கே. ஸ்ரீநிவாசன் சென்ற மாதம் 16ந் தேதியன்று சென்னையில் நடந்த பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில், சினிமாப் படத் தணிக்கை நடவடிக்கைகள் பற்றிப் பேசினர். 'ஒரு வருஷத்திற்கு முன் படத் தணிக்கை முறை ஒரு முசப்பட்ட மத்திய நடவடிக்கையாகத் திருத்தி அமைக்கப் பட்டது. இது சம்பந்தமான மூன்று லட்சியங்களில் இரண்டு லட்சியங்கள் ஏற்கெனவே நிறைவேறி விட்டன. மூன்றுவது லட்சியமோ படிப்படியாக நிறைவேற்றி வைக்கப்பட்டு வருகிறது" என்று அவர் கூறினர்.

அதை விவரித்து ஸ்ரீ. ஸ்ரீநிவாசன் மேலும் கூறியதாவது :

தேசம் முழுவதிலும் பல்வேறு தணிக்கை அதிகார சபைகள் இருந்ததை மாற்றி ஒரே தணிக்கை போர்டை ஏற்படுத்தியதும், படங்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப் படுவதற்கு முன் அவைகளைப் பரிசீலனை செய்வதற்காக ஒரே விதமான விதி முறைகளைத் தேசம் முழுவதிலும் அனுஷ்டிக்கும்படி செய்ததும், அந்த விதி முறைகளுக்கு எல்லா இடங்களிலும் ஒரே விதமான அர்த்த-விளக்கம் கடைப் பிடிக்கும்படிச் செய்ததும் தான் மேற் சொன்ன மூன்று லட்சியங்களாகும்.

இப்போது மத்திய தணிக்கை போர்டு அதிகாரத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறும் படம் இந்தியா முழுவதிலும், வேறு எந்த ஸ்தல அதிகாரியின் பரிசீலனைக்கும் உட்படாமல், திரையிடப் படலாம்.

பத்து மாத காலமாகத் தணிக்கை போர்டின் பிரதேசக் காரியாலயங்கள் அக்கிராசனர் வகுத்திருந்த நகல் விதிகளை அனுசரித்துத் தணிக்கை வேலையைச் செய்து வந்தன. மேற்படி விதிகள் சினிமாப் படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தன. சென்ற நவம்பரில், கல்கத்தாவில் இவ் விதிகளை இறுதியாக வகுப்பதற்காகப் போர்டின் கூட்டம் ஒன்று நடத்தப் பட்டது. அந்தக் கூட்டத்துக்கு சினிமாத் தொழில் பிரதிநிதிகள் விசேஷ அழைப்பின் பேரில் வந்திருந்தார்கள். மேலும், சினிமாத் தொழில் பிரதிநிதி ஸ்தாபனங்கள் சமர்ப்பித்திருந்த அபிப்பிராயக் குறிப்புகளும் அக் கூட்டத்தில் பரிசீலிக்கப் பட்டன. நகல் விதிகளை சில்லறை மாறுதல்களுடன் போர்டு அங்கீகரித்தது. அவ் விதிகள் 1951 நவம்பர் 17உ கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டன. அந்த விதிகள் தாம் இந்திய சினிமாத் தொழில் அனுசரிக்க வேண்டிய கோட்பாடுகளாகும். அவைகளை அனுசரித்தே பரிசீலனைக் கமிட்டிகள் படங்களைப் பரிசீலனை செய்கின்றன. அவை தாம் டைரெக்டர்கள் கவனித்து நடக்க வேண்டிய விதிகளாகக் கருதப்பட வேண்டும்.

நகல் விதிகள் முதலில் வெளியிடப் பட்ட போது பலத்த ஆட்சேபனைகள் தெரிவிக்கப் பட்டன ; அவைகளை அனுசரிப்பதாயிருந்தால் ஒரு படமுமே தயாரிக்க முடியாதென்று கூறப்பட்டது. ஆனல், அவ்வாறு பீதி அடைவதற்குக் காரணம் கிடையாதென்பது அனுபவத்திலிருந்து நிரூபணமாகி விட்டது. நகல் விதிகளை இறுதியாக பரிசீலனை செய்த காலத்தில் முக்கிய திருத்தங்கள் எவையும் பிரேரேபிக்கப் படவில்லை. ஆனல், அதற்கு மாறாக சினிமாத் தொழில் பிரதிநிதிகள் 'அவ் விதிகளுக்குத் தாராளமாக அர்த்த விளக்கம் செய்ய வேண்டும்' என்று வற்புறுத்தினர்களே தவிர அவைகளை அடியோடு மாற்ற வேண்டுமென்று கூறவில்லை.

கோட்பாடுகள்

மேற்படி விதிகளில் அடிப்படையாக உள்ள கோட்பாடுகள் வருமாறு :

(1) சினிமாப் படங்கள், மக்கள் மனதில் சட்ட விரோதமான குற்றங்கள், தவருன நடவடிக்கைகள், பழி பாவங்கள் ஆகியவை மீது அனுதாபத்தை உண்டுபண்ணி, மக்களின் ஒழுக்கத்தைக் குறைக்கக் கூடியவையாய் இருக்கக்கூடாது.

(2) பொழுது போக்குக்குத் தேவையான அம்சங்களுக்குப் பொருந்திய

வகையில், சரியான வாழ்க்கைத்தரத்தை எடுத்துக் காட்டும் ரீதியில், படங்கள் அமைய வேண்டும்.

(3) சட்டத்தைக் கிண்டல் செய்வதாகவோ அல்லது சட்டத்தை மீறி நடப்பதற்கு ஆதரவு காட்டுவதாகவோ படங்கள் அமையக் கூடாது.

இந்த விதிகள் நகல் ரூபத்தில் பத்து மாத காலம் இருந்த பிறகு சென்ற ஆறு மாத காலமாக இறுதியான உருவத்தில் அமுலிலிருந்து வருகிறது. இந்தியா முழுவதுக்கும் ஒரே விதமான தணிக்கை விதிகள் இருக்க வேண்டுமென்ற இரண்டாவது லட்சியம் இதன் மூலம் நிறைவேறி விட்டது. அவ்வப்போது இவ் விதிகளில் திருத்தங்கள் செய்யப் படலாமாயினும், ஒரே விதமான விதிகள் தான் எப்போதும் அமுலிலிருக்கும்.

விதிகளை அமுல் செய்வது

எல்லா இடங்களிலும் இவ் விதிகளை ஒரே விதமாக அர்த்தம் செய்து கொண்டு தணிக்கை செய்வதென்ற மூன்றாவது லட்சியத்தின் மூலம் இரண்டு விதமான காரியங்களை நிறைவேற்ற வேண்டும். ஒன்று, சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய பிரதேச நிலையங்களில் பரிசீலனை செய்யப் பட்டு அத்தாட்சி அளிக்கப்படும் படங்கள் ஒரே விதமான முறைப்படி பரிசீலனை செய்யப்பட வேண்டும்; இரண்டு, இந்தியாவில் தயாராகும் படங்களும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் படங்களும் ஒரே விதமான முறையில் பரிசீலனை செய்யப்பட வேண்டும். இந்த லட்சியத்தை நிறைவேற்றி வைப்பதில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

பல்வேறு பரிசீலனைக் கமிட்டிகள் பல்வேறு விதமான முடிவுகளுக்கு வருவதைத் தடை செய்வதற்காக, ஆலோசனை சபைகளின் முழுக் கூட்டங்கள் அடிக்கடி நடக்க வேண்டும் என்று போர்டு தெரிவித்திருக்கிறது. அக் கூட்டங்களில் தாராளமாக அபிப்பிராயங்கள் பரஸ்பரம் தெரிவித்துக் கொள்ளப் படலாமாகையால், ஒரே விதமான மனப்போக்கு எல்லோரிடையிலும் ஏற்படுவதற்கு வழி ஏற்படும். பிரதேச ஆலோசனை சபைகளுக்கு புனர் பரிசீலனைக் கமிட்டிகளின் சிபார்சுகள் தெரிவிக்கப்படும். ஆகையால், அவை அதிகாரபூர்வமான அர்த்த விளக்கங்களைக் கடைப்பிடிக்கலாம். அடிக்கடி இவ்வாறு கருத்துக்கள் பரஸ்பரம் தெரிவித்துக் கொள்ளப் படுவதால் அபிப்பிராய வேறுபாடுகள் வெகுவாகக் குறைந்து விடும். 'பிரதேசத்துக்குப் பிரதேசம், படத்துக்குப் படம் வெவ்வேறு அடிப்படையில் தணிக்கை விதிகள் அனுசரிக்கப்படுகின்றன' என்று உற்பத்தியாளர்கள் குறை கூறுவதற்கு இனி இடமிருக்காது.

வெளி நாட்டுப் படங்களுக்கும் இந்த விதிகளைப் பிரயோகிக்க வேண்டும் என்று போர்டு கருதுவதற்குக் காரணம், எல்லாப் படங்கள் விஷயத்திலும் ஒரே விதமான முறை அனுஷ்டிக்கப்படவேண்டும் என்பதுதான். ஆனால், தேச ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள் முதலியவை உலகத்தின் பல பகுதிகளிலும் வேறுபட்டுள்ளதால், அவைகளைக் கவனத்தில் வைத்துக் கொண்டு இந்த விதிகள் அனுஷ்டிக்கப் படும்.

சென்னையில் தணிக்கை

1951 ஜனவரிக்கும் 1952 மார்ச் 31ம் தேதிக்கு மிடையில் 86 சினிமாப் படங்கள் சென்னைப் பிரதேசத்தில் தணிக்கை செய்யப் பட்டுள்ளன. இவைகளில் 8 படங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டவை. அவைகளில் 6 இங்கிலீஷ் படங்கள், 2 ரஷ்யப் படங்கள். எந்தப் படத்துக்குமே இங்கு அனுமதி மறுக்கப்படவில்லை. முதியவர்கள் பார்க்கக் கூடிய படம் என்ற பிரிவின் கீழ் வரும் "ஏ" அத்தாட்சிப் பத்திரத்தை ஒரே ஒரு இந்தியப் படத்துக்கு மட்டும்தான் வழங்க வேண்டியதாக இருந்தது. மற்ற எல்லாப் படங்களுக்கும் எல்லாரும் பார்க்கக் கூடிய "யூ" அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன. ஆனால், அவைகளில் சிலவற்றில் சில பகுதிகளை நீக்க வேண்டியதாக இருந்தது.

சென்னையில் பரிசீலனை செய்யப்பட்ட 78 இந்தியக் கதைப் படங்களில் இரண்டு படங்கள் பழைய படங்களின் திருத்திய பதிப்பாகும். ஒன்று ஆங்கிலப் படம். மீதி 76 படங்கள் மொத்தம் பன்னிரண்டு லக்ஷம் அடி நீளமுள்ளவை. இப்போது உற்பத்தியாகும் தென்னிந்தியப் படங்களின் சராசரி நீளம் 16 000 அடி. அதிக நீளமான படம் 19,850

அடி உள்ள ஒரு தெலுங்குப் படமாகும். 11,575 அடி நீளமுள்ள ஒரு மலையாளப் படம்தான் மிகக் குறைந்த நீளமுள்ளது.

மேற்படி 75 படங்களில் 31 தமிழ்ப் படம்; 27 தெலுங்குப்படம்; 9 மலையாளப்படம்; 2 கன்னடப் படம்; 6 ஹிந்திப் படம். தமிழ்ப் படங்களில் 16 படங்கள் இதர பாஷைகளிலும் பிரதி செய்யப்பட்டவை. அதே போல் 14 தெலுங்குப் படங்களும் 2 மலையாளப் படங்களும் பிற பாஷைகளில் தயாரிக்கப்பட்டவை. ஒரு படம் மலையாளம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளில் தயாரிக்கப் பட்டது. 6 ஹிந்திப் படங்களும் ஏற்கனவே ஒரு தென்னிந்திய மொழியில் தயாரிக்கப் பட்ட படத்தின் ஹிந்திப் பதிப்புக்கள் ஆகும். ஒரேயொரு ஹிந்திப் படம் மட்டும் தென்னிந்திய பாஷைத் தலைப்புக்களுடன் திரையிடப் பட்டது. பாஷைப் பிரதிகளின் எண்ணிக்கையை விட்டு விட்டு கவனித்தால், தனிப்பட எடுத்த படங்களின் எண்ணிக்கை 66 ஆகும். அவைகளில் 4 படங்கள் புராண இதிகாசங்கள் சம்பந்தமானவை; 20 படங்கள் கிராமியக் கற்பனைக் கதைகள்; 32 படங்கள் சமூகப் படங்கள். சுமார் 10 படங்கள் பிரபல நாடகங்களையும் இலக்கியங்களையும் தழுவிய கதைப் படங்களாகும். ஒரு படம் ஓரளவு சரித்திர சம்பந்தமானது.

உற்பத்தியாளர் ஒத்துழைப்பு

பரிசீலனைக் கமிட்டிகளின் வேலை சிரமம் மிக்கதாக இருந்தாலும், உற்பத்தியாளர்களும் டைரெக்டர்களும் முழு மனதுடன் தாராளமாக ஒத்துழைத்து வருவதால் அது சுலபமாக நடந்து வருகிறது. பரிசீலனைக் கமிட்டிகளின் பொறுப்பு உணர்ச்சியை உற்பத்தியாளர்கள் உணர்ந்து பாராட்டுகிறார்கள். இரு சாராரின் இடையிலும் அடிக்கடி கூட்டு ஆலோசனைகளும் விவாதங்களும் நடந்து வருவதனால் அவர்கள் ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். இதன் பலனாய் தணிக்கை வேலையிலுள்ள சங்கடம் குறைந்து விடுகிறது. தணிக்கைக் கோட்பாடுகளை மீறும் அம்சங்கள் கவனத்துக்குக் கொண்டு வரப்படும்

விஜயாவின் "கல்யாணம் பண்ணிப் பார்" தமிழ்ப் படத்தில் டி. என். மீனாக்ஷி, ஜோகராவ், மாஸ்டர் குந்து, சாவித்திரி ஆகியோர் தோன்றும் இக் காட்சியை நாம் பார்க்கலாம்.

அசல் வாழ்க்கையில் தாய்மை அநுபவம் பெற்ற சாந்த குமாரிக்கு தாய்மை உணர்ச்சிகளை வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் ராகினியின் "தர்ம தேவதா" படத்தில் கிடைத்துள்ளது.

காலங்களில் அவை ஒப்புக் கொள்ளப் பட்டு விடுகின்றன. அபிப்பிராய பேதங்கள் சகஜமான பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்ந்த விடுகின்றன. ஒரு படத்தைப் பரிசிலனை செய்த, அது பற்றி விவாதித்து முடிப்பதற்கு ஐந்து மணி நேரம் பிடிக்கிறது. சில சமயங்களில் சில காட்சிகள் மீண்டும் பார்வையிடப் பட்டுள்ளன. குறிப்பிட்ட ஒரு விஷயத்தில், அது சம்பந்தமான விவாதம் மூன்று நாட்கள் நடைபெற்றுள்ளது. இவ்வாறு பல வேற்றுமைகள் இருந்த போதிலும் இது வரையில் புனர் பரிசிலனைக் கமிட்டியை ஏற்படுத்த அவசியம் ஏற்படவில்லை.

ஒரு சில படங்கள் தான் வெட்டுப் படாமலே அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன மீதிப் படங்களில் அங்காங்கே சில பகுதிகள் கத்தரிந்து விடப்பட்டிருக்கின்றன. மொத்தம் இவ்வாறு 400 பட வெட்டுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளின் மொத்த நீளம் 11 000 அடிக்கும் அதிகமாகும். ஒரு படத்தில் சுமார் 1,000 அடி வரை துண்டிக்கப்பட்டிருக்கிறது.

விதிகளை மீறியதாகக் குறிப்பிடப் பட்ட அந்த 400 விஷயங்களில், பேச்சு, பாட்டு, சமிக்ஞை, ஆகியவைகளில் ஆபாசம் நிறைந்திருந்ததற்காக துண்டிக்கப் பட்டவை 150 ஆகும். மிருகத்தனமான பலாத்காரம், சித்திரவதை, உடலைவருத்தும் காட்சிகள் முதலியவைகளுக்காக துண்டிக்கப்பட்டவை 100 ஆகும். சட்டம், நிர்வாகம், சர்க்கார், ஆகியவைகளை அவதூறு செய்வதாக உள்ளவையும், சமூக கலவரங்களையும், வகுப்புத் துவேஷங்களையும் உண்டு பண்ணுபவையாகவோ, மதங்களைப் பாதிப்பவையாகவோ உள்ளவையும் ஆன ஆக்ஷேபப் பகுதிகள் 70 ஆகும். சுமார் 20 காட்சிகளில் நடன அங்க அசைவுகள் ஆக்ஷேபகரமாக இருந்தன. சரியானபடி ஆடைகள் இல்லாதிருந்த காரணத்துக்காக இருபது காட்சிகள் வெட்டிவிடப்பட்டிருக்கின்றன.

படாதிபதிகளுக்கு யோசனை

மேற்சொன்ன ஆக்ஷேபகரமான பகுதிகளில் ஆக்ஷேபனைக்குரிய வார்த்தைகளோ, காட்சிகளோ பாட்டுக்களிலும் நடனங்களிலும் உள்ள பகுதிகளாக இருந்தபடியால் அவைகளை வெட்டி அகற்றுவதில் தொழில்நுட்ப ரீதியான பல கஷ்டங்கள் இருந்தன. தயாரிப்பாளர்கள் இவ்விதக் கஷ்டங்களைத் தவிர்க்க விரும்பினால் பாட்டுகளைப் பதிவு செய்வதற்கு முன்னதாகவே பிரதேச தணிக்கை அதிகாரிக்குக் காட்டிவிடலாம். படங்களில் ஆபாசமான பகுதிகளைக் கண்டிப்பாக அகற்றிவிட வேண்டுமென்று போர்டு கட்டளை பிறப்பித்திருக்கிறது. இரட்டை அர்த்தங்களுள்ள வார்த்தைகளும், ஆபாசமான வசனங்களும் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டாது. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தவறான அர்த்தம் கொடுக்காவிடினும்கூட, சாதாரண வழக்கில் ஆபாசமான அர்த்தம் தரக்கூடிய வார்த்தைகள் இருக்கின்றனவா என்பது முக்கியமாகக் கவனிக்கப்படும்.

சட்டம், நிர்வாகம், சர்க்கார், ஆகியவை மீது மறைமுகமாக நிந்தனையும் அவதூறும் சாட்டுகிற வசனங்கள் பல படங்களில் வருவதைப் பரிசீலனைக் கமிட்டிகள் கண்டு பிடித்திருக்கின்றன. வகுப்புத் துவேஷங்களை வளர்ப்பவையும், மத உணர்ச்சிகளைப் புண்படுத்துபவையுமான வார்த்தைகளும் பாட்டுக்களும் சில படங்களில் கையாளப்பட்டிருக்கின்றன. ஆனால், அத்தகைய புகார்களுக்கு ஆதாரமான காரணங்கள் சமீப காலத்தில் வரவரக் குறைந்து வருகிறது.

சமூகப் படங்கள் பெருகுகின்றன

படங்களின் எண்ணிக்கை வரவர அதிகரிப்பதும், பல பாஷைகளில் படங்களை தயாரிக்க முயற்சி செய்யப் படுவதும், புராண, ரொமியக் கற்பனைக் கதைகளுக்குப் பதிலாக சமூகப் படங்களும், நாடகக் கதைகளும் அதிகமாக தயாரிக்கப் படுவதும்தான் தற்போதைய போக்கு என்பது இந்த ஒரு வருஷ கால நடவடிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இவ்வாறு கதைப் போக்கு வேறு திசைக்கு திரும்புவதன் மூலம் தணிக்கைப் பிரச்னைகள் வெகுவாகக் குறைந்துவிடும்.

இது செய்தி

இம்மாதம் ஜெர்மனியில் நடைபெறவிருக்கும் உலகப் பட விழாவிலே காட்டப்பட 'தியாக பூமி'' தேர்ந்தெடுக்கப்பட்டதும், டைரெக்டர் கே. சுப்ரமண்யம் படத்துடன் ஜெர்மனிக்குப் போகப் போவதும் முன்பே வெளியான செய்திகள். "தியாக பூமி''க்கு ஜெர்மன் பாஷையில் சம்பாஷணைகள் ஒட்டப்பட்டு வருகின்றன, டைரெக்டர் சுப்ரமண்யம் இம்மாதம் 10-ம் தேதி ஜெர்மனிக்குப் புறப்படுவார் என்றும், தம்முடன் கூட அவர் (மாஜி பேபி) சரோஜாவையும் அழைத்துப் போவாரென்றும் தெரிகிறது.

நக்ஷத்திரங்களுக்கு விபத்து

சென்ற மாதம் 6-ம் தேதி, கோவையில் நடன நடிகை பத்மினி சென்று கொண்டிருந்த கார் விபத்துக்குள்ளாயிற்று. நல்ல காலமாக நடிகை பலத்த காயங்கள் எதுவுமின்றித் தப்பினாரென்று தெரிகிறது

பிரபல வட இந்திய நடிகரான அசோக் குமார், சென்ற மாதம் 17-ம் தேதி ஸைக்கிளிலிருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானார். பம்பாயில் 18-ம் தேதி நடந்த ஸைக்கிள் போட்டியில் கலந்து கொள்ளப் பயிற்சி பெற்று வந்த போது இந்த விபத்து நேரிட்டது. அவருக்கு கணுக்கால் எலும்பு முறிந்துவிட்டது முகத்தில் பல காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் ஆஸ்பத்திரியில் இப்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

1950-வருஷ சிறந்த படங்கள்

"1950-வருஷத்தில் தயாரிக்கப்பட்டு. சென்ற வருஷத்தில் திரையிடப்பட்ட படங்களில் ''ஏழை படும் பாடு'' தமிழ்ப் படமும், ''ஜீவிதம்'' தெலுங்குப் படமும் சிறந்தவை. நாகய்யாவும், அஞ்சலி தேவியும் சிறந்த நடிகர், நடிகை'' இது சர்க்காரால் நிடமிக்கப்பட்ட சினிமாப் படக் கழக அங்கத்தினர்களின் முடிவாகும். இந்த முடிவை சென்னை சர்க்கார் அங்கீகரித்து விட்டனர். கழக அங்கத்தினர்கள், தமிழ்-மலையாளப் படங்களை ஒரு பிரிவாகவும், தெலுங்கு கன்னடப் படங்களை ஒரு பிரிவாகவும் கொண்டு பரிசீலனை செய்தார்கள். முதல் பிரிவில் 'ஏழை படும் பாடு'', "திகம்பர சாமியார்'', "மந்திரி குமாரி'', ''பிரசன்னா'' ஆகிய படங்களும், இரண்டாம் பிரிவில் 'ஜீவிதம்'', "சம்சரரம்'', "சாஹஸ்கார்'' ஆகிய படங்களும் பார்வையிடப்பட்டு மேற்படி முடிவு செய்யப்பட்டுள்ளது. படங்களைத் தயாரித்தவர்களுக்கு ரூ. 350-க்கு மேற்படாமல் கோப்பைகளும், நக்ஷத்திரங்களுக்கு ரூ. 150-க்கு மேற்படாமல் மெடல்களும் சர்க்காரால் பரிசளிக்கப்படும். பரிசளிப்பு வைபவத்திற்கு ஏற்பாடு செய்யும்படி சர்க்கார் கழகத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

கலைஞர்களுக்கு வரவேற்பு

தங்களது சங்கத்தின் அங்கத்தினர்களான, (ஜெமினி ஸ்டுடியோவை சேர்ந்த) வி ராமஸ்வாமி, எம் எஸ். ஜானகிராம் இருவரும் மேனாடுகள் சென்று திரும்பி வந்ததைப் பாராட்ட ஸினி டெக்னீஷியன்கள் சங்கத்தினர் ஒரு வரவேற்புக் கூட்டத்தை நடத்தினார்கள். சென்ற மாதம் 11-ம் தேதி இந்தக் கூட்டம் டைரெக்டர் கே. ராம்னாத் தலைமையில் நடைபெற்றது.

சட்டசபையில் கலைஞர்கள்!

மைசூர் மேல் சபைக்கு, பிரபல பிடில் வித்வான் டி. சௌடய்யாவும், நாடக—சினிமா நடிகர் குப்பி வீரண்ணாவும் அங்கத்தினர்களாக நியமனம் ஆகியுள்ளனர். இது கலைஞர்களுக்கு செய்யப்படும் ஒரு பெரும் கௌரவமாகும்.

கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்

சென்னை ராஜ்ய தியேட்டர்காரர்கள் மகாநாடு ஒன்று, சென்ற மாதம் 3-ம் தேதி, தென்னிந்திய பிலிம் சேம்பர் காரியாலயத்தில் நடந்தது. தமாஷா வரி, லைசென்ஸ் அளிப்பது, இதைகள் சம்பந்தமாக சர்க்கார் விதித்திருக்கும் பல கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமெனப் பலர் பேசினார்கள்,

தமிழ்-தெலுங்குப் படங்கள்

நேஷனல் புரொடக்ஷன்ஸார் தங்களது அமோக வெற்றி பெற்ற ''சிங்

ஜூன் 21உ
வெளிவருகிறது
மாடர்ன் தியேட்டர்ஸ்
கல்யாணி
டைரக்ஷன்
ஆச்சார்யா & மஸ்தான்

காரி" தமிழ்ப் படத்தைத் தெலுங்காக்கி முடித்துவிட்டார்கள். சீக்கிரமே இப்படம் ஆந்திர தேசத்தில் திரையிடப் படுமெனத் தெரிகிறது. நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸார் தங்களது "அமர கவி" தமிழ்ப் படத்தைத் தெலுங்காக மாற்றும் முயற்சிகளைச் செய்து வருவதாகத் தெரிகிறது.

ஹிந்தி - தமிழ்ப் படங்கள்

வட இந்தியாவிலுள்ள ஹிந்திப் படத் தயாரிப்பாளர்களில் பலர் தங்கள் படங்களைத் தமிழிலும் தயாரிப்பதில் முனைந்திருக்கின்றனர். டைரெக்டர் மெஹ்பூப்பின் "ஆன்" தமிழில் தயாராகி முடிவடைந்து விட்டது. பிரபல படத் தயாரிப்பாளரான ஜகதீஷ் சேதி என்பவர் தாம் தயாரிக்கப் போகும் ஹிந்திப் படத்தைத் தமிழிலும் தயாரிக்கத் தீர்மானித்திருக்கிறாராம். பிரபாகர் பிக்சர்ஸார் சரித்திரப் பிரசித்தி பெற்ற "சத்ரபதி சிவாஜி"யை ஹிந்தி-மராத்தி இரு மொழிகளிலும் தயாரித்து வருவதுடன் தமிழாக்கும் வேலையையும் தொடங்கி விட்டார்களாம். டைரெக்டர் சாந்தாராம் "சிவ லீலா"வைத் தமிழ் பேச வைக்கப் போகிறாராம். பிருத்விராஜ் கபூர் தாம் தற்போது தயாரித்து வரும் ஒரு படத்தை உடனுக்குடன் தமிழாக்கி வருகிறார். அடுத்தபடி, அவர் தயாரிக்கப் போகும் "அஜந்தா" என்ற படத்தையும் கூட தமிழாக்கப் போகிறாராம். பிலிம்ஸ்தானின் "ஆனந்த மடம்" தமிழாகி வருகிறது. வட இந்தியா சென்று ரஞ்சன் நடித்த முதல் படமான "ஷின் ஷினுகி பூப்லாபூ"வைக் கூட தமிழாக்கலாமா என்று யோசித்து வருகிறார்களாம்.

புதுப் படங்கள்

லலிதா-பத்மினி-ராகினி மூவரும் முக்கிய பாத்திரங்களில் நடிக்கும் "மூன்று சகோதரிகள்" என்ற படத்தை, புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள க்ளோபாடோன் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியார் தமிழ்-மலையாளம் இரு பாஷைகளிலும் தயாரிப்பார்களாம். ரேவதி ஸ்டுடியோவில், ஒரு புதிய டைரெக்டரின் டைரெக்ஷனில் படப் பிடிப்பு சீக்கிரமே ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

தியாகராஜ பாகவதர், சியாமளா ஸ்டுடியோஸ் கூட்டுறவில் ஒரு படம் தயாரிக்கப் போகிறார். அவர் அதற்கான பூஜையை ரகஸியமாகவே நடத்தியிருக்கிறார். படத்தின் பெயர் "நல்ல காலம்" என்றும் பிரதம பாகத்தில் அவருடன் பிரபல நக்ஷத்திரங்கள் நடிப்பார்கள் என்றும் தெரிகிறது.

பட்டேல் இந்தியா கம்பெனியில் இருந்து, மேனாடுகளுக்குச் சென்று வந்த எம் ஆர் விட்டல் என்பவரது முயற்சியில் 'விக்டரி பிக்சர்ஸ்' என்ற புதிய படக் கம்பெனி தோன்றியுள்ளது. இவர்கள் "மர்ம மாளிகை" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். படத்தை எம். ஆர். விட்டல் டைரெக்ட் செய்வாரென்றும், சங்கீத டைரெக்டராக குன்னக்குடி வெங்கடராம அய்யர் ஒப்பந்தம் செய்யப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது. டி. சூர்யகுமாரி, எஸ். பாலசந்தர் விஜயகுமார், செல்லம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கப் போகிறார்களாம்.

டைரெக்டர் ஏ. எஸ் ஏ. சாமி, பக்ஷிராஜாவின் கூட்டுறவில் "ரிக்ஷாக்காரனை"ப் படமாக்கும் பூர்வாங்க வேலைகளில் முனைந்திருக்கிறாராம். இப்படத்தில் லலிதா-பத்மினி சகோதரிகளும், டி. எஸ். துரைராஜும் நடிக்க ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்களாம்.

சங்கீத உலகின் நஷ்டம்

கர்நாடக சங்கீத உலகில் ரத்னமாக விளங்கிவந்த பங்களூர் நாகரத்னம் அம்மாள் சென்ற மாதம் 19-ம் தேதி காலமானார். அவரது மறைவு சங்கீத உலகுக்கு ஒரு பெரிய நஷ்டமாகும். 1878-ம் ஆண்டு மைசூரில் பிறந்த அவர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளிடம் ஆழ்ந்த பக்தி கொண்டு, தமது இறுதிக் காலம் வரை ஸ்வாமிகள் சமாதியான திருவையாறிலேயே வசித்து வந்தார்.

சபா நிகழ்ச்சிகள்

தாம்பரம் சங்கீத சபாவின் ஆதரவில், சென்ற மாதம் 18-ம் தேதி ஆலத்தூர் சகோதரர்களின் இன்னிசைக் கச்சேரி தக்க பக்க வாத்தியங்களுடன் நடைபெற்றது.

ஸ்ரீ பார்த்தசாரதி சபாவின் ஆதரவில் அதே தினத்தில் கேரள சகோதரியரது நடனக் கச்சேரி நடைபெற்றது.

சென்ற மாதம் 18-ம் தேதி, பைன் ஆர்ட்ஸ் ஸென்டரின் ஆதரவில் ஜி. என்.



சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் தயாராகிவரும் "காடு" என்ற ஆங்கிலப் படத்தில் இந்த அழகிகளின இந்திய நடனக் காட்சி இடம்பெற்று வருகிறது.

பி. யின் சிஷ்யரான டி. வி. விஸ்வநாதனின் இன்னிசைக் கச்சேரி, தக்க பக்க வாத்தியங்களுடன் நடைபெற்றது

"அழகி"யின் ஆரம்ப விழா

சென்ற மாதம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸில் "அழகி"யின் ஆரம்ப விழா நடைபெற்றது. ராஜலக்ஷ்மி பிக்ஸ், மானேஜிங் டைரெக்டர் ஆர். எதிராஜுலு கேமிராவை முடுக்கி, படத்தை ஆரம்பித்து வைத்தார். இது பரிமளா பிக்சர்ஸ்-ஜூபிடர் பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பாகும். எஸ். ஏ. நடராஜன், எம். என். நம்பியார் பிரதம பாகங்களில் நடிக்கவிருக்கும் இப்படம் சுந்தர் ராவ் நட்கர்னி டைரெக்ஷனில் தயாராகும்.

நாட்டியக் கச்சேரிகள்

சென்ற மாதம் 4-ம் தேதி, பொள்ளாச்சி குமாரி கமலாவின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. ஏழை மாணவர்கள் நிதிக்காக இக்கச்சேரி செயின்ட்மேரீஸ் ஹாலில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அன்றையக் கச்சேரிக்கு மந்திரி கனம் யூ. கிருஷ்ண ராவ் தலைமை வகித்தார்.

சென்ற மாதம் 14-ம் தேதி, சென்னை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் குமாரிகள் சௌ. வி. லக்ஷ்மி, சௌ. வி. சுஜயா இருவரின் பரத அரங்கேற்றம் நடைபெற்றது. இவ்விருவரும் மாஜி நடிகர் வத்ஸல்-வத்ஸலா தம்பதிகளின் புத்திரிகள்; (மாஜி பேபி) சரோஜாவின் சகோதரிகள்; கௌசல்யாவின் சிஷ்யைகள்.

ஸினி ஸர்விஸஸ்

பட உலகில் பல துறைகளில் அனுபவம் பெற்றவரும், 'நடிகை" படத்தின் டைரெக்டருமான டி. ஜானகிராமன் 'ஸினி ஸ்ர்விஸஸ்' என்ற ஸ்தாபனத்தை சென்ற மாதம் 18-ம் தேதி ஆரம்பித்திருக்கிறார். ஏ. ராமய்யாவின் தலைமையில் டைரெக்டர் எச். எம். ரெட்டி இதை ஆரம்பித்து வைத்தார்.

வாழ்த்துகிறோம்

பிரபல மூக்குத்தூள் வியாபாரிகளான டி. ஏ. எஸ். ரத்தினம் பிரதர்ஸ்,

எஸ். ஆர். ஞானம் அண்டு கம்பெனி இவைகளின் முதலாளியான டி. எம். பி அய்யா நாடார், தமது மகன் சிரஞ்சீவி ஞானசுந்தரத்தின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தினர். சென்னை, தண்டையார் பேட்டையில் இந்த விவாகம் சென்ற மாதம் 8-ம் தேதி யன்று நடைபெற்றது. "ஸவரன்" பாக்குத்தூள் தயாரிப்பாளர்களான ஹோப் அண்டு கம்பெனி முதலாளி எஸ். பொன்னுசாமி நாடாரின் செல்வி சௌ சியாமளா தேவிதான் மணமகள். மாலையில் சிறப்பான முறையில் வரவேற்பு நடைபெற்றது.

நமது பத்திரிகையின் புதுக்கோட்டை திருச்சி ஏஜண்டுகளான பழனி அண்டு கம்பெனியின் முதலாளி பி. ஆர். முத்து பழனியப்ப செட்டியார், தமது மகனும், தமது கம்பெனியின் மானேஜருமான எம். மீனாக்ஷி சுந்தரத்திற்கு சௌ. வல்லிக்கண்ணம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். இந்த விவாகம் குருவிக்கொண்டான் பள்ளியில், சென்ற மாதம் 19-ம் தேதி நடைபெற்றது.

பிரபல புகையிலை வியாபாரிகளான இ. எஸ். மைதீன் அண்டு கம்பெனியின் முதலாளி இ ஷைக் மைதீன் ராவுத்தர் மகள் ஸலிஹான் பீகத்தின் திருமணம் வெகு சிறப்பாக சென்ற மாதம், 19-ம் தேதி யன்று மணமகன் எம். டஜுடீன் இல்லத்தில், நாச்சியார் கோயிலில் நடைபெற்றது. மாலையில் மேலக் காவிரியில் மணமகளின் இல்லத்தில் பிரமாதமான வரவேற்பு ஒன்று நடைபெற்றது.

புதுப் படம்

புதிதாக ஆரம்பமாகியுள்ள பானு ஆர்ட் புரொடக்ஷன்ஸ் என்ற கம்பெனியார், சேலம் ரத்னா ஸ்டுடியோவில் ஒரு தமிழ் சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். இப்படத்தில் நடிக்க மனோஹர், எம். என். நம்பியார் ஆகிய இருவரும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகவும், ரஞ்சனா என்ற புதிய முகம் கதாநாயகியாக நடிக்கலா மென்றும் தெரிகிறது.

காம சாஸ்திரம்

★

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்–பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோப் படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் தூய்ப்பதுமானவை. இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாசம் :

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G. M.),
JULLUNDUR CITY.

நடிகர்—டைரெக்டர் வி. நாகய்யா தயாரித்து வரு
"என் வீடு" தமிழ்—தெலுங்குப் படங்களில் டி. ஆர்.
ராஜகுமாரி முக்கிய பாகத்தில் நடித்து வருகிறார்.

டி. ஆர். மஹாலிங்கத்தின் நிரந்தரக் கதா
நாயகியான எஸ். வரலக்ஷ்மி "சின்ன துரை"
யிலும் அவருடன்கூட நடித்து வருகிறார்.

தமிழ்ப் பட உலகில் (பி. எஸ்.) 'சரோஜா ஸீஸன்' ஆரம்பமாகி விட்டது! ''கல்யாணி'' தமிழ்ப் படத்திலும் அவர்தான் கதாநாயகி.

வெகு விரைவில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் எம். சரோஜாவுக்கு மாடர்ன் தியேட்டர்ஸ் 'கல்யாணி''யில் நிறைய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதாம்.

134135

பொதுஜனம் பேசுகிறார்

*தவறான அபிப்பிராயம்

ஏப்ரல் மாத "குண்டூசி" இதழில் 'நடிகை அலங்காரம்' என்ற கடிதத்தை எழுதிய தோழர் ஒருவர், தவறான அபிப்பிராயத்தை உண்டு பண்ணியதற்கு வருந்தவேண்டியிருக்கிறது. அவர் குறிப்பிட்டுள்ள "பாலித் தீவின் கன்னிகளும், கடல் கோமாளிகளும்" என்ற ஆங்கிலப் படங்களை நான் பார்த்துள்ளேன். அதில் "பாலித்தீவின் கன்னிகள்" என்ற தனி டாக்குமெண்டரி போன்ற ஒரு படமும், "கடல் கோமாளிகள்" என்ற மற்றொரு ஆங்கிலப் படமும், ஆக இரு படங்கள் அதில் இணைந்துள்ளன. பாலித் தீவில் மக்கள் எவ்விதம் வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்ற பகுதியை உள்ளபடி காட்டும் ஒரு செய்திப் படமாகத்தான் "பாலித் தீவின் கன்னிகள்" எனக்குப் பட்டதே யொழிய, நடிகைகளை இதற்கெனத் தனியாக நடிக்கவைத்து அது எடுக்கப்பட்ட ஒரு ஆபாசமான படம் என்று எனக்குத் தோன்றவில்லை! பல்வேறு நாட்டில் வாழும் மக்களது நடவடிக்கைகளை, செய்தி ரூபத்தில் படமாகப் பிடித்துக் காட்டுவதைக் குற்றம் என்று சொல்ல முடியாது. வேண்டுமானால், அந்தப் படத்தின் விளம்பர 'போஸ்டர்கள்' ஆபாசமான எண்ணத்தை உண்டு பண்ணுகின்றன என்பதற்காக அந்த மாதிரி விளம்பரம் செய்வதைக் கண்டிக்கலாம். மற்றபடி நண்பர் படத்தைப் பார்க்காமலேயே அந்தப் படத்தின்மீது மக்கள் தவறான அபிப்பிராயம் கொள்ளும்படி எழுதியது கூடாததுதான். ஆங்கில நடிகைகளின் ஆபாசத் தோற்றத்தைப்போல் தமிழ் நடிகைகள் தோன்றக் கூடாது என்பது எவ்வளவு பாராட்டத்தக்கதோ, அவ்வளவு வருத்தப்படக்கூடிய செய்திதான் ஆங்கிலப் படத்தின் விளம்பரத்தைக் கண்ட மாத்திரத்திலேயே அதனைப் பார்க்காமல் அதனைப்பற்றி தவறாக மதிப்பிட்டு அபிப்பிராயம் கூறுவதும்!

எம். எம். பொன்னுசாமி,
கரூர்.

துஷ்பிரசாரமா?

"குண்டூசி" ஏப்ரல் இதழில் ஒரு சகோதரி, "துஷ்பிரசாரம்" என்ற தலைப்பில் ஒரு கடிதம் எழுதி யிருந்ததைப் படித்தேன். "கோவிலுக்கும், கும்பாபிஷேகத்துக்கும் செலவிடுவதை, காலேஜுக்கும், தரும சாலைக்கும் செலவிடுவது தானே" என்ற வசனத்தை "துஷ் பிரசாரம்" என்று குறிப்பிட்டது சரியாகத் தோன்றவில்லை. "அக்காலத்தில் அவர்கள் யோசித்திருந்தால் நாம் கலைச் செல்வங்களைக் காண முடியுமா!" என்ற அவர் வாதம் சரியானது என்றாலும், அக் காலத்துக்கும் இக் காலத்துக்கும் வித்தியாசம் இல்லையா? செல்வம் கொழித்து நாடெங்கும் வளம் நிறைந்திருந்த அந்த நாளில் கலை பெருகியது; சிற்பிகள் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடுபட்டு சிற்பங்களை உருவாக்கவில்லை. உள்ளம் நிறைந்த பக்தியுடன் கலாதேவி உபாசனையாக மதித்து செதுக்கவே தான் நாம் உயிருள்ள சிற்பங்களைக் கண்டு ரஸிக்கிறோம். இந்த காலத்தில் அரை வயிற்று உணவுக்கும், ஏன் குடிக்கத் தண்ணீருக்கும் கூடத் திண்டாடும் போது, குழந்தைகளுக்கு சம்பளம் கட்ட முடியாமலும், காலேஜில் இடமில்லாமலும், அரைகுறைப் படிப்புடன் நிற்க வைத்து பரிதவிக்கும் இந்நாளில், கோவிலுக்குக் கொடுப்பதைக் கடவுளே மன்னிக்க மாட்டார். நோய்க்கு வைத்தியம் செய்யப் பணமில்லாமலும், தரும வைத்தியசாலைகளில் இடம் போதாமலும், ஏழை மக்கள் மடியும் போது கும்பாபிஷேகம் தடபுடலாய் நடந்தால்

* பரிசு பெற்ற கடிதம்: எம். எம். பொன்னுசாமி, 6/55, ஆலமரம் தெரு, கரூர்.

அந்த ஆண்டவனே ஏற்க மாட்டார். அந்தப் படத்தில் உபயோகமாயும், நன்ருயு மிருந்த வசனம் இது ஒன்றுதான். " துஷ்பிரசாரம் " என்று பயப்படுவது அனுவசியம். பணமுள்ளவர்கள், உண்மையில் ஆண்டவன் அருளை வேண்டினுல், கலாசாலைகளுக்கோ, தரும வைத்தியசாலைகளுக்கோ உதவுவதுதான் தற்கால மனித தர்மம். இதைக் கூறுவது துஷ்பிரசாரமல்ல!

ராஜேஸ்வரி மாத்ருபூதம்,
மயிலாப்பூர்—சென்னை.

விளம்பரம் வேண்டும்

செய்திப்படங்கள் என்ருலே தலையைத் தொங்க விட்டு, உதட்டைப் பிதுக்கும் காலமும் சில மாதங்களுக்கு முன்பு வரை இருந்தது. ஆனுல், தற்சமயம் நிலைமை முற்றிலும் மாறுபாடடைந்து விட்டது. 'டாகுமென்டரி பில்ம்' என்று கூறும் போதே ரஸிகர்கள் உள்ளத்தில் இப்போது ஆர்வம் தோன்றுவது கண்கூடு. உதாரணமாக, தற்போது சில மாதங்களுக்கு முன் வாஹினி ஸ்டுடியோவில் நடந்த 'கார்னிவல்-விழா', சென்னையில் நடைபெற்ற 'சினிமா நடிக-நடிகையர் கிரிக்கெட் ஆட்டக் காட்சி' ஆகிய செய்திப் படங்களைக் காணத் துடித்த ரஸிகர்களை எல்லோரும் அறிவார்கள். அதற்காக ஒரு குறிப்பிட்ட தியேட்டரை முற்றுகை யிட்ட ஒரு சிலர், இந்தப் பகுதி வேறு தியேட்டருக்கு மாற்றப் பட்ட காரணத்தால் மனம் உடைந்து போனுர்கள். இக் குறை நீங்க ஒவ்வொரு தியேட்டர் முதலாளியும், பிரதி வாரம் தங்கள் தியேட்டர்களில் காட்டப்படும் செய்திப் படங்களை விளம்பரப் படுத்த வேண்டும். ரஸிகர்கள் ஆதரவை அதிகம் பெறக்கூடிய இம் முயற்சியைக் கையாள தியேட்டர் முதலாளிகள் தயங்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆர். தங்கவேலன்,
திருச்சி.

அளவிலா உற்சாகம் அளிப்பது

நீலகிரி காபி

தலைமை ஆபீஸ் :
28 வெங்கடாஜல முதலி தெரு,
பீ. டி. சென்னை.
கிளை : 82 நாட்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
— 89 பாண்டி பஜார், —
தியாகராயநகர், : : சென்னை—17.

சுவரொட்டிகள்!

புதுப் படங்கள் திரையிடப்படும் சமயம், கண்ணைப் பறிக்கும் கலர்களில் நக்ஷத்திரங்களின் படமும், கொட்டை எழுத்தில் படத்தின் பெயரும் அச்சடித்த சுவரொட்டிகளை ஒட்டி விடுகிருர்கள். இரண்டு நாட்களுக்கெல்லாம் அந்த சுவரொட்டிகள் இருக்கும் அலங்கோலத்தை நினைத்தால் சிரிப்பு வரும். கண்ணின் மீதோ, மூக்கின் மீதோ, அழகாக சிரித்துக் கொண்டிருக்கும் பல் வரிசைகளின் மீதோ, களிமண்ணையோ அல்லது சாணியையோ வீசி எறிந்து வீணடித்து விடுகிருர்கள். பெண் நடிகர்களின் படத்திற்கு அழகான மீசைகூட எழுதி விடுகிருர்கள். இக் கண்ணருவிக் காக்ஷியை, அப்படங்களின் அலங்கோலத்தை, நாம் போகும்போதும் வரும்போதும் பார்த்துச் சகிக்க வேண்டியிருக்கிறது. சுவர்களில் வீணுகப் படங்கள் ஒட்டவும் வேண்டாம; இப் பரிதாப காக்ஷிகளைப் பார்க்கவும் வேண்டாம். எப்படியும் புதிதாக வெளிவரும் படங்களை ஜனங்கள் பார்க்காமல் விடுவதில்லை. சுவற்றில் ஒட்டப்படும் சுவரொட்டிகளைக் கொண்டு யாரும் படம் பார்க்க வருவதில்லை. ஆகவே, வீணுக சுவரைப் பாழ்ப்படுத்தாமல் இருப்பதே நல்லது.

ஏ. வி. செல்லம்மாள்,
கடலூர்.

நேர்மை படும் பாடு!

ஜெமினிக்கு இந்தியாவெங்கும் செல்வாக்கும், புகழும் மிகப் பெருமளவிலே வளர்ந்து வரும் நேரத்தில், ஸ்ரீ. வாஸன் நேர்மை தவறி விட்டார் என்றால் அது மிகவும் வருந்தத்தக்கதே. அவர் நினைத்தால்—விரும்பினால்—முயற்சித்தால் பல இளம் எழுத்தாளர்களுக்கு சந்தர்ப்பமளித்து. திறமையான டைரெக்டர்களின் உதவியைக் கொண்டு பல புதிய பயனுள்ள படங்களைத் தயாரித்துத் தரமுடியும். ஆனால், அவரோ பிறரின் கதைகளை மட்டுமல்ல, அவைகளைத் தழுவி எடுக்கப்பட்ட படங்களின் 'காட்சி'களைக் கூட அதிலுள்ள படியே தன்னுடைய படங்களில் சேர்த்துக் கொள்கிறார் என்றால் அது தமிழ்ப் பட உலகிற்கே பெருத்த அவமானம்! எல்லாவற்றிலும் புதுமை காணும் வாஸன், ஏனோ, புதுப்புதுக் கதைகளை படமாக்க வேண்டுமென்பதை மட்டும் மறந்து விடுகிறார்?



ராட் கேமிரான், ஸீஸர் ரோமிரோ, மேரி வின்ஸர் ஆகியோர் மேனாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்து, மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் தயாரித்து வரும் "காடு" என்ற ஆங்கிலப் படத்தில் மேலேயுள்ள காட்சியைக் காணலாம்.

சமீபத்திய ஜெமினி வெளியீடுகளான "சன்ஸார்" "சம்சாரம்" இரண்டும் சாதனா பில்ம்ஸாரின் தெலுங்கு "சம்சார"த்திலுள்ள காட்சிகளைத் தழுவியும், வசனங்களை மொழி பெயர்த்தும், பிரஸாத்தின் டைரெக்ஷனைப் பின்பற்றியும் தயாரிக்கப் பட்டுள்ளன. ஆகவே, வாஸன் கதாசிரியர் சதாசிவ பிரம்மத்தின் பெயரையோ அல்லது சாதனா பில்ம்ஸ் தயாரித்த படத்தின் தழுவல் என்பதையோ படத்தின் ஆரம்பத்தில் காட்டியிருக்க வேண்டும். ஆனால், அப்படி செய்யப்படவில்லை.

பணம் கொடுத்து உரிமைகளைப் பெற்றுவிடுவதாலேயே அது ஜெமினியின் சொந்தத் தயாரிப்பாகி விடுமா? அல்லது அவ்வாறு செய்யப்பட்டால் வடநாட்டில் ஜெமினிக்குள்ள புகழ் மங்கிவிடுமா? இரண்டுமில்லை. எனவே, இனியாவது அவர் இம்மாதிரி விஷயங்களில் கண்ணியத்துடனும் நேர்மையுடனும் நடந்து கொள்வாரா?

"புரட்சிப் பித்தன்", மதுரை.



மானேஜர் :—அடேடே! எதற்காக அப்பா இப்படியெல்லாம் முட்டுக் கொடுக்கிறாய் ?......

வேலையாள் :—இன்னிக்கு, "இடியும் புயலும்" நாடகம் நடக்கப் போறதில்லிங்களா. கொட்டகைக்கு ஏதுனாலும் ஆபத்து ஏற்படாமலிருக்கணும்: பாருங்க!......

அபாரம் " அந்தமான் கைதி !"

இத் தலைப்பைக் கண்டதும் பல வாசகர்கள் திகைப்படைவார்கள். "அந்தமான் கைதி"யைப் பற்றி, ஏப்ரல் "குண்டூசி"யில் வெளியான "ஜாம்பவானி"ன் விமர்சனம்தான் அபாரம் என்று கூறுகிறேன். மறுமலர்ச்சிக் கதை என்று சொல்லப்படும் ஒரு படத்தில், மந்திரவாதியைக் கொண்டு புகுத்தியிருப்பது மிகவும் மட்ட ரகம். பகுத்தறிவுள்ள தமிழகத்துக்கு அவமானம் தரக்கூடியதாகும். அங்க முத்துவும், கருப்பய்யாவும் ஆடும் ஆங்கில நடனம், மிகவும் ஆபாசமானது. அவசியம் கண்டிக்கக் கூடியது. திக்குறிச்சியைப் பற்றி, "ஜாம்பவான்" விருப்பு வெறுப்பின்றி, தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். எதற்கும் அஞ்சாது, உண்மை நிலையை எடுத்துக் கூறும் "ஜாம்பவான்" தொடர்ந்து பல படங்களுக்கும் விமர்சனம் எழுதுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

எம். எர். சுப்பிரமணியம்,
கரூர்.

முதிர்ந்த நடிகர்கள் !

சினிமாக் கலை வளர்ச்சிக்கு எவ்வளவுதான் ஆலோசனை கூறினாலும் ஒரே ஒரு விஷயத்தில் கவனம் செலுத்தினல் முக்கால் வாசி வளர்ச்சி ஏற்பட்டு விடும். நம் சினிமா நக்ஷத்திரங்களில் பலர் வயதான பிறகும்கூட முக்கிய பாத்திரங்களில் நடிப்பது அவ்வளவு வரவேற்கத் தக்கதேயல்ல. தொந்தி சரிந்த நடிகர்கள் டீக்காக உடை உடுத்திக் கொண்டு கதாநாயகனைக வந்து காதல் செய்யும் பொழுதும், 'தொக்கை' நடிகைகள் நடனம், என்று சொல்லிக் கொண்டு 'தொம் தொம்' என்று குதிக்கும் பொழுதும் எவ்வளவு மனக் கஷ்டமாக இருக்கிறது. வயதான பிறகும் கூட நடிக்க வேண்டுமென்ற ஆசை (அல்லது பணங் குவிக்கவேண்டு மென்ற ஆசையோ) நம் நடிகர் நடிகைகளுக்கு இருப்பது வருந்தத் தக்கது. அப்படி நடிப்பதனல் அவர்களுடைய பழய கௌரவமும் புகழும் குறையுமே தவிர வேறொரு பலனும் ஏற்படாது. ஆகையால், அவர்கள் வயது வந்ததும் புத்திசாலித்தனமாகத் திரையிலிருந்து தாமாகவே விலகி விடுவது நல்லது. இப்படிச் செய்தால் தான் புதிய நடிகர்களுக்குத் தாராளமாக இடம் கிடைக்கும். இதனல் அவர்கள் கலை உலகுக்கு மாபெரும் சேவை செய்தவராவார்கள்.

ஆர். எஸ். எஸ். மணியம்,
காத்தான்குடி, (சிலோன்)

செய்வார்களா ?

சென்னையிலே சர்வதேச பிலிம் விழா நடைபெற்றது; அங்குள்ளவர்கள் மட்டுமே உலகத்திலுள்ள சிறந்த படங்களைப் பார்த்து ரசிக்க முடிந்தது. மற்றய நகரங்களிலுள்ள ஜனங்கள் அப்படங்களைப் பார்க்க முடியவில்லை. கலை ஆர்வமும் பிறநாட்டுக் காட்சிகளையும், நடிப்பையும் கண்டு களிக்க முடியாமல் மிகவும் ஏமாந்து விட்டனர். இந்த ஏமாற்றத்தைத் தடுக்க, பிலிம் விழாவில் திரையிடப்பட்ட அத்தனை படங்களையும் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு நகரிலுள்ள சினிமாத் தியேட்டர்களிலும் குறைந்தது நான்கு நாட்களாவது காண்பித்து, மக்களுக்குக் கலையின் மூலம் பிறநாட்டு நேசத்தை ஊட்ட, சென்னை சர்க்காரும் டெக்னீஷ்யன் சங்கத்தின

ரும் ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ப. சு. பரமசிவம்,
திருநெல்வேலி.

கலைஞன் தொண்டு

சினிமா நக்ஷத்திரங்கள் ஆணாயினும் சரி, பெண்ணாயினும்சரி பணத்துடன் கூட தாராள மனப்பான்மை படைத்தவர்கள் என்று நான் நினைக்கிறேன். தாங்கள் 'காந்தி நிதி' திரட்ட ஆரம்பித்த பொழுது நடிகர் டி. ஆர். ராமச்சந்திரன் ரூ 501|-ஐ நிதிக்காக அளித்து விட்டு, எழுதியிருந்த கடிதம் ஒன்றை "குண்டூசி" பழைய இதழொன்றில் பிரசுரித்திருந்ததை இதற்குச் சான்றாகக் கூற விரும்புகிறேன். பணம் படைத்தவர்கள் அதை நல்லதொரு முயற்சியின் முதலீடாக ஆக்குவது அவர்கள் மதிப்பை மேலும் உயர்த்தக்கூடிய செய்கையாகும்.

சமீபத்தில் ராயலசீமை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடும் பஞ்சநிலை, உணர்ச்சியுள்ள ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தையும் உருகச் செய்யும். கலை, கலை யென்று கனவிலும் கதறும் கலையன்பர்கள் இந்தக் கஷ்டத்தை நீக்கக் கை கொடுக்கட்டுமே! அதிலும் கலைகளில் மேம்பட்ட (பணவசதியின் தரத்தில்தான்) சினிமாக் கலையைப் பேணி வளர்ப்பவர்கள் என்று கூறிக்கொள்ளும் சினிமா நடிகர், நடிகைகள் இதில் விசேஷ கவனம் செலுத்தக் கூடாதா? மனிதன் வாழ்வதே ஒரு பெரும் கலையல்லவா? மனிதன் உயிரோடு தங்கிய பிறகே அல்லவா கலைக்கு மௌசு? மனித வர்க்கமே பஞ்சத்தால் அழிந்த பிறகு, நாயும், பூனையும், நரியுமாகவா கலையை விருத்தி செய்யப் போகின்றன? எனவே, சினிமா நக்ஷத்திரங்கள்—உண்மையாகக் கலைக்குத் தொண்டு செய்பவர்களாயிருக்கும் பக்ஷத்தில், உணர்ச்சிப் புயலில் ஊசலாடும் மென்மை இருதயம் படைத்தவர்களாயிருந்தால் — ஆயிரம், இரண்டாயிரமென்று பாராமல் "பஞ்ச நிவாரண நிதி" உதவிக்கு அளிக்கட்டும்.

கே. எஸ். மணி, ஆவடி.

புஸ்தகப் பொழுது

குழந்தை உலகம்

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன். விலை: ரூ. 2. கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை—18.]

ஏற்றம் இறைப்பவன், வண்டி இழுப்பவன்—இப்படிக் கடுமையான வேலைகளைச் செய்வோர், சிரமம் தெரியாமலிருக்க பாடிக்கொண்டே அந்த வேலையைச் செய்கின்றனர். அம்மாதிரியான நாட்டுப் பாடல்கள் எவ்வளவு உயர்வானவை, எவ்வளவு சிறப்பான கருத்துகள் அமைந்தவை என்பதை ஊன்றிப் படித்தால்தான் தெரியவரும். பல நாட்டுப் பாட்டுகளின் தொகுப்பே இந்தப் புஸ்தகம். இந்தப் புத்தகத்தில் குழந்தைகள் ரஸிக்கும்படியான இருபது பாடல்கள் இருக்கின்றன.

சிநேகிதி

[ஆசிரியர்: 'அகிலன்' விலை: ரூ. 2-8-0. கிடைக்குமிடம்: பழனி பிரசுரம், மணிக்கூண்டு, புதுக்கோட்டை.]

எழுத்தாளர் ஒருவரும், வயது முதிர்ந்த நாராயணசாமியும் சிநேகிதராகிறார்கள். நாளடைவில், வயோதிகரின் மனைவியும், இந்த எழுத்தாளரின் ரஸிகையுமான இளம் மனைவி லலிதா எழுத்தாளரின் சிநேகிதி ஆகிறாள். அவ்விருவரையும் பற்றி அவதூறான செய்திகள் பரவுகின்றன. ஆனால், அவர்கள் எவ்வளவோ நெருங்கிப் பழகியும், ஒருவர்பால் மற்றவர் அன்பு கொண்டிருந்தும், முறை தவறி விடாமல் இருந்து வருகின்றனர். சந்தர்ப்பங்களும், சூழ்நிலையும் அவர்கள் தவறிவிட உதவும் போதுங்கூட அவர்கள் திடமாக இருப்பதையும், மன அவஸ்தைகளுக்கு உள்ளாவதையும் வயோதிகர் காணாமல் கண்டு வருகிறார். அந்தப் பெருந்தன்மை வயோதிகரின் உள்ளத்தைத் தொடுகிறது. தம் மனைவியை எழுத்தாளரின் துணைவியாக்கி வைக்கிறார். இதுதான் நாவலின் சுருக்கம். இத்தகைய கருத்துள்ள ஒரு கதையை விரஸமில்லாமல் எவ்வளவு அழகாக எழுத முடியும் என்பதற்கு 'சிநேகிதி'யை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம் 'சிரஞ்சீவி இலக்கிய'ங்களை சிருஷ்டிப்பவர்கள்.

இசை அருவி (2ம் பாகம்)

[இயற்றியவர்: திருச்சி ஜி. தியாகராஜன். விலை: ரூ 1. கிடைக்குமிடம்: இசைக்குயில் பதிப்பகம், வீரேசுரம், திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி.]

ஆசிரியர் இயற்றியுள்ள எழுபத்தைந்து பாடல்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளன. அனைத்தும் சங்கீத மேடைகளில் பாடத் தகுதியான நல்ல கருத்துக்கள் அமைந்தவை. 'தமிழில் புதுக் கீர்த்தனைகள் வருவதில்லை' என்ற குறையை இப் புத்தகம் ஓரளவு போக்கும். சங்கீதவித்வான்களுக்கு மிகவும் பயன்படக் கூடியது.

நாடக விழா மலர்

சென்ற ஏப்ரல் மாதம், பம்பாய் மாதுங்காவில், பம்பாய்த் தமிழச் சங்கத்தினர் நாடக விழா ஒன்றை நடத்திய சமயம், ஒரு மலரையும் வெளிக்கொண்டு வந்துள்ளனர். அட்டையில் சங்கத் தலைவர் ஸ்ரீ. எஸ். ஏ. ஐயரின் படமும், உள்ளே நாடகங்கள் நடித்துக் கொடுத்த டி. கே. எஸ். கோஷ்டியினரின் படங்களும் பிரசுரம் ஆகியுள்ளன. சுத்தானந்த பாரதியார், கவிமணி, ரா. பி. சேதுப் பிள்ளை போன்றவர்களின் விஷய தானங்களும் மலரை அலங்கரிக்கின்றன.

ஆச்சாரியார் அலசுகிறார்

[ஆசிரியர்: 'வேம்பன்'. விலை: 8 அணா. கிடைக்குமிடம்: கன்னி வெளியீடு, 6/24, காந்திபுரம், கோயமுத்தூர்.]

தமிழன் பெருமை கொள்ளக்கூடிய ஐம்பெரும் காவியங்களில் ஒன்றான 'சிலப்பதிகார'த்தை இழிவு படுத்தும் முறையில் 'சிலப்பதிகாரமும் ஆரியக் கற்பனையும்' என்ற நூல் வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் என்ற ஒருவர் வெளியிட்டிருக்கிறாராம். அதற்கு

பதில் கூறுகிறது இந்தப் புத்தகம். ஆசிரியர் 'வேம்பன்' ஆச்சாரியாரின் எதிர்ப்பு ஒவ்வொன்ருக எடுத்து, அது அர்த்தமற்றது என விளாசி யிருக்கிருர்.

"ஜோதி" மலர்

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் "ஜோதி"பத்திரிகையின் ஆண்டு மலர் வரப் பெற்ரேம். இதன் விலை 12 அணு. மலரில் பல கட்டுரைகளும், ஒன்றிரண்டு கதைகளும், சில கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. பத்திரிகையில் அச்சுப் பிழைகள் ஏற்படுவது சகஜம். ஆனுல் பத்திரிகையின் பெயரையே 'ஜேதி' என்று கொட்டை எழுத்துக்களில் போட்டிருப்பது வெகுவாகக் கண்ணை உறுத்துகிறது.

வாழ்க்கை

[ஆசிரியர்: "சித்தார்த்தன்". விலை: குறிப்பிடப் படவில்லை. கிடைக்கும் இடம்: 79, சுப்பராய செட்டி தெரு, திருப்பாதிரிப் புலியூர்.]

பல சிறு கதைகளும், ஒரு கவிதையும், படங்களும் அடங்கி யுள்ளன "வாழ்க்கை" முதல் இதழிலே. இது ஒரு மாத வெளியீடு.

செங்கரும்பு

[ஆசிரியர் : 'அகிலன்'. விலை: ரூ. 1-4-0. கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

சிறு கதைக்கான லக்ஷணங்கள் தெரிந்து கதைகள் எழுதுகிறவர்கள் வெகு சிலர். அப்படிப்பட்டவர்களில் 'அகிலன்" ஒருவர் என்ற அபிப்பிராயத்தை இந்த சிறு கதைத் தொகுப்பு ஊர்ஜிதப்படுத்துகிறது. இதிலுள்ள ஏழு கதைகளும் விறுவிறுப்பாக உள்ளன. காதலே இல்லாமல் நல்ல கதைகள் எழுத முடியும் என்பதை எடுத்துக் காட்டுவது போல உள்ளன 'புகழ்', 'பசி' முதலிய கதைகள்.

வாழ்வுப் போராட்டம்

[ஆசிரியர் : எம். இஸ்மத் பாஷா. விலை: ரூ 1. கிடைக்குமிடம் : வாழ்வு இலக்கியப் பதிப்பகம், 146, துக்காம்பாளையம் தெரு, கும்பகோணம்.]

ஆசிரியரின் ஆறு சிறு கதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. கதைகளைப் படிக்கும் போது ஆசிரியர் இத் துறையில் இப்பொழுதுதான் கால் வைத்திருக்கிருர் என்பது தெள்ளெனத் தெரிகிறது.

பாணுதுறை மாணவன்

கும்பகோணம், பாணுதுறை உயர்நிலைப் பள்ளியினர் வெளியிடும் பத்திரிகை இது. முதல் இதழ், அபுல்கலாம் அஸாத்தின்

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 கடினமான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (R) MADRAS-1.

கிளை: 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.

இலங்கை ஏஜெண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82 MAIN ST., Colombo 11

படத்தை அட்டைப் படமாகக் கொண்டு சிறப்பான முறையில் அச்சாகி வெளிவந்திருக்கிறது. ஆசிரியர், மாணவர் பலரது பலவிதக் கட்டுரைகள் (தமிழ்-ஆங்கில-வடமொழிகளில்) அடங்கியுள்ளன.

குறிஞ்சித் தேன்

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன். கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18 விலை: ரூ. 3. பரிசுப் பதிப்பு ரூ. 5]

குறுந்தொகையிலிருந்து எடுக்கப்பட்ட ஏழு பாடல்களுக்கு இப் புத்தகத்தில் விளக்கம் கூறுகிறார் ஆசிரியர். பாரதம் பாடிய பெருந்தேவனார், இறையனார், தேவ குலத்தார், கோப்பெருஞ் சோழன், ஓதலாந்தையார், ஔவையார், அணிலாடு முன்றிலார், ஆகிய ஏழு பெரும் புலவர்களின் பாட்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. பெருந்தேவனார் பாடியுள்ள முருகப்பெருமானைப் பற்றிய பாட்டிற்கு தெள்ளிய நடையில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. 'உத்தம மகளிர் கூந்தலில் இயற்கை மணம் உண்டென' கருத்துக் கொண்ட பாடலுக்கு இரண்டாவதாக விளக்கம் கூறப்படுகிறது.

தலைவனிடம் கொண்ட நட்பை தலைவி தோழிக்கு எடுத்துக் கூறும் பாட்டாக உள்ள மூன்றாவது பாட்டின் விளக்கத்தில் பல அரிய விஷயங்கள் தெரிய வருகின்றன.

கோப்பெருஞ் சோழனின் பாட்டு நான்காவதாக இடம் பெறுகிறது. பொருள் ஈட்ட தலைவன் வேற்றூருக்குச் செல்ல நினைக்கிறான். இதை தலைவிக்கு, தோழி மூலமாக உணர்த்துகிறான். தலைவி வருத்தப்படுகிறாள். 'அன்பையும், அருளையும் விட்டு, துணைவியைத் துறந்து பொருள் ஈட்டச் செல்லும் அவர் உரவோரானால் அப்படியே இருக்கட்டும்', என்கிறாள் தலைவி. அவள் மன வெதுப்பலிலே எழும் பாட்டாக உள்ளது இது.

கார்காலத்தின் அறிகுறிகள் நன்றாக தோன்றுகின்றன. ஆனால், தலைவி அவைகளை கார்கால அறிகுறிகளாகக் கொள்ளவில்லை. 'கார்காலம் வரும்போது வேற்றூர் சென்ற அவர் வந்து விடுவதாக வாக்களித்துச் சென்றாரே! பொய் வழங்காத அவர் வராமல் இருப்பதனால் இன்னும் கார்காலம் வந்து நிலை கொள்ளவில்லை' என்கிறாள் தலைவி தோழியிடம். அவ்வளவு நம்பிக்கை தலைவன் மொழியிலே! இது ஐந்தாவது பாட்டாக விளக்கப்பட்டிருக்கிறது

கட்டுவித்தியிடம் 'தலைவன் வசிக்கும் மலையின் வளத்தை இன்னும் பாடு' என்கிறாள் தோழி. தலைவி அதைக் கேட்க ஆசைப்படுகிறாளாம்! இந்த அருவது பாட்டின் விளக்கத்தில் பழந்தமிழ் மக்களின் குறி சொல்லும் வழக்கத்தை நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர். 'அழகிய குடிகள் வாழ்ந்த சிற்றூரில் மக்கள் போய்விட்ட பின்னர் அணில் ஆடுகிற முற்றத்தைப்போல, தலைவன் பிரிவால்பொலிவிழந்து இருக்கிறேன்', என்று தலைவி தோழியிடம் கூறும் கடைசிப் பாட்டின் விளக்கத்தில் பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்களைப் பற்றிய விஷயங்கள் விளக்கப்படுகின்றன.

சங்க நூல்களுக்கு உரையுடன் கூடிய விளக்கத்தை யார் யாரோ எழுதியிருக்கிறார்கள். ஆனால், எல்லோரும் அதை முற்றும் சுவைக்கும்படியான எளிய வசன நடையில், எழுதியுள்ள இந்த விளக்கங்களைப் படிக்கும் போது நாம் கதை கேட்கும் குழந்தை நிலையை அடைகிறோம். ஆங்காங்கே காட்டியுள்ள தக்க உவமைகளும், வர்ணனைகளும், அழகுடன் அமைந்திருக்கின்றன. தமிழ் மொழியில் பற்றுள்ள ஒவ்வொருவருக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மிகவும் பயன் தரக்கூடிய நூல்கள் வரிசையில் முன்னணியில் நிற்கிறது இந்த 'குறிஞ்சித் தேன்'. படித்து முடித்தவுடன் தமிழ் இலக்கியத்தின் உயர்ந்த நறுமணத்தை முகர்ந்த ஒரு திருப்தியும் அடுத்த வெளியீட்டைப் பற்றிய ஆவலும் ஏற்படுகின்றன.

கம்பன் கெடுத்த காவியம்

[ஆசிரியர்: 'நஞ்சுமுறி'. விலை: 8 அணா. கிடைக்குமிடம்: கன்னி வெளியீடு, 6/24, காந்திபுரம், கோவை]

கம்ப ராமாயணத்தைக் குற்றம் கூறக் கிளம்பியுள்ள 'பிரஹஸ்பதி'களில் ஒருவரின் புஸ்தகத்திற்கு, சூடு கொடுக்கிறது இப் புஸ்தகம். இம்மாதிரி நஞ்சுகளை முறிக்கக் கிளம்பியிருக்கும் 'நஞ்சுமுறி'யைப் பாராட்டவேண்டும்.

பெற்ற மனம்

ஸி. ஸரோஜா

சிறு கதை

குழந்தை பரிமளாவின் கையைப் பிடித்துக் கொண்டு ஆழ்ந்த யோசனையுடன் கடற்கரையை நோக்கி மெதுவாகச் சென்று கொண்டிருந்தான் தேவராஜன். பரிமளாவின் ஓயாத கேள்விகளுக்கு அலுக்காது பதிலளிக்கும் அவன் இன்று அவளுடைய பேச்சையே கவனிக்காமல் சிந்தனை செய்து கொண்டிருந்தான். "குறைந்தது ஐநூறு ரூபாயாவது வேண்டும். என்ன செய்வது? என்ன வழி?" இதையே தீவிரமாகத் திருப்பித் திருப்பி மனம் உருப்போட்டது. தலைவலிதான் மிஞ்சியது.

தேவராஜனும் லக்ஷ்மியும் மனமொத்த தம்பதிகள். எளிய வருவாயில் இன்பமாக வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்கள் இன்ப வாழ்வின் சின்னமாக, அன்பு வாழ்க்கையின் அடையாளமாக பரிமளா உதித்தாள். இரு வருடங்கள் உருண்டோடி விட்டன. லக்ஷ்மி இரண்டாவது முறையாக கருத் தரித்தாள். பூர்ணமாகப் பத்து மாதம் சென்று பிறக்க வேண்டிய சிசு அகாலத்தில் பிறந்து லக்ஷ்மியின் உயிருக்கு பேராபத்தை உண்டு பண்ணிவிட்டு மறைந்து விட்டது. தேவராஜன் துடி துடித்தான்; பதறினான்: பணத்தைத் தண்ணீராய் மதித்து செலவு செய்தான். பயன் எதுவுமின்றி லக்ஷ்மி தன் அருமைக் கணவனையும், புதல்வி பரிமளாவையும் தவிக்க விட்டுச் சென்று விட்டாள்.

சிறிது காலம் எல்லோரையும் போல் தேவராஜனும் மறுவிவாகத்தை மறுத்து வந்தான். பெண்ணைப் பெற்றவர்களின் இடைவிடாத தாக்குதலால் அவனது வைராக்கியக் கோட்டையும் தகர்ந்தது ஒரு சுபநாளில் சௌபாக்கியவதி கல்யாணி தேவராஜனின் மனைவியானாள்.

'மாற்றாந்தாய்க் கொடுமை'களைப் பற்றிக் கேட்டும் படித்துமிருந்த அவன், பரிமளாவை மிகுந்த ஜாக்கிரதையுடன் கண்காணித்து வந்தான். ஆனால், அவன் பயந்தபடி ஒன்றும் நேரவில்லை. கல்யாணி பரிமளாவிடம் பிரியமாகவே பழகினாள். கண்டிக்க வேண்டிய போது கண்டித்தாள் ஐந்து வயதுச் சிறுமி பரிமளா தங்க நிற மேனியும், சுருண்ட தலைக் கேசமும், குறுகுறுப்பு நிறைந்த பார்வையும், விஷமப் பேச்சுக்களும் கொண்டவளாய் தந்தையை மிகவும் மகிழ்வித்து தன் தாய் லக்ஷ்மியை அனுதினமும் அவனுக்கு நினைவுறுத்தி வந்தாள்.

தேவராஜனது வாழ்வில் துன்பங்கள் தலை நீட்டலாயின. விலைவாசிகள் விஷம் போல் ஏறிவிட்ட இந்நாளில் அறுபது ரூபாய், மூன்று ஜீவன்களுக்கு எப்படிப் போதும்? கடன் ஏறலாயிற்று. ஏற்கெனவே லக்ஷ்மியின் வைத்தியத்திற்காக வாங்கியது வேறு சேர்ந்த, கடன் சுமை அவன் கழுத்தை நெரித்தது. அன்று, அவன் கடன் வாங்கியிருந்த மார்வாரி நான்கு குடித்தனக்காரர்களுக்கு எதிரில் வெகு கேவலமான வார்த்தைகளைச் சொல்லி இரைந்து விட்டுப் போயிருந்தான். மிகவும் மானியான தேவராஜனுக்கு உடல் அவமானத்தினால் குன்றிவிட்டது. மேலும் வீட்டிலிருக்க மனம் கொள்ளாமல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே கிளம்பினான். "நானும் அப்பா!" என்றபடியே பரிமளா ஓடி வந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

எங்கு போக வேண்டும் என்ற நினைப்பின்றி நடந்து கொண்டிருந்தான் தேவராஜன். கால்கள் மட்டும், பழக்க தோஷத்தால், கடற்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. "அப்பா! அப்பா! அதோ பாரு அப்பா! அதுமாதிரி பட்டு சட்டை வாங்கித் தரயா அப்பா! அது என்னது அப்பா!" என்று பலவிதமாக தொணதொணத்துக் கொண்டே வந்த பரிமளா அலறிய படியே "அப்பா! ஐயையோ! காரு வரது தெரியாமே நடுவிலே போறயே ஓரமா வாப்பா!" என்று கையைப் பிடித்து இழுத்தாள். அப்போதுதான் சுயஉணர்வு வரப்பெற்ற தேவராஜன் விரைந்து நடைபாதை மீது ஏறவும், அந்தக் கார் அவனருகில் 'கிரீச்' சென்ற சப்தத்துடன் நின்றது.

அதிலிருந்து ஸூட்டும், பூட்டும் அணிந்த ஒருவர் இறங்கி அவனருகில் வந்தார்.

"ஹலோ! தேவராஜன்! என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு! நான்தான் கல்யாணியின் ஒன்றுவிட்ட மாமா விஸ்வம். உங்களைக் கல்யாணத்தின்போது பார்த்தது. இப்போது உங்கள் வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் நீங்களே எதிரில் வந்து கொண்டிருக்கிறீர்கள். ஏறுங்கள் காரில்" என்று மூச்சுவிடாமல் பேசினார் அவர்.

வழியில் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. வீடு சேர்ந்ததும் விஸ்வம் கல்யாணி, தேவராஜன் இருவரிடமும் தாம் வந்த காரியத்தைச் சொன்னார். விஸ்வம் சினிமா நடிகராயிருந்து டைரெக்டராகியிருப்பவர். சொந்தத்தில் ஒரு படம் பிடித்துக் கொண்டிருந்தார். அதில் நடிக்க ஒரு குழந்தை, கவர்ச்சியான தோற்றம் கொண்ட ஐந்து அல்லது ஆறு வயதுப் பெண் தேவையாக இருந்தது! அதற்காக சல்லடை போட்டு சலித்துவிட்டார் விஸ்வம். ஒன்றும் மனதிற்குப் பிடித்தமாயில்லை. கல்யாணியின் விவாகத்தின்போது பார்த்த பரிமளாவின் முகம் அவரை வெகுவாகக் கவர்ந்திருந்தது ஆகவே, தன் படத்தில் பரிமளாவை நடிக்க வைக்க தேவராஜனைத் தேடி வந்திருக்கிறார். இதுதான் அவர் சொன்னதின் சாராம்சம். இதைச் சொல்லிவிட்டு "மிஸ்டர் தேவராஜன்! ஒன்றும் யோசனை பண்ண வேண்டாம். குழந்தையை என் குழந்தை மாதிரிப் பார்த்துக் கொள்வேன். ஐயாயிரம் ரூபாய்! சம்மதமா?" என்றார்.

"நான் போறேன் அப்பா! நான் சினிமாவிலே நடிக்கப் போறேனே!' என்று குதித்தாள் பரிமளா. கல்யாணி ஏக்கத்துடன் கணவன் முகத்தைப் பார்த்தாள். தேவராஜனின் மனக் கண்ணில் காட்சிகள் விரிந்தன. 'லக்ஷ்மியின் முகம் பரிதாபமாய் 'என் குழந்தையை இரவும் பகலும் ஆடவிட்டு ஹிம்சைப்படுத்தப் போகிறீர்களா!' என்றது. மறுபுறம் மார்வாரி பயங்கரமாக 'இருபது தேதிக்குள் பணம் கொடுக்காவிட்டால் ஜப்தி' என்று உறுமினான். கல்யாணியின் முகம் "உங்களை மணந்து என்ன சுகம் கண்டேன், கடன்காரன் தொல்லையைத் தவிர! ஐயாயிரம் ரூபாய் வாழ்நாளெல்லாம் உழைத்தாலும் கிடைக்குமா! மறுக்காதீர்கள்!" என்று கெஞ்சியது. அவன் உதடுகள் அசைந்தன. "சரி ஸார்! அப்படியே ஆகட்டும்."

மறுநாளிலிருந்து தினசரி விஸ்வம் வந்து, பரிமளாவைக் காரில் அழைத்துச் சென்று கொண்டு வந்து விடுவார். புதிய பட்டாடைகள் அணிந்து வண்ணாத்திப் பூச்சி போல் பரிமளா குதூகலமாய்த் திரிந்து வந்தாள். பரிமளா அபாரமாய் நடித்திருப்பதாகவும் படம் பிரமாதமாய் முன்னேறி வருவதாகவும் விஸ்வம் அவ்வப்போது செய்திகள் கொண்டு வருவார். கடன் தொல்லை ஒழிந்ததெனினும் தேவராஜன் மனம் நிம்மதி அடையவில்லை. "பச்சைக் குழந்தையை வருத்தி ஆடிப் பாட வைத்துத்தானா நீ சுகமடைய வேண்டும்?" என்று அவன் மனம் அவனை அடிக்கடி வருத்தியது.

படப்பிடிப்பு பூராவும் முடிவடைந்துவிட்டது. விஸ்வம் அன்று இரவு ஒரு மணியாகி விட்டிருந்தும் தம் காரில் பரிமளாவை வீட்டில் கொண்டு விட்டு விட்டே சென்றார். போகும்போது, "தேவராஜன்! உங்கள் பெண்தான் படத்தில் ஜீவநாடி

படம் வெளி வந்ததும் பேபி பரிமளாவுக்கு வந்து குவியப் போகிற புகழைப் பாருங்கள். அப்போது சொல்வீர்கள். படம் இன்னும் ஒரு மாதத்திற்குள் நம் ஊரில் திரையிடப்படும். முதல் நாளன்று நாம் அனைவரும் ஒன்றாகப் போக ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளை நான் அவசர காரியமாக வெளியூர் செல்கிறேன். வரட்டுமா!" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

அன்று இரவு, பரிமளா சிறிதும் உறங்கவேயில்லை. "உடம்பெல்லாம் வலிக்கிறதே! அப்பா! அம்மா!" என்று அனத்தினாள். பொழுது விடிந்து பார்த்தால் உடம்பு நெருப்பாய் கொதித்தது. ஒரு வாரம் விடாமல் கடும் ஜுரம். தேவராஜன் பெண்ணின் படுக்கையை விட்டு அகலாமல் சிலைபோல் அமர்ந்திருந்தான். உறவினர் "கண் திருஷ்டி" என்றனர். டாக்டர் "அதிக உழைப்பு" என்றார். பலர் பலவிதமாகச் சொன்னார்கள். எதுவானால் என்ன! ஒரு நாள் இரவு எல்லோரும் உறங்கும்போது அந்தப் பச்சைக் கிளியின் ஜீவன் பறந்துவிட்டது. தேவராஜனின் செல்வப் பெண் தன் அன்புத் தந்தையை அழவைத்து விட்டுப் போய் விட்டாள். பின்னால் பல்லாயிரக்கணக்கான ரஸிகர்கள் மனதில் இடம்பெற்று, "ஜீவ ஜோதி படத்தில் நடித்த பேபி பரிமளா எங்கு வசிக்கிறாள்! அவள் யாருடைய பெண்?" என்று பலவிதமாக பத்திரிகாசிரியருக்குக் கடிதம் எழுதக் காரணமாயிருந்த இளம் நக்ஷத்திரம் ஒரே படத்தில் மின்னி விட்டு மறைந்து போயிற்று.

தேவராஜன் முட்டிக் கொண்டான்; மோதிக் கொண்டான். "பாவி! பணத்திற்காக என் கண்மணியை நானே பலியிட்டு விட்டேனே!" என்று கத்தினான். செய்தி தெரிந்ததும் விஸ்வம் ஓடோடியும் வந்தார். மிகவும் வருத்தினார். "என்ன செய்வது! நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; எவ்வளவோ குழந்தைகள் படத்தில் நடிக்கவில்லையா?

அழகோடு உழைப்பும் சேர்ந்தது

ரீஸா ரேடியோ



I. ● உயர்ந்த நாத இனிமை
● நம்பகமான சிறந்த உழைப்பு.
● 'மாஜிக் ஐ' பொருத்தப்பெற்றது.

II A.W. 7, ஏஸி., 7 வால்வு, விலை ரு. 525.

SUNBEAM

ரீஸா கம்பெனி
36, ஹாரிங்டன் ரோட், சென்னை-10.

கந்தி ASSEMBLER
த. பெட்டி : 1004

PHOENIX



நேஷனல் புரொடக்ஷன்ஸின் "மாப்பிள்ளை" தமிழ்ப் படத்தில் லக்ஷ்மி காந்தாவும் பி. கே. சரஸ்வதியும் கவர்ச்சிகரமாய் நடனம் ஆடியிருக்கிறார்களாம்.

தமிழ் நாடெங்கும் வெளிவந்துள்ள அசோகா பிக்சர்ஸாரின் "என் தங்கை" தமிழ்ப் படத்தில் பி. எஸ். கோவிந்தனும், வி. எஸ். சுசீலாவும் இதுபோல் ஆங்கில நடனம் ஆடுகின்றனர்.

புகழ் பெறவில்லையா?" என்று அவனைத் தேற்றினர்.

"நீங்கள் என்னதான் சொல்லுங்கள். ஆதியிலிருந்தே மனசில் என் லக்ஷ்மி தடுத்துக் கொண்டே யிருந்தாள். பாவி நான் அதை லக்ஷியம் செய்யாததால் தான் இந்த விபரீதம் வந்தது" என்றான். கல்யாணியும் அளவு கடந்த துயரமடைந்தாள்.

ஒரு மாதம் நகர்ந்தது. அந்நகரில் 'ஜீவஜோதி' படம் திரையிடப்பட்டது. ஒரே கூட்டம். மகத்தான வசூல். மக்கள் அனைவரும் ஒருமுகமாகப் படத்தையும், அதன் சிறப்புக்குப் பெரிதும் காரணமாயிருந்த பேபி பரிமளாவையும் வானளாவப் புகழ்ந்தனர். பட முதலாளிகள் மேலும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள விஸ்வத்திடம் விவரம் கேட்டுக் கடிதத்தின் மேல் கடிதம் எழுதுகிறார்கள். தேவராஜனோ கல்யாணியோ படத்தைக் காணப் போகவே யில்லை.

அன்று தேவராஜனுக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவேயில்லை. கால்போன போக்கில் நடந்து கொண்டிருந்த அவன் தலைநிமிர்ந்து பார்த்தான். எதிரே ஒரு சுவரொட்டி விளம்பரத்தில் நின்று பரிமளா புன்னகை புரிந்து கொண்டிருந்தாள். எங்கு திரும்பினாலும் வர்ண விசித்திரங்களில் காட்சி அளித்தாள் அவள். வெறி பிடித்தவன்போல் வேகமாக நடந்தான். அதோ அது என்ன! அவன் பரிமளாவின் குரல்! பிரமையா? இல்லை. அது ஒரு தியேட்டர். அதன் உள்ளிருந்துதான் அந்தக் குரல் வந்தது.

தேவராஜன் 'புக்கிங் ஆபீஸ்' எதிரே வந்து நின்றான். ஒரு டிக்கெட்டை வாங்கிக் கொண்டு உள்ளே போய் ஒரு ஆசனத்தில் அமர்ந்தான். படம் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு செல்வந்தன் காலக் கொடுமையால் தரித்திரமடைந்து வீட்டை விட்டு ஓடி விடுகிறான். அவன் மனைவியும், குழந்தையும், பிழைக்க வழியின்றிப் பிச்சை யெடுக்கிறார்கள். குழந்தையின் பால் வடியும் வதனம் அநேகரை தாராளமாகக் கொடுக்கச் செய்கிறது. தேவராஜன் போனபோது பிச்சை யெடுக்கும் காட்சி நடந்து கொண்டிருந்தது.

பரிமளா தன் பிஞ்சுக் கரங்களை அழகாகக் குவித்து "அம்மா ஒரு பிடி சோறு தந்தால் போதும். தாயே, ஆண்டவன் உங்களுக்கு அருள் செய்வார்" என்று பரிதாபமாகவும், விநயமாகவும் கெஞ்சினாள். அந்த வீட்டிலுள்ள பெண்மணி, "வேறு வேலையில்லை. போ! போ! வர வர இந்தப் பிச்சைக்காரர்கள் உபத்திரவமே பெரிதாகப் போயிற்று" என்று கடுகடுத்துக் கொண்டே சிறுமியை வெளியே பிடித்துத் தள்ளுகிறாள்.

பார்த்துக் கொண்டே வந்த தேவராஜன் சடக்கென்று எழுந்து நின்றான். தான் இருப்பது கொட்டகை, பார்ப்பது படம் என்பதை யெல்லாம் அறவே மறந்தான். அவன் ரத்தம் கொதித்தது. "என் குழந்தையை நானிருக்கும்போது இந்தக் கோலம் செய்கிறீர்களா! பரிமளா! பரிமளா! என் கண்ணே! நான் உயிருடனிருக்கும் வரை உன்னைப் பிச்சை எடுக்க விடமாட்டேன். வா! வீட்டுக்குப் போகலாம். இந்தத் துரோகிகள் எல்லோரும் நீ தவிப்பதைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே!" என்று ஆவேசம் வந்தவன் போல் இரைந்து கத்தியபடியே திரையை நோக்கிப் பாய்ந்தான்.

தியேட்டரில், "யாரது பைத்தியக்காரன்! பிடித்து வெளியே தள்ளுங்கள். என்ன கலாட்டா, யார் இவனை உள்ளே விட்டது" என்று பலவிதமான ஆரவாரம் எழுந்தது. டிக்கெட் வசூலிப்பவன் பாய்ந்து தேவராஜனின் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினான்.

"பைத்தியக்காரர்கள்! என் பரிமளா இறந்தும் அவளை வதை செய்கிறார்கள். இவர்கள் சந்தோஷப்பட என் குழந்தை அடிபட வேண்டுமா!" என்று முணுமுணுத்துக் கொண்டே நடந்தான் தேவராஜன். உள்ளே ரஸிக மகா ஜனங்கள் சிறுமியின் நடிப்பை மெச்சி, கரகோஷம் செய்தார்கள். அவர்களுக்கு அந்தப் பெற்ற மனதின் துயரம் எப்படித் தெரியப் போகிறது!

ஜெமினியின் மாபெரும் முயற்சி

"சந்திரலேகா" மூலம், ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன் சீக்கிரமே அகில உலகப் புகழ் பெறப் போகிறார். "சந்திரலேகா" ஆங்கிலப் பதிப்பு மூன்றே மாதங்களுக்குள் மேல்நாடுகளில் திரையிடப்படுமெனத் தெரிகிறது.

வாழ்க்கை வர்ணனை

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

சில தினங்களுக்கெல்லாம் அது உதகையை விட்டுக் கிளம்பி, சேலத்திற்குச் சென்றது அங்கு சில மாதங்கள் நாடகம் நடத்தி விட்டு டிப்ருநக்குச் சென்றது.

இப்படியாக, மளமளவென்று மாதங்கள் பல கழிந்து, வருஷங்களும் ஓட ஆரம்பித்தன. ஆனால் நம்பியாருக்கோ வேஷம் எதுவுமே கொடுக்கப் படவில்லை. கும்பவில் கோவிந்தாவாக "குடிகள், தடிகள், ரிஷிகள்" முதலிய வேஷங்களுடன் அவர் மேடைக்குச் சென்று விட்டு மட்டும் வந்து கொண்டிருந்தார் இந்த சமயத்தில் நம்பியாரின் தொண்டை உடைந்து போனதால் அவருடைய குரல் பேச்சிற்குக் கூட இனிமையற்றதாகி விட்டது. பாட்டில்லாத நடிகர்கள் கம்பெனியில் ஒருக்காலும் முன்னுக்கு வர முடியாது என்பது நம்பியாருக்கு நன்றாகத் தெரியும். குறைந்த பட்சம் பேச்சுள்ள சாதாரண வேஷங்களாவது கிடைத்திருந்தால் அவருக்கு ஓரளவு ஆறுதல் ஏற்பட்டிருக்கும். அதுவுமில்லை. எனவே நம்பியார் மனமுடைந்து போனார். "நாடகத் தொழில் நமக்கு ஏற்ற தொழில் அல்ல"—என்று அவர் முடிவு கட்டிக் கொண்டார். தாம் வேறு ஏதேனும் தொழிலில் ஈடுபட விரும்புவதாக தம் தமக்கை புருஷனுக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதிப் போட்டார். 'பதில் வரும் வரும்' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த நம்பியார் ஏமாற்றம் அடைந்தார். நம்பியாரின் கடிதம் கம்பெனியின் 'தணிக்கை அதிகாரிகளா'ல், பறிமுதல் செய்யப்பட்டு, குப்பைக் கூடைக்கு அனுப்பப் பட்டு விட்டபோது அவருக்கு பதில் எப்படி வர முடியும்!

"கவியின் கனவு" நாடகத்தில் ராஜகுரு நம்பியார்.

இந்த சமயத்தில், இந்தக் கம்பெனிக்கும், அதன் தனிப்பட்ட நபர்களுக்கும் உத்ஸாகம் அளிக்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இக் கம்பெனியின் "ராம் தாஸ்" நாடகம் மேடையில் மிகப் பிரபலமாகிக்கொண்டு வந்ததால், அதை சினிமாப் படமாகப் பிடிக்க பரமேஸ்வர் ஸவுண்ட் பிக்சர்ஸ் என்ற கம்பெனியார் முன்வந்தனர். இப் படத் தயாரிப்பிற்காக நவாப் ராஜமாணிக்கம் தம் நடிக கோஷ்டியுடன் பம்பாய்க்குச் சென்றார்.

"ராம்தாஸ்" படத்தில் நம்பியாருக்கு மாதண்ணா என்று மிகச் சிறியதான ஒரு காமிக் வேஷம் அளிக்கப்பட்டது. முதன் முதலாக ஒரு வேஷம்— அதுவும் ஒரு சினிமாப் படத்தில் என்றால்-கேட்க வேண்டுமா! ஆனால், பாவம், அந்த ஒன்றிரண்டு வார்த்தைகளுள்ள வசனத்தை உளறிக் கொட்டுவதற்குள் அவருக்கு எப்படி வியர்த்து விட்டது! கை காலெல்லாம் எவ்வளவு நடுங்கிப் போய் விட்டன!

"ராம் தாஸ்" படம் முடிந்ததும், அதில் 'நடித்த'தற்காக நம்பியாருக்கு ரூ 40 போனஸாக அளிக்கப் பட்டது. பணத்தைக் கண்ணால் பார்த்துப் பல வருஷங்களாகி யிருந்த நம்பியாருக்கு அந்தப் பணம் ஒரு புதையல் போலத் தோன்றியதாம். தம் பெற்றோர்களுக்கு முதன் முறையாக ஒரு பத்து ரூபாயை அனுப்பி வைத்தார் அவர்.

நம்பியாரிடமிருந்து எதிர்பாராத விதமாய் பணம் வந்து சேரவே, "சரிதான் நம் பையனுக்குச் சம்பளம் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள் போலிருக்கிறது' என்று அவரது பெற்றோர்கள் தீர்மானித்துக் கொண்டனர். குடும்பம் அந்த சமயம் தரித்திரத்தில் தத்தளித்துக் கொண்டிருந்ததால் மாதா மாதம் தவறாமல் பணம் அனுப்பும்படி அவர்கள் விடாமல் கடிதம் எழுதத் தொடங்கி விட்டனர்.

இக் கடிதங்களைப் பார்த்து நம்பியாருக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லையாம்! ஆனால், "எப்படியாவது வேஷம் ஏற்று நடிக்க வேண்டும்; சம்பளம் வாங்கும் நிலைமையை சீக்கிரமே அடைய வேண்டும்" என்ற மன உறுதியையும், ஊக்கத்தையும் இக் கடிதங்கள் ஏற்படுத்தி வைத்தன.

நம்பியாரும், அவரது மனைவி ருக்மணியும்.

1936-ம் வருஷத்தில் ஸ்ரீ தேவி பால விநோத சங்கீத சபைக்கு நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை முழு முதலாளியானார். நிர்வாகத்தில் ஏற்பட்ட இந்த மாறுதல் நம்பியாரின் சொந்த விஷயத்திலும் மாறுதலை ஏற்படுத்தியது. இரண்டு வருஷ இலவச உழைப்பிற்குப் பிறகு அவருக்கு மூன்று ரூபாய் சம்பளம் போட்டுக் கொடுக்கப் பட்டது. நடிப்பதற்கும் அவருக்கு சிறு சிறு வேஷங்கள் கொடுக்கப்படலாயின.

நம்பியார் சம்பள நடிகர் ஆனதும் அவரது கடமை உணர்ச்சி தலை தூக்கியது. கம்பெனியில் முன்பணமாக பத்து ரூபாயை வாங்கி பெற்றோர்களுக்கு அனுப்பி வைத்தார்.

கம்பெனியில் அதிக சம்பளம் வாங்கும் நடிகர்களுக்கெல்லாம் அவர்கள் செலவில் இரவில் பால் சப்ளை செய்யப் படுவது வழக்கம். சம்பள நடிகரானதும் நம்பியாருக்கு உத்ஸாகம் தலைகால் தெரியாமற் போய் விட்டது தம்மைத் தாமே அந்த முன்னணி நடிகர்களின் வரிசைக்கு உயர்த்திக் கொண்டு, அவரும் பால் சாப்பிடத் தொடங்கினார். அது மட்டுமா; இதர சில நண்பர்களுக்கும் தம் கணக்கில் பால் வாங்கிக் கொடுத்தார்! மாத முடிவில் நம்பியாரின் பால் கணக்கு ரூ *3-6-0* ஆயிற்று. முதலாளி இதைப் பார்த்ததும் திடுக்கிட்டார். நம்பியார் ஏற்கனவே முன் பணம் வாங்கியிருந்ததால் பால் சப்ளை அன்றிரவே நிறுத்தப் பட்டு விட்டது.

சம்பள நடிகராக்கப் பட்டதும், நம்பியாருக்கு "கிருஷ்ண லீலா" நாடகத்தில் ஒரு சிறிய காமிக் வேஷம் அளிக்கப் பட்டது. அவருடைய நல்ல காலத்தினால் (!) ஜனங்கள் அவரது நடிப்பை கரகோஷம் செய்து பாராட்டினர்.

இந்த சமயத்தில், அக் கம்பெனியில் பிரபல காமெடியன் கே. சாரங்கபாணி பிரதான ஹாஸ்ய நடிகராய் விளங்கி வந்தார். அவர் ஒரு சமயம் தேக அசௌக்கியம் காரணமாக சில தினங்கள் நடிக்க முடியாமற் போய்விட்டது. அவருக்குப் பதில் நடிப்பதற்கு நம்பியார் துணிந்து ஒப்புக் கொண்டார். அந்த முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றார். அதன் விளைவாக சம்பளமும் ஐந்து ரூபாய் ஆக்கப் பட்டது. பின்னர் கம்பெனி பாலக்காட்டில் நாடகம் நடத்தி வந்த போது சாரங்கபாணி கம்பெனியிலிருந்து விலகி விட்டார். காலியான அந்த ஸ்தானத்தை நம்பியார் பத்து ரூபாய் சம்பளத்துடன் கைப்பற்றிக் கொண்டார்.

*1937*ம் வருஷத்தில், நவாப் ராஜமாணிக்கம் சென்னைக்கு வந்து தங்கி, இரண்டு வருஷ காலம் நாடகங்களை நடத்தினார். அவருடைய "இன்ப சாகரன்" நாடகம் சென்னை ரஸிகர்களின் பேராதரவைப் பெற்றது. இது கண்ட ஒரு படக் கம்பெனியார் அந்த நாடகத்தைப் படமாக்கி வெளியிட முன்வந்தனர், ஆனால் அப்படம் பாதியளவு தயாரானபின் ஸ்டுடியோவில் ஏற்பட்ட தீ விபத்தில் அக்னி பகவானுக்கு அர்ப்பணம் ஆகிவிட்டது.

நவாபின் கம்பெனி சென்னையை விட்டு பல ஊர்களுக்குச் சென்று விட்டு, நாகர்கோயிலை அடைந்தது. அப்பொழுது நம்பியாருக்கு இருபது ரூபாய் சம்பளம் கிடைத்து வந்தது. நாட்கள் பறந்தோடிக் கொண்டிருந்ததும், சம்பளம் நத்தை வேகத்தில் உயர்ந்து வந்ததும் நம்பியாரின் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. இத்தொழிலை விட்டுப் போய், வேறு உத்தியோகம் தேடிக் கொள்ளவும் அவர் தீர்மானித்தார். "பட்டாளத்தில் சேர்ந்தால் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொடுத்து ரூ. 75 சம்பளமும் கொடுப்பார்கள்" என்று அவர் கேள்விப்பட்டார். உடனே அவர் ஒரு விண்ணப்பத்தை எழுதிப் போட்டார். சில தினங்களில், புறப்பட்டு வரும்படி கடிதமும் வந்து விட்டது. ஆனுல், இதற்கிடையில் "பட்டாளத்தில் சேர்ந்தால் கட்டாயம் மாமிசம் சாப்பிட்டாக வேண்டும்" என்று யாரோ அவரிடம் கூறிக் கலவரப் படுத்தி விட்டனர். சுத்த சைவரான நம்பியார் பட்டாளத்தில் சேரும் யோசனையை விட்டொழித்தார்.

நம்பியாரின் புத்திரர்கள் : சுகுமார், மோஹன.

சம்பளம் ஒருபுற மிருக்க, கம்பெனியில் இருந்து வந்த கட்டுப்பாடுகளும் அவருக்குப் பிடிக்கவில்லை. சம்பளம் உயர உயர அவர் இக் கட்டுப்பாடுகளைத் தகர்க்கும் முயற்சிகளில் அதிகமாக ஈடுபட்டார். அதன் விளைவாக அவருக்கும் நிர்வாகிகளுக்கும் அடிக்கடி 'உராய்தல்' ஏற்பட்டு வந்தது. கொஞ்சகாலமாவது அடிமை வாழ்விலிருந்து விடுபட்டிருக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும், தம் தாயாரையும் உடன் பிறந்தவர்களையும் பார்க்க வேண்டுமென்ற அவாவுடனும் நம்பியார் கம்பெனியாரிடம் லீவ் கேட்டார். மிகுந்த தகராறுக்குப்பின் அவருக்கு லீவ் கிடைத்தது, பத்து வருஷ காலமாய் சுவாசித்து வந்த கம்பெனிக் காற்றுக்குப் பதில் நம்பியார் முதல் தடவையாக சுதந்திரக் காற்றை சுவாசிக்க ஆரம்பித்தார். நம்பியார் ஊருக்குச் சென்ற சில தினங்களுக்கெல்லாம் (முன்பு நவாபின் கம்பெனியில் மானேஜராக இருந்து விலகிய) டி. கே. கிருஷ்ணசாமியிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் 'சக்தி நாடக சபை' என்ற நாடகக் கம்பெனியை ஆரம்பிக்கப் போவதாகவும், அதில் நம்பியார் கட்டாயம் சேர வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். நம்பியார் இவ் வேண்டுகோளுக்கு உடன்பட்டு, நாகப்பட்டினத்தில் 1944ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட சக்தி நாடக சபையில் சேர்ந்தார்.

சக்தி நாடக சபையின் முதல் நாடகமான "கவியின் கனவு" அமோகமான வெற்றியைப் பெற்றது. மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இந்நாடகத்தைப் பார்ப்பதற்காக நாகப்பட்டினத்திற்குச் சென்றுர்கள் என்றுல் அதிகம் சொல்வானேன்? இந்த நாடகத்தில் கதாநாயகனுய் நடித்த சுப்பையா, பயங்கர வில்லன் ராஜகுருவாக நடித்த நம்பியார், இவர்களுடைய நடிப்புத் திறமை பற்றிய புகழ் தமிழ் நாடெங்கும் பரவலாயிற்று.

இப்படிப் பரவிய செய்தி ஜுபிடர் பிக்சர்ஸில் டைரெக்டராக இருந்த ஏ. எஸ். ஏ. சாமியின் காதுகளிலும் விழுந்ததோடு, சக்தி நாடக சபை கோயமுத்தூருக்கு வந்ததும் அவர் இந்த நாடகத்தை நேரிலும் பார்த்தார். உடனே, அவர்

முதல் வேலையாக நம்பியாரை ஜூபிடரில் ஒரு நடிகராக்கி வைத்தார்.

நம்பியார் ஜூபிடருக்காக நடித்த முதல் படம் "வித்யாபதி". அதில் அவர் ஒரு ஹாஸ்ய பாகத்தில் நடித்திருக்கிறார். பிறகு "ராஜகுமாரி"யில் பகுவாக நடித்தார். மூன்றாவதாக 'கஞ்சனி"லோ கதாநாயகனாகவே ஆக்கப்பட்டு விட்டார். பின்னர் "அபிமன்யு"வில் லக்கணனாகவும், "மோஹினி"யில் ஜம்புவாகவும் நடித்தார். "மோஹினி"யில் அவரும் எம். எஸ் எஸ். பாக்கியமும் ஹாஸ்ய பாகங்களில் சோன்றி, ரஸிகர்களின் பெருமதிப்பைப் பெற்றனர்.

முதலில் நான்கு படங்களுக்கென ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட நம்பியாருக்குப் படத்திற்குப் படம் பொதுஜன ஆதரவு அதிகரித்து வரவே, ஜூபிடரின் எல்லாப் படங்களிலும் அவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படலாயிற்று.

ஜூபிடரின் வெற்றிப் படமான "வேலைக்காரி"யிலும் நம்பியாருக்கு கதாநாயகன் வேஷம் கிடைத்தது. அத்துடன் அவர் ஹரி ஹரிதாஸ் பாத்திரத்திலும் அப்படத்தில் நடித்திருக்கிறார். இதன் பிறகு நம்பியார் நடிந்த படம் "விஜயகுமாரி." இப்படம் முடிந்தவுடன் நம்பியார் இதர கம்பெனிப் படங்களிலும் நடிக்கத் தொடங்கி. மாடர்ன் தியேட்டர்ஸாரின் "மந்திரி குமாரி"யில் நடித்தார். பிறகு "திகம்பர சாமியாரி"லோ பல வேஷங்களில் தோன்றி பிரமாதமான புகழ் பெற்றார் "மர்மயோகி", "தேவகி", "சர்வாதிகாரி", "அம்மா" ஆகிய படங்களில் அவர் தொடர்ந்து நடித்தார், நம்பியார் நடித்துள்ள "காஞ்சனா" படம் சமீபத்தில் வெளிவந்து வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. "மர்மயோகி"யின் ஹிந்திப் பதிப்பான "ஏக்த ராஜா"விலும் நம்பியாரைக் காணலாம். "சர்வாதிகாரி" தெலுங்குப் படத்திலோ அவரே தெலுங்கில் பேசி நடித்திருக்கிறார். "அம்மா", "காஞ்சனா", ஆகிய மலையாளப் படங்களிலும், "காஞ்சனா" தெலுங்குப் படத்திலும் அவர் நடித்திருக்கிறார்.

நாடகச் சிறுவன் நம்பியார்

நம்பியார் நடித்து முடித்திருக்கும் "கல்யாணி" தமிழ், தெலுங்குப் படங்கள் விரைவில் வெளிவர விருக்கின்றன. மாடர்ன் தியேட்டர்ஸில் தயாராகிவரும் "காடு" ஆங்கிலப் படத்தில் கூட அவர் (ராணியின் காரியதரிசியாக) இரண்டொரு ஆங்கில வசனங்களைப் பேசி நடித்திருக்கிறாராம்!

ஜூபிடர்-மேகலா தமிழ்த் தயாரிப்பான "நாம்", மலையாள-தமிழ்ப் படங்களான, "ஆத்ம சகி", ஜூபிடரின், தமிழ் தெலுங்குப் படங்களான "அழகி" பிரகாஷின் "கன்ன தல்லி" (தெலுங்கு), "பெற்ற தாய்" (தமிழ்) ஆகிய படங்களில் நம்பியார் தற்போது நடித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் நடித்துள்ள படங்களை யெல்லாம் நாம் ஆராய்ந்துபார்த்தால், அவர் ஹாஸ்ய பாசம், பயங்கர வில்லன், சாதுக் கதாநாயகன், இப்படியாக பலதரப்பட்ட குணங்களுடைய பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளதோடு பாராட்டத்தக்க வெற்றியும் பெற்றிருப்பதை அறியலாம். நம்பியார் ஒரு சிறந்த நடிகர் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? நம்பியார் மலையாள தேசத்தவரென்றாலும் அவருக்கு மலையாள பாஷையை எழுதப் படிக்கத் தெரியாதாம்! பேசக் கூட சுமாராகத்தான் தெரியுமாம்! அவருடைய குழந்தைகளுக்கோ அதுவும் தெரியாதாம்! ஆனால், நம்பியாருக்கு தமிழ் பாஷையையோ. நன்கு எழுதப்



''அமயா'' படத்தில் பி. எஸ். சரோஜாவுடன்.

படிக்கத் தெரியும். நம்பியார் பால்யத்தில் பலே போக்கிரியாக இருந்தாராம். தன் அண்ணனுடனேயே ஒரு முறை சண்டை போட்டு அவரைப் பேனாக் கத்தியால் ''குத்தி''க் காயப்படுத்தி விட்டாராம்! ஆனால், ''நவாப் கம்பெனியில் இருந்த கடுமையான சட்ட திட்டங்கள் என் குணத்தையே மாற்றி, என்னிடம் நல்லொழுக்கங்கள் படியும்படிச் செய்து விட்டன'' என்று அவர் பெருமையுடன் கூறுகிறார். இப்பொழுதெல்லாம் போக்கிரித்தனம், கத்திச் சண்டை இவற்றையெல்லாம் அவர் படங்களுக்கு பூராவாய் ஒதுக்கிவிட்டு, அசல் வாழ்க்கையில் ஒரு சாந்தமான மனிதராய் விளங்குகிறார்.

நம்பியார் நண்பர்களை வரவேற்பதிலும், அவர்களை உபசரிப்பதிலும் அலாதி பிரியம் உடையவர். கணவன் மனம் கோணாது நடந்து கொள்ளும் மனைவி (ருக்மணி) வாய்த்திருக்கும்போது அவருக்கு கவலையேன்? 1946ல் தம்பதிகளான இவர்கள் தற்போது, இரண்டு ஆண், ஒரு பெண், ஆக மூன்று குழந்தைகளுக்கு பெற்றோராய் விளங்குகின்றனர்.

ஐந்து வயதான அவரது மூத்த பிள்ளை சுகுமார் சாதுவான போக்குடையவன். ஆனால் மூன்று வயதான மோஹன் 'படு போக்கிரிப் பயல்'. அவன் ''பொல்லாத மாமன்'' என்று பெயரிட்டழைக்கும் எம். ஜி. ராமச்சந்திரன் ஒருவரைத் தவிர இந்த உலகில் வேறு யாருக்குமே பயப் படக்கூடியவன் அல்ல போல் தோன்றுகிறது! தானாக என் முன் தோன்றி பேட்டியளிக்காத ஒரு வயதுக்கும் குறைவான—அவருடைய மூன்றாவது குழந்தைதான் ஸ்நேகலதா.

எழுபத்தி ஐந்து வயதான அவரது தாயார் கல்யாணி அவரது சொந்த ஊரில், தமையன் சாத்துக் குட்டி நம்பியாருடன் வசித்து வருகிறார். நம் நம்பியார் தம் நெருங்கிய சுற்றத்தார்களை அனுசரணையாகச் சேர்த்துக் கொண்டு, சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி வருகிறார்.

நல்ல சிவப்பு நிறமும், நடுத்தர உயரமும், அழகிய தோற்றமும் உடைய நம்பியாருக்கு தற்போது 34 வயது ஆகிறது. அவர் 1919-ம் வருஷம் மார்ச் மாதம் 7-ந் தேதியன்று பிறந்தவர். அவரது அசல் பெயர் ''எம். நாராயண நம்பியார்'' என்பது. நாடகக் கம்பெனியில் சேரச் சென்றபோது, அங்கு முன்பே பல ''நாராயணன்''கள் இருந்தமையால் 'நவாப்' இவரது பெயரை ''எம். என். நம்பியார்' என்று சுருக்கி விட்டாராம்.

சினிமாவில் சேர்ந்த பிறகும் நம்பியார் ஐந்தாறு முறை நாடகங்களில் நடித்திருக்கிறார். கிரிக்கெட் முதலிய விளையாட்டுகளில் அவருக்கு மிக மிக இஷ்டம். ஆனால் அவருக்கோ கால் பந்து ஆட்டம் ஒன்று மட்டுமே தெரியுமாம். நீந்தவும், கத்திச்சண்டையிடவும், மோட்டார் ஓட்டவும் அவருக்குத் தெரியும்.

நம் படங்களின் போக்கு அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கிறது. படாதிபதிகளோ தினத்திற்கொரு தினுசான படங்களைத் தயாரித்து வருகிறார்கள். எனவே, எந்த தினுசான படமானாலும், எந்த தினுசான வேஷமானாலும் ஏற்றுக் கொண்டு நடிப்பதற்கு தம்மைப் பழக்கிக் கொண்டுவரும் நம்பியார், எந்தவிதமான மாறுதல்களுக்கும் வளைந்து கொடுத்துக் கொண்டு, எதிர்காலத்தில் மேலும் அதிகப் புகழ் பெறுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவில் ''பொன்னி'' என்றொரு படம் தயாராகப் போகிறதாம். இப்படம் ஸ்ரீராமுலு நாயுடுவின் மேற்பார்வையில், ஏ. எஸ். ஏ. சாமி டைரெக்ஷனில் தயாராகுமாம்.

ஜன ரஞ்சகமான "காஞ்சனு"

ஸ்ரீராமுலு நாயுடுவுக்கு ஒரு பெரும் வெற்றி!

நெருப்புப் பொறி பறக்கும் வசனங்கள்; விரஸமான நடனங்கள்; கீழ்த்தரமான ஹாஸ்யம் — இவைகளில்லாமல் தயாரிக்கும் படம் நன்ருக ஓடாது என்று நொண்டிச் சாக்குக் கூறும் படத் தயாரிப்பாளர்களுக்கு சவால் விடுவதுபோல் இருக்கிறது சமீபத்திய வெளியீடான பக்ஷிராஜாவின் "காஞ்சனு" தமிழ்ப் படம்.

"ஆனந்த விகடன்" மூலம் பிரபலமான "காஞ்சனையின் கனவு" என்ற நாவலைக் கூடியவரை அப்படியேபடமாக எடுத்திருக்கிருர்கள். ஜமீந்தார் புஷ்பநாதன் ஏழைப் பெண் காஞ்சனு மீது காதல் கொண்டு அவளை மணந்து கொள்கிருன். அவனுக்கு ஏற்கெனவே பானுமதி என்ற ஒரு தாசி காதலியாக இருக்கும் விஷயம் தெரிந்து தம்பதிகளுக்குள் மனக் கசப்பு ஏற்பட்டு, பிரிகிருர்கள். இறுதியில், தாசி பானுவின் தியாகத்தின் மூலம் மீண்டும் தம்பதிகள் ஒன்று சேருகின்றனர். சுவாரஸ்யமான, திரைக்கேற்ற கதை, படத்தின் வெற்றிக்குக் கதையின் சிறப்புப் பெருமளவு உதவியிருக்கிறது. வசனங்கள் எளிய நடையில்

"காஞ்சனு"	
தயாரிப்பு & ஸ்டுடியோ :	பக்ஷிராஜா ஸ்டுடியோ
டைரெக்ஷன் :	எம். எஸ். ஸ்ரீராமுலு நாயுடு
நடிகர்கள் :	லலிதா, பத்மினி, குமாரி, எம். ஆர். சந்தானலக்ஷ்மீ, கே. ஆர். ராமசாமி, நம்பியார், டி. எஸ். துரைராஜ், துரைஸ்வாமி ஆகியோர்.
நீளம் :	சுமார் 18,000 அடிகள்.

பாத்திரங்களுக்குத் தகுந்த முறையில் நன்ருக எழுதப்பட்டுள்ளன.

இந்தப் படத்தில் முக்கியமாகப் பாராட்டப்பட வேண்டிய விஷயம் கதா பாத்திரங்களுக்கு ஏற்ற நக்ஷத்திரங்களைப் பொறுக்கிப் போட்டிருப்பது தான். ஆனல், ஜமீந்தாரின் பாத்திரத்திற்கு கே. ஆர். ராமசாமியைத் தேர்ந்தெடுத்தது தான் பெரிய ஏமாற்றமாகி விட்டிருக்கிறது. அந்தப் பாத்திரத்திற்கு வேறு யாராவது ஒரு நல்ல நடிகரைப் போட்டிருக்கலாம். இவரது நடிப்போ தோற்றமோ, பாட்டோ எதுவுமே சகிக்கும்படியாக இல்லை.

மற்றபடி. நடிகர்களின் ரஸிகர்களின் பாராட்டுதலுக்கு உரியவர்களாகிருர்கள், கணக்கப் பிள்ளையாக வரும் டி. எஸ். துரைராஜும், காஞ்சனுவின் தந்தையாக வரும் துரைசாமியும், இவ்விருவரது நடிப்பும் மிகவும் சிறப்பாக இருக்கிறது. டாக்டராக வரும் மனோஹருக்கு இப்படத்தில் அதிக சந்தர்ப்பம் இல்லையெனினும், கூடியவரை குற்றம்

பக்ஷிராஜாவின் "காஞ்சனு" தமிழ்ப் படத்தில் பெரியநாயகி இனிமையாய்ப் பாடியிருக்கிறார்.

கூறமுடியாத முறையில் இருக்கிறது இவரது நடிப்பு.

லலிதா - பத்மினி சகோதரிகளது நடிப்பு இப்படத்தில் மிகவும் உயர்வாக இருக்கிறது. சரியான கதாபாத்திரங்கள் கிடைத்தால் தாங்கள் மிக பிரகாசிக்கக் கூடும் என்பதை இப்படத்தில் இவர்கள் நிரூபித்துள்ளனர். லலிதாவைவிட பத்மினியின் நடிப்பு கொஞ்சம் உயர்வாகக் காணப்படுவதற்குக் காரணம் அவரது கதாபாத்திரம் தான். பானுவின் தாயாக வரும் எம். ஆர். சந்தானலக்ஷ்மி ஜமீன்தாரின் தாயாராக வரும் பி. எஸ். ஞானம் ஆகிய இருவரில் நடிப்பும் ரொம்பவும் இயற்கையாக இருக்கின்றன. ஞானத்தின் மேக்-அப் விஷயத்தில் மேலும் கவனம் செலுத்தி அவரைக் கொஞ்சம் வயோதிகமாகக் காட்டியிருக்கலாம். லேடி டாக்டராக வரும் குமாரியின் நடிப்போ தோற்றமோ போற்றுப்படியாக இல்லை.

படத்தின் பாட்டுகள் எளிய நடையில் அமைந்துள்ளன. பெரும்பாலும் கர்நாடக மெட்டுகள் கையாளப் பட்டிருப்பது பாராட்டத் தக்கது. பின்னணியில் பாடியுள்ள பாட்டுகளில் பி. ஏ. பெரியநாயகியின் பாட்டுகள் கணீரென்றும் இனிமையாகவும் உள்ளன ஆனால் வசந்தகுமாரி பாடியுள்ள பாட்டுகள் ஏனோ அவ்வளவாக கவர்ச்சிகரமாய் அமையவில்லை.

ஒலி, ஒளிப் பதிவுகள் தரமாக இருக்கின்றன. படத்தின் விறுவிறுப்புக்கு 'எடிட்டிங்' முக்கிய காரணமாகக் குறிப்பிடப் படவேண்டும்.

டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவுக்கு இப் படம் ஒரு மகத்தான வெற்றியாகும். 'காஞ்சனா' விழும் பாழுங் கிணற்றுக்கு லேடி டாக்டர் எப்படி, எப்பொழுது, ஏன் வந்தாள் என்பதைத் தெளிவு படுத்தியிருக்கலாம். இப் படத்தில் மற்றொரு குறையாக அதன் நீளத்தைக் குறிப்பிடலாம். ஆனால் படம் அலுப்புத் தட்டாது சுவாரஸ்யமாக இருப்பதால் இந்தக் குறையும் அவ்வளவாகத் தெரியவில்லை.

—"ஜாம்பவான்"

"தின்பண்டங்கள் வேண்டாம்; பின்பக்கம் திரும்பிப் பாரேன்" என்று என். டி. ராமராவ், ஜி. வரலக்ஷ்மியிடம் வேண்டுகிறார் போலும்—"கல்யாணம் பண்ணிப்பார்" படத்தில்.

பிரம்ம லோகம்

கிருஷ்ணா பிக்சர்ஸின் "மருமகள்" வளர்ந்து வரும் வேகத்தைக் கவனித்தால் படம் ஆகஸ்ட் மாதத்தில் திரையிடப் படக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. புது மாதிரியான இந்தக் கதையை டைரெக்டர் பிரஸாத் சிறந்த முறையில் படமாக்கி வருகிறாராம். லலிதா இப்படத்தில் ஒரு அசல் கிராமாந்திரப் பெண்ணாகப் பிரமாதமாக நடித்து வருகிறாராம். சமீபத்தில் இப்படத்திற்கென லலிதா ஸஹஸ்ரநாமம் திருமணக் காட்சி படமாகியதாம். பத்மினியும், என். டி. ராமராவும் காதல் ஜோடிகளாக நடிக்கின்றனர். இவர்கள் தவிர டி. ஆர். ராமச்சந்திரன், டி. பால சுப்பிரமணியம், பி. ஆர். பந்துலு, ராஜகாந்தம், எஸ். டி. சுப்பு லக்ஷ்மி, அங்கமுத்து ஆகப் பலர் நடிக்கின்றனர்.

மணமகன்

மெட்ராஸ் பிக்சர்ஸ் வெளியீடான "மணமகன்" படமும் ஆகஸ்ட் வெளியீடாக இருக்கலாம். படம் முக்கால் பகுதி முடிவடைந்து விட்டதாம். என். எஸ். கிருஷ்ணன் டைரெக்ஷனில், வாஹினி ஸ்டுடியோவில், இப்படத்திற்கான ஒரு காட்சி, பத்மினி, பாண்டியன், எஸ். டி. சுப்புலக்ஷ்மி மூவரும் சம்பந்தப்பட்டது—படமாகியது. இப்படத்தின் பெயர் "மானத்தோடு வாழ்" என்று மாற்றப்படலா மென்று சொல்லிக்கொள்கிறார்கள். மற்றும் வி. எஸ். சசிலா, ஸஹஸ்ரநாமம், கிருஷ்ணக்-மதுரம் முதலியோரும் நடிக்கின்றனர்.

கண்மணி

பங்கஜா புரொடக்ஷன்ஸாரின், ரத்னா ஸ்டுடியோவில் தயாராகி வரும் "கண்மணி" மூன்றே மாதங்களில் திரைக்கு வந்து விடுமாம். வேல்சாமி கவியின் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப்படத்தில் ஒன்றிரண்டு நக்ஷத்திரங்கள் தவிர பல புது நடிகர்கள் நடிக்கின்றனராம்.

கல்யாணி

மாடர்ன் தியேட்டர்ஸாரது "கல்யாணி" தற்கால சமூகப் பிரச்னைகள் பலவற்றை அடிப்படையாகக் கொண்ட கதையாம். எம். என். நம்பியார் பி. எஸ். சரோஜா இருவரும் காதல் ஜோடிகளாக நடிக்கின்றனர். இப்படத்திற்கென 'பாரதி தாஸனது' "அதோ பாரடி" என்ற பாட்டை பி. லீலா வெகு இனிமையாகப் பாடியிருக்கிறாராம். இந்தப் பாட்டிற்கு கேரள சகோதரிகள் அபிநயம் பிடித்து, பிரமாதமாக நாட்டியம் ஆடியிருக்கிறார்களாம். மற்றும் எம். சரோஜா, எம். எஸ். எஸ். பாக்கியம் டி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை ஆச்சார்யா—மஸ்தான் இருவரும் டைரெக்ட் செய்திருக்கிறார்கள். இந்த மாதம் 21ம்தேதி தமிழ் நாடெங்கும் இப்படம் திரையிடப்படும்.

சின்னதுரை

படப் பிடிப்பு அநேகமாக முடிவடைந்து விட்டதால், எம். எஸ். பிக்சர்ஸ் வெளியீடான "சின்னதுரை" ஜூலையிலேயே திரைக்கு வந்து விடக்கூடும். டி. ஆர். மஹாலிங்கத்தின் பாட்டுகள் இப்படத்தில் மிகவும் சோபிதமாக அமைந்து விட்டிருக்கின்றனவாம். எஸ். வரலக்ஷ்மியும், ஜி. சகுந்தலாவும் ரொம்ப இயற்கையாக நடித்திருக்கிறார்களாம். எஸ். ஆர். லக்ஷ்மி-சந்திரபாபு இருவரும் நல்ல முறையில் ஹாஸ்ய விருந்தளிக்கிறார்களாம். மற்றும் வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு இப்படிப் பலர் நடிக்கும் படம் இது. ஸி. ஆர். ராஜகுமாரியின் நூதன மேனாட்டு நடனம் ஒன்று படத்தில் இருக்குமாம். டி. ஆர். மஹாலிங்கமே படத்தை டைரெக்ட் செய்து வருகிறார்.

என் வீடு

ஆகஸ்ட் மாதம் சுதந்திர தினத்தன்று "என் வீடு" படத்தை வெளியிட்டு விடுவதெனத் தீர்மானித்து படப் பிடிப்பு ஜரூராக நடைபெற்று வருகிறது. அவர் இந்தியா பிலிம்ஸில் தயாரிப்பான இப்படத்தில் நாகய்யாவும் ராஜகுமாரியும் முதன் முறையாக சேர்ந்து நடிக்கின்றனர். அன்றாடக் குடும்ப நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னப்பட்ட இக் கதையின் சம்பாஷணைகளை 'சாண்டில்யன்'

சிறப்பாக எழுதியிருக்கிரு ராம். இப்படத்தின் மூலம் வித்யா என்ற புதிய முக த்தை ரஸிகர்கள் காணப் போகிறுர்கள். படத்தின் டைரெக்டரும், சங்கீத டைரெக்டரும் நாகய்யா வேதான்.

பணக்காரி

நாகய்யா-ராஜகுமாரி சேர்ந்து நடிக்கும் மற்றொரு படம் ஓம் பிக்சர்ஸ்-உமா பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பான "பணக்காரி"யாகும். கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ஷனில் நியூடோன் ஸ்டுடியோவில் படப் பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மற்றும் எம். ஜி. ராமச்சந்திரன், ஜாவர் சீதாராமன், செல்லம் ஆகியோரும் இப்படத்தில் நடிக்கின்றனர். 'அன்னு கரினு" என்ற பிரபல நாவலைத் தழுவியது "பணக்காரி"யின் கதை. படத்திற்கு "சாவி", வி. எஸ். விஸ்வநாதன், "இளங்கோவன்" மூவரும் வசனங்கள் எழுதியிருக்கிருர்களென்ருலும் பெரும் பகுதி 'இளங்கோவனு'டையதாம். இந்தப் படத்திற்கென சமீபத்தில், நீலகிரியில் சில வெளிப்புறக் காட்சிகள் படமாக்கப் பட்டனவாம்.

தோட்டக்காரன்

என் எஸ் கே யின் "தோட்டக்காரன்" படப் பிடிப்பு வாஹினியில் ஆரம்பித்து நடந்து வருகிறது. இதில் தோட்டக்காரன் மகனை டி. ஆர். ராமச்சந்திரனும், அவன் மனதைக் கவரும் மங்கையாக பி. கே. சரஸ்வதியும் நடித்து வருகின்றனர். மற்றும் இப்படத்தில் பந்துலு, பாண்டியன், ஆகியோரும் கிருஷ்ணன்-மதுரம் கோஷ்டியாரும் நடிக்கின்றனர். வி. எஸ். விஸ்வநாதன் என்பவரால் எழுதப்பட்டபிரபலமான நாடகம் இது.

சந்தேஹி

நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸின் "சந்தேஹி" ஸ்டுடியோவுக்குள் நுழைந்து விட்டது. இது தமிழ்-தெலுங்கு-மலையாளம் மூன்று பாஷைகளிலும் தயாரிக்கப்படுமாம். நாகூரின் டைரெக்ஷனில் தயாராகும் இப்படங்களில் நடிப்பதற்கு எம். வி. ராஜம்மா, டி. ஜி. கமலா தேவி, காஞ்சன் ஆகியோர் ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்கள்.

இன்ஸ்பெக்டர்

டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்து பிரபலமான "இன்ஸ்பெக்டர்" ஜூபிடர் தயாரிப்பாக மும்முறமாய் வளர்ந்து வருகிறது. இது தமிழ்-தெலுங்கு இரு மொழிகளிலும் படமாக்கப்பட்டு வருகிறது. அஞ்சலி தேவி, எஸ். ஏ. நடராஜன், பாலசந்தர் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். படத்தை ஆர். எஸ். மணி டைரெக்ட் செய்து வருகிருர்.

நாம்

ஜூபிடர் பிக்சர்ஸார்-மேகலா பிக்சர்ஸார் கூட்டுத் தயாரிப்பான "நாம்" படமாகி வருகிறது. மு. கருணநிதி கதை-வசனம் எழுதியிருக்கிருர். எம். ஜி. ராமச்சந்திரன். பி. கே. சரஸ்வதி, வி. என். ஜானகி, எம். ஜி. சக்ரபாணி ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர். எம். ஜி. ராமச்சந்திரன் இப்படத்தில் குத்துச் சண்டை வீரராக மாறி ஒரு காட்சியில் குத்துச் சண்டை போடுகிருராம்.

மூன்று பிள்ளைகள்

ஜெமினியின் அடுத்த வெளியீடு நிச்சயமாக அவர்களது "மூன்று பிள்ளைகளா"கத்தான் இருக்கும். படப் பிடிப்பு முக்கால் பகுதிக்குமேல் முடிவடைந்து விட்டதால் மிகுதியும் முடிந்து நகாசு வேலைகள் நடந்து ஜூலையில் திரையிடப்படலாம். நாகேந்திர ராவ்-கண்ணும்பா இருவரும் மூன்று பிள்ளைகளின் பெற்றோர்களாக நடிக்கின்றனர். மூன்று பிள்ளைகளாக எம். கே. ராதா, கணேசன், ஸ்ரீராம் ஆகியவர்களும் அவர்களின் மனைவியராக முறையே சுந்தரி பாய், சூர்யப் பிரபா, வனஜா ஆகியோரும் நடிக்கின்றனர்; இவர்கள் தவிர நாராயண் ராவ், பொட்டை, மற்றும் ஜெமினி நடிகர்களும் நடிக்கின்றனர். தாயின் தியாகத்தை விளக்கும் உருக்கமான கதையாம் இது.

பெற்ற தாய்

பிரகாஷ் புரொடக்ஷன்ஸார் அவர்களது சொந்த ஸ்டுடியோவில் படமாகி வருகிறது. பிரகாஷ் ராவ் டைரெக்ஷனில் உருப்பெற்று வரும் இப்படத்தில் எம். என். நம்பியாரும், ஜி. வரலக்ஷ்மியும் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். இதே படம் "கன்னதல்லி" என்ற பெயரில் தெலுங்குப் படமாகவும் தயாராகிறது.

இண்டஸ்டிரி

மே, 1952

1. ஜூபிடரின் "ராணி" வெளி யூர்களில் திரையிடப் பட்டது.

பக்ஷிராஜாவின் "காஞ்சனா" பத் திரிகைக் காட்சி வெல்லிங்ட னில் நடைபெற்றது.

"காஞ்சனா" சென்னையில் இரு தியேட்டர்களிலும் வெளியூர்க ளிலும் திரையிடப் பட்டது.

ஜூபிடர்–பரிமளாவின் "அழகி" படத்தின் ஆரம்ப விழா, கோவை சென்ட்ரல் ஸ்டு டியோவில் நடைபெற்றது.

3. சென்னை மாகாண சினிமா தியேட்டர்காரர்கள் மகாநாடு, சென்னையில் நடைபெற்றது.

4. ஏழை மாணவர்கள் நிதிக்காக பொள்ளாச்சி குமாரி கமலா வின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது.

7. இந்திய பில்ம் சம்மேளனத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

8. இந்திய பில்ம் சம்மேளன நிர் வாக கமிட்டி அங்கத்தினர்கள், பத்திரிகாசிரியர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார்கள்.

10. எஸ். டி. சுந்தரமும் கோஷ்டி யினரும் அவரது "என் கதை" யை சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் நடித்தார்கள்.

11. மேனாடுகளுக்கு சென்று திரும் பிய ஜெமினி டெக்னீஷயன்க ளுக்கு, ஸினி டெக்னீஷயன்கள் சங்கத்தார்வரவேற்பளித்தனர்.

தி அருணா டிரமாடிஸ்ட்ஸ் அங் கத்தினர்கள் "வைராக்கியம்" என்ற நாடகத்தை நடித்தனர்.

14. சௌ. வி. லக்ஷ்மி, சௌ. வி. சுஜயா இருவரின் பரத நாட் டிய அரங்கேற்றம் சென்னை யில் நடைபெற்றது.

16. தணிக்கை போர்டு சென்னைப் பிராந்திய தலைவர் கே. ஸ்ரீனி வாசன், பத்திரிகைக்காரர்களை அழைத்து தணிக்கை போர்டு நடவடிக்கைகளை விளக்கினார்.

17. ராயல சீமை பஞ்ச நிவாரண நிதிக்காக சென்னை கவர்னர் தலைமையில் "ஜீவ பூமி" நாட கம் நடைபெற்றது.

18. சுகுமார் கலா மந்திர் அங்கத்தி னர்களால் "நல்லவள்" என்ற நாடகம் நடிக்கப் பட்டது.

சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர் தங்களது சங்கத்தின் மூன்று வது-நான்காவது ஆண்டு விழாவை நடத்தினர்.

'ஸினி ஸர்வீஸஸ்' என்ற ஸ்தா பனம் ஆரம்பமாயிற்று.

23. வள்ளி புரொடக்ஷன்ஸ் "வேலைக்காரன்" தமிழ் நாட் டில் திரையிடப் பட்டது.

அசோகா பிக்சர்ஸ் "என் தங்கை" தணிக்கைக் காட்சி நடைபெற்றது.

28. மதுரை, சித்ரகலா ஸ்டுடியோ வில் ஜி. கோவிந்தன் அண்டு கம்பெனியாரின் புதுப்படத்தின் ஆரம்ப விழா நடைபெற்றது.

ஜயந்தி புரொடக்ஷன்ஸின் புதுப் பட ஆரம்ப விழா, வாஹினியில் நடந்தது.

31. அசோகா பிக்சர்ஸ் "என் தங்கை" பல நகரங்களில் திரை யிடப் பட்டது.

ரூ. 1000 ரொக்க இனும்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு கியாரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும் :

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 36, Godown St., Madras—1.


இந்தியாவின் தலைசிறந்த பட்டணம் பொடி
உழுது உழைத்து உலகிற்கே உணவளிக்கும் உழவர்கள்.
நெற்றிவேர்வை நிலத்தில் விழ பாடுபடும் பாட்டாளிகள்.
உடுக்க உடை உதவி உடல் காக்கும் நெசவாளர்கள்.
காட்டிலுள்ளவற்றையும் கடைத்தெருவிற்கு கொண்டுவரும்
வர்த்தகர்கள்... கவலையைப் போக்கவல்ல கவிதை இயற்றும்
கவிஞர்கள்... பாரபட்சமின்றி வரைந்து தள்ளும்
பத்திரிகாசிரியர்கள்...சமயமறிந்து சட்டம் பேசும் சட்டநிபுணர்கள்.
நியாயம் நிலைத்து நிற்க நீதி வழங்கும் நீதிபதிகள்..
கடல் கடத்தி கரை சேர்க்கும் கப்பலோட்டிகள்..
தூரப்பிரதேசங்களுக்கு துரிதமாக கொண்டு சேர்க்கும்
விமானிகள்......நாட்டினை பாது
காக்கும் போர்வீரர்கள்....
மற்றும் ஏனையோர்களுக்கும் மேன்மேலும்
ஊக்கம் தருவதும் உற்சாகமூட்டுவதும் உயர்தர
REGISTERED TRADE MARK
T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால் பெட்டி 1151, வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

விஜயாவின்
கல்யாணம் பண்ணிப்பார்
டைரக்‌ஷன்... ப்ரசாத் * தயாரிப்பு... நாகிரெட்டி, சக்ரபா